


பாவை பதிப்பகம்
37-A, வடக்காவணி மூல வீதி,
மதுரை - 1. செல்: 9585243722


# தமிழ்த்தேர்

(உரைநடை)


தொகுப்பாசிரியர்
முனைவர் மு. கருப்புசாமி



பாவை பதிப்பகம், மதுரை



Scanned with CamScanner

## பொருளடக்கம்

1. பழங்காலத்து அணிகலன்கள்........................................ 7
- *மயிலை சீனி வேங்கடசாமி*

2. செம்மொழி இலக்கியத்தின் பாடுபொருள் சிறப்புகள்........... 18
- *முனைவர் பாக்யமேரி*

3. உழவு : இயற்கை........................................ 34
- *மாத்தளை சோமு*

4. ஊரும் பேரும் : குடி........................................ 50
- *ரா.பி. சேதுப்பிள்ளை*

5. வேளாண்மை வழக்காறுகள் : மழை ................................ 63
- *முனைவர் சி.மா.இரவிச்சந்திரன்*

6. இந்தியாவில் வேளாண்மை நாசமானது யாரால், எப்படி?..... 73
- *நம்மாழ்வார்*

7. பாரதிதாசன் கூறும் பெண்ணடிமைக்கான காரணங்களும் தீர்வுகளும்........................................ 87
- *முனைவர் சரளா இராசகோபாலன்*

8. கலைச்சொல்லாக்கம்........................................ 100
- *இராதா செல்லப்பன்*

9. தமிழ் வளர்ச்சியில் வலைப்பூக்கள்.................................... 115
- *முனைவர் துரை. மணிகண்டன்*

10. நல்ல தமிழில் எழுதுவோம்........................................ 121
- *முனைவர் தமிழண்ணல்*

Scanned with CamScanner

1

# பழங்காலத்து அணிகலன்கள்

- மயிலை சீனி வேங்கடசாமி

நமது பாரதநாட்டிலே, பண்டைக் காலத்திலே, ஆண்களும் பெண்களும் நகைகளை அதிகமாக அணிந்திருந்தார்கள். அதிலும் சிறப்பாகத் தமிழ்நாட்டு மக்கள் பலவிதமான நகைகளை அதிகமாக அணிந்தனர். அக்காலத்திலே ஆண்களும் பெண்களும் ஆடைகளைக் குறைவாகவும், நகைகளை அதிகமாகவும் அணிந்தார்கள். நகைகளை எவ்வளவு அதிகமாக அணிகிறார்களோ அவ்வளவு நாகரிகமும் செல்வமும் உள்ளவர்கள் என்று மதிக்கப்பட்டார்கள். இந்தக் காலத்தில் அதிகமான நகைகளை அணிகிறவர் அநாகரிகர் என்று கருதப்படுகின்றனர். அதிகமாக நாகரிகம் பரவாத கிராமங்களிலுங்கூட இக்காலத்தில் நகைகள் அணிவதைக் குறைத்துக் கொள்கிறார்கள்.

## வெற்றுடம்பு

பண்டைக்காலத்து மக்கள் நிரம்ப நகைகளை அணிந்ததற்கும், இந்தக் காலத்து மக்கள் மிகக் குறைவாக நகைகளை அணிவதற்கும் முக்கியக் காரணங்கள் உண்டு. முற்காலத்திலே ஆண்களும் பெண்களும் மிகக் குறைந்த அளவில்

Scanned with CamScanner

ஆடை அணிந்தார்கள்; ஆனால் அதிகமாக நகைகளை அணிந்தார்கள். அவர்கள் அரையில் மட்டும் ஆடையுடுத்தி அரைக்குமேல் வெற்றுடம்பாக இருந்தார்கள். இந்தக் காலத்தில் அரையின் கீழே வேட்டியுடுத்தி, உடம்புக்குப் பனியன் ஜிப்பா, கமிசு, ஷர்ட்டு, கோட்டு முதலிய ஆடைகளை அணிந்து உடம்பை மறைப்பது போல, அக்காலத்து ஆண்கள் உடம்பில் சட்டையணிவது வழக்கம் இல்லை. அரைக்கு மேலே வெற்றுடம்பாக இருந்தார்கள். இக்காலத்துப் பெண்கள் இரவிக்கை, ஜாக்கட், புடவைகள் அணிந்து உடம்பை மறைப்பது போல, அக்காலத்துப் பெண்கள் உடம்பை மறைக்கவில்லை. அவர்கள் அரையின்கீழே மட்டும் ஆடையணிந்து அரைக்கு மேலே வெற்றுடம்பாக இருந்தார்கள்.

இக்காலத்து ஆண்களும் பெண்களும் பருத்தித் துணிகளையும் பட்டாடைகளையும் கால்முதல் கழுத்து வரையில் அணிந்து உடம்பு முழுவதையும் மறைப்பதுபோல, அக்காலத்து ஆண்களும் பெண்களும் உடம்பு முழுவதும் ஆடையினால் மறைக்கவில்லை. செல்வந்தர்களும் பிரபுக்களும் அரசர்களுங்கூட வெற்றுடம்பினராக இருந்தார்கள். உடம்பில் சட்டை அணிவதை அநாகரிகமாக அக்காலத்தவர் கருதினார்கள். அரசர்களிடம் ஊழியம் செய்த உத்தியோகஸ்தர் மட்டும் அக்காலத்தில் சட்டை அணிந்தனர்; சட்டை அணிந்த உத்தியோகஸ்தனுக்குக் கஞ்சுகன் என்பது பெயர். சங்க காலத்திலே காஞ்சிபுரத்தில் இருந்து அரசாண்ட இளங்கிள்ளி என்னும் சோழ அரசனிடம் சட்டை அணிந்த கஞ்சுசர் உத்தியோகஸ்தராக இருந்ததை மணிமேகலை கூறுகிறது.

*"வையங் காவலன் தன்பாற் சென்று*
*கைதொழு திறைஞ்சிக் கஞ்சுகன் உரைப்போன்"*

என்று மணிமேகலை 28ஆம் காதை (177-178) கூறுகிறது.



சேரன் செங்குட்டுவனுடைய ஒற்றர் தலைவனாகிய நீலன் சட்டை அணிந்திருந்தான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

*"நீலன் முதலிய கஞ்சுக மாக்கள்"*

என்று சிலப்பதிகாரம், நடுகற் காதை (அடி 80) கூறுவதாகும்.

சாவகத் தீவின் அரசனான புண்ணியராசன், தரும சாவகன் என்னும் பௌத்த முனிவருடன் இருந்த மணிமேகலையைக் கண்டு இவள் யார் என்று கேட்டபோது, சட்டை அணிந்த அரசனுடைய உத்தியோகஸ்தன் அவள் யார் என்பதை அரசனுக்குக் கூறினான்.

*"இங்கிணை இல்லா இவள் யார் என்னக்*
*காவலற் றொழுது கஞ்சுகன் உரைப்போன்"*

என்று மணிமேகலைக் காவியம் 25 ஆம் காதை (அடி 10-11) கூறுவது காண்க.

தஞ்சாவூர்ப் பெருவுடையார் கோயிலிலே இருக்கிற சோழர் காலத்து ஓவியங்களில், அரசன் முதல் ஆண்டி வரையில், ஆண் பெண் உருவங்கள் காணப்படுகின்றன. இந்த உருவங்கள் எல்லாம் அரைக்கு மேலே வெற்றுடம்பாக உள்ளன. ஆனால், அந்த ஓவியங்களில் கஞ்சுகர் உருவங்கள் மட்டும் சட்டை அணிந்திருப்பதைக் காண்கிறோம். இதுபோன்று, விந்திய மலைக்குத் தெற்கிலுள்ள பெயர் பெற்ற அஜந்தா மலைக் குகைகளில் எழுதப்பட்ட ஓவியங்களிலும், கஞ்சுக மக்களைத் தவிர ஏனைய அரசர் முதலிய எல்லாரும் அரைக்குமேலே ஆடையில்லாமல் காணப்படுகின்றனர். கோயில்களில் காணப்படுகிற பழைய சிற்ப உருவங்கள்கூட, அரைக்குக் கீழே ஆடையணிந்து மேற்பகுதி வெற்றுடம்பாக இருப்பதைக் காண்கிறோம். இந்த ஓவியங்களும் சிற்பங்களும் அக்காலத்து மக்கள் ஆடையணிந்த முறையை நன்றாகத் தெரிவிக்கின்றன.

Scanned with CamScanner

## மேலாடை

நமது நாட்டுப் பெண்மகளிர் இரவிக்கையினாலும் புடவையினாலும் உடம்பின் மேல்பகுதியை மறைக்கத் தொடங்கியது, ஐரோப்பியரும் முஸ்லிம்களும் நமது நாட்டுக்கு வந்த பிறகுதான். ஏறக்குறைய 400, 500 ஆண்டுகளாகத்தான் நமது நாட்டுப் பெண்கள் மேலாடை அணிந்து வருகின்றனர். பெண்கள் மேலாடை அணியத் தொடங்கிய காலத்தில், உயர்ந்த சாதிப் பெண்கள் மட்டும் மேலாடை அணியலாம் என்றும், தாழ்த்தப்பட்ட சாதிப் பெண்கள் மேலாடை அணியக்கூடாது என்று கட்டுப்படுத்தினார்கள் 'மேல் சாதிக்காரர்கள். இதன் காரணமாக "மார்ச்சீலைக் கலகம்" என்னும் கலகமும் சண்டையும் அக்காலத்தில் திருவாங்கூரில் நிகழ்ந்ததை வரலாறு கூறுகிறது.

நமது நாட்டிலே ஆடவரும் பெண்டிரும் மேலாடை அணியாமல் வெற்றுடம்பினராக இருந்த காலத்திலே, அவர்கள் உடம்பு முழுவதும் பலவிதமான நகைகளை அணிந்தார்கள. முக்கியமாக, அக்காலத்துப் பெண்கள் தலைமுதல் கால் வரையில் உடம்பு முழுவதும் நகைகளை அணிந்து 'பொன் காய்த்த மரம்' போலக் காணப்பட்டனர். பண்டைக்காலத்து மக்கள் வெற்றுடம்பினராக இருந்த காரணத்தினாலே, நகைகளை அதிகமாக அணிந்தார்கள் என்னும் காரணம் ஒரு புறம் இருக்க, அவர்கள் அதிகமாக நகைகளை அணிந்ததற்கு மற்றொரு காரணமும் உண்டு. பொன்னையும் பொருளையும் நம்பிக்கையுடன் பாதுகாத்து வைக்கும் வங்கி (பாங்கி – ) என்னும் சேமிப்பு நிலையங்கள் அக்காலத்தில் இல்லாதபடியினாலே, அவர்கள் தாங்கள் ஈட்டிய பொருள்களைப் பொன்னாலும், வெள்ளியாலும், முத்து, மாணிக்கம் முதலிய நவரத்தினங்களினாலும் நகைகளைச் செய்து உடம்பிலே அழகாக அணிந்து கொண்டார்கள். நம்பிக்கையான சேமிப்பு நிலையங்கள் இருக்கிறபடியாலும், கால் முதல் கழுத்து வரையில் பட்டும் பருத்தியும் உடுத்தும் வழக்கம் ஏற்பட்டுவிட்ட படியாலும், அதிகமாக நகைகளை அணிகிற வழக்கம் இப்போது இல்லை.



## வளையல்

பண்டைக் காலத்தில் பெண்மணிகள் அணிந்த நகைகளைப் பற்றிக் கூறுவோம். நகைகளைப் பற்றிப் பேசும்போது, முதன்முதலில் கையணியாகிய வளைகளைப் பற்றிக் கூற வேண்டும். பண்டைக் காலத்தைப் போலவே இக்காலத்திலும் கைகளில் வளை அணிகிறார்கள். இக்காலத்தில் பொன் காப்பு, தங்க வளைகள், கண்ணாடி வளைகள் அணிகிறார்கள். கண்ணாடி வளைகளை அணிவது, முகம்மதியர் நமது நாட்டுக்கு வந்தபிறகு, சுமார் 500 ஆண்டுகளாக ஏற்பட்ட வழக்கம். பொன் காப்பு அணியும் வழக்கம் நெடுங்காலமாக இருக்கிறது. ஆனால், பழைய காலத்தில் பெண்மணிகள் கைகளில் சங்கு வளைகளை அணிந்தார்கள். வளை என்றாலே சடங்கு என்று அர்த்தம். சங்கை வட்ட வடிவமாக அறுத்துச் செய்யப்பட்ட சங்கு வளைகளைப் பண்டைக் காலத்துப் பெண்மணிகள் அணிந்தார்கள்.

தமிழ்நாட்டில் மட்டும் அன்று; பாரதநாடு முழுவதிலும் பெண்மணிகள் சங்கு வளைகளை அணிந்த வழக்கம் முற்காலத்தில் இருந்தது. ஏழை மக்கள் சாதாரண இடம்புரிச் சங்கு வளைகளை அணிந்து கொண்டார்கள். செல்வம் உள்ளவர்கள் பூ வேலைகளும் கொடி வேலைகளும் செய்யப்பட்ட பலவித வர்ணங்கள் அமைந்த சங்கு வளைகளை அணிந்து கொண்டார்கள். பிரபுக்கள் குடும்பத்தையும் அரச குடும்பத்தையும் சேர்ந்த பெண்மணிள் வலம்புரிச் சங்கு வளைகளை அணிந்தார்கள். இடம்புரிச் சங்கு வளைகளைவிட வலம்புரிச் சங்கு வளைகள் விலையுயர்ந்தவை.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் அரசி, தன்னுடைய கைகளில் பொன் வளைகளையும் வலம்புரி சங்கு வளைகளையும் அணிந்திருந்தாள் என்று நெடுநல்வாடை கூறுகிறது.

Scanned with CamScanner

*"பொலந்தொடி நின்ற மயிர்வார் முன்கை*
*வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து"*

என்பது அது. (நெடுநல். அடி. 141-142)

அரசர் முதல் *ஆண்டி வரையில் எல்லாப் பெண்மணிளும் அக்காலத்தில் சங்கு வளைகளைத்தான் அணிந்து கொண்டார்கள். கைம்பெண்கள் தமது கைகளில் அணிந்த சங்கு வளைகளை உடைத்துவிடுவர். கோவலன் மனைவி கண்ணகியார், தமது கணவன் இறந்தபிறகு தமது கைகளில் அணிந்திருந்த சங்கு வளைகளை உடைத்தெறிந்தார் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

அக்காலத்தில் பெண்கள் எல்லோரும் சங்கு வளை அணியும் வழக்கம் இருந்தபடியினாலே கொற்கை, குமரி முதலிய இடங்களில் சங்கு குளிக்கும் தொழிலும், சங்கை அறுத்து வளை செய்யும் தொழிலும் பெருவாரியாக நிகழ்ந்தன. அக்காலத்தில் சங்குத் தொழில் முக்கியக் கைத்தொழிலாகவும், வாணிபப் பொருளாகவும் இருந்தது. காதுகளில் அணியும் குழையும், கைகளில் அணியும் மோதிரமும் கூடப் பண்டைக் காலத்தில் சங்கினால் செய்யப்பட்டன. பிற்காலத்தில், சங்குவளை அணிகிற பழக்கம் மறைந்துவிட்டபோது, சங்குத் தொழிலும் சங்கு வளை வாணிபமும் அடியோடு மறைந்துவிட்டன. சங்குவளை மறைந்து போனாலும், இக்காலத்தில் தங்க வளைகள் வழக்கத்தில் இருந்து வருகின்றன.

**காதணி**

முற்காலத்தில் பெரு வழக்கமாக இருந்து இக்காலத்தில் மறைந்து கொண்டிருக்கிற பழைய நகை பாம்படம் என்பது; அது காதுக்கு அணிகிற கனமுள்ள பொன் நகையாகும். காதைக் குத்தித் துளையாக்கி, அத்துளையைக் கடிப்பு எனும் கனமான பொருளினால் பெரிய துளையாக வளரச் செய்து, நீண்டு தொங்கும் காதிலே பெண்கள் குண்டலம், குழை, தோடு, பாம்படம் முதலிய நகைகளைப்



பெண்மணிகள் அணிந்தார்கள். நீண்டு தொங்கும் காதிலே பெண்கள் பாம்படம் அணிந்தால், அது தோள் வரையில் தாழ்ந்து தொங்கும். ஆண் குழந்தையானாலும் பெண் குழந்தையானாலும் 5 வயது ஆனவுடன், மயிர் களைந்து காது குத்துவது வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சியாக இருந்தது. நீள்செவி வளர்க்கும் வழக்கம் ஒரு காலத்தில் தமிழ்நாட்டில் இருந்தது. கி.பி. 8 ஆம் நூற்றாண்டில், பாண்டி நாட்டில் இருந்த பெரியாழ்வார் என்னும் வைணவ பக்தர் தமது பாசுரத்திலே, "கடிப்பு இட்டு வார் காது தாழப் பெருக்கி" நீள்செவி வளர்த்த வழக்கத்தைக் குறிப்பிடுகிறார். தாழப் பெருக்கிய நீள் செவிகள் இக்காலத்தில் மறைந்து வருகின்றன. ஆனால், பாண்டிநாட்டிலே தாழப்பெருக்கிய நீள் செவிகள் ஓரளவு இப்போதும் காணப்படுகின்றன.

பாம்படம் தவிர ஓலை என்னும் அணியையும் காதில் அணிந்தனர். பனை ஓலையைச் சுருட்டி அணிவதனால் ஓலை என்று பெயர் பெற்றது. செல்வர்கள் ஓலையைப் பொன்னால் செய்து அணிந்தார்கள். வயிரக் கற்கள் அழுத்திச் செய்யப்பட்ட வயிர ஓலைக்குச் 'சந்திரபாணி' என்னும் பெயர் வழங்கியது. கம்மல், வயிரத்தோடு முதலியவைகளும் பிற்காலத்தில் உருவாயின.

காதிலே அணியப்பட்ட மற்றொரு நகை குதம்பை என்பது. பருத்த நீலமணியுடன் வைரக்கற்களைப் பதித்துச் செய்யப்படுவது இது. கர்ணப்பூ என்றும், செவிப்பூ என்றும் பெயருள்ள இன்னொரு வகையான காதணியையும் அக்காலத்துப் பெண்கள் அணிந்தனர்.

**தலை**

இனி, பெண்மணிகள் தலைக்கு அணிந்த அணிகலன்களைப் பார்ப்போம். சீதேவியார், வலம்புரி, தென்பல்லி, வடபல்லி என்னும் நகைகளை தலையில் அணியப்பட்டன. சீதேவியார் என்பது சூளாமணி. இதற்கு இரத்தினச் சுட்டி, ஜடைப்பில்லை என்றும் பெயர் உண்டு. தென்பல்லி, வடபல்லி

Scanned with CamScanner

என்பவை. பல்லியின் உருவமாகச் செய்யப்பட்ட நகைகள். இவை தலையில் இடப்புறத்திலும் வலப்புறத்திலும் அணியப்பட்டன. தொய்யகம், வாகுசுட்டி என்னும் நகைகள் நவரத்தினங்களால் செய்யப்பட்டவை. இவை தலையின் நடுவில் மயிரின் பிரிவில் அணியப்பட்டன.

**மூக்கு**

மூக்குக்கு அணிந்த மூக்குத்தி, புல்லாக்கு என்னும் நகைகளைப் பற்றிப் பழைய நூல்களில் காணப்படவில்லை. இந்த நகைகள் அணிவது பிற்காலத்திலே வடநாட்டவர் தொடர்பினால் ஏற்பட்ட வழக்கம்.

**கழுத்து**

பெண்மணிகள் கழுத்துக்கும் பலவகையான அணிகளை அணிந்தார்கள். அவற்றில், வீரசங்கிலி என்பது சங்கிலிபோலப் பொன்னால் செய்யப்பட்டது. சரடு அல்லது ஞாண் என்பது கயிறு போலப் பொன்னால் செய்யப்பட்டது. பொன்னரி மாலை என்பது பொன்னாலும் இரத்தினங்களாலும் செய்யப்பட்ட அழகான ஆபரணம். முத்துமாலை, பவழமாலைகளும் கழுத்துக்கு அணியப்பட்டன. காசுமாலை என்பது பிற்காலத்தில் உண்டானது. இது பொற்காசுகளையும் பவுன்களையும் சேர்த்து அமைக்கப்பட்டது. அட்டிகை என்னும் நகையும் கழுத்துக்கு அணியப்பட்டது. இது இரத்தினம், வைரம், முத்து முதலியவை பதிக்கப்பட்ட அணி. இதுவும் பிற்காலத்தில் தோன்றிய நகையாகும்.

**மேகலை**

மேகலை என்பது, பெண்மணிகள் அரையில் உடுத்த ஆடையின் மேல் அணியும் ஆபரணம். இது 32 முத்து வடங்களினால் பட்டையாக அமைக்கப்பட்ட அழகான அணிகலன்.



பிற்காலத்தில் இது தங்கத்தினாலும் வெள்ளியினாலும் செய்யப்பட்டு ஒட்டியாணம் என்னும் பெயர் பெற்றது. காவிரிப்பூம்பட்டினத்தில் பெயர் பெற்ற நாட்டிய மடந்தையாகிய மாதவி, அரையில் நீலப்பட்டாடை உடுத்தி, அதன்மேல் முப்பத்திரண்டு முத்து வடத்தினால் செய்யப்பட்ட மேகலையை அணிந்தாள் என்று சிலப்பதிகாரக் காவியம் கூறுகிறது.

*"பிறங்கிய முத்தரை முப்பத் திருகாழ்*
*திற்றிகழ் பூந்துகில் நீர்மையின் உடீஇ"*

(சிலம்பு, கடலாடு காதை, அடி 87-88)

"பருமுத்தக் கோவை முப்பத்திரண்டாற் செய்த விரிசிகை என்னும் கலையை நீலநிறங் கிளரும் பூந்தொழிலையுடைய நீலச்சாதருடையின்மீதே உடுத்தென்க"

- அடியார்க்கு நல்லார் உரை.

**சிலம்பு**

பெண்கள் காலில் அணிந்த காலணிகளில் முக்கியமானது சிலம்பு. இதற்குக் குடைச்சூல் என்றும் நூபுரம் என்றும் பெயர் உண்டு. இதன் உள்ளே பரற்கற்கள் இடப்பட்டிருந்ததால், காலில் அணிந்து நடக்கும்போது ஓசையுண்டாகும். இது சாதாரணமாக வெள்ளியினால் செய்யப்பட்டது. செல்வந்தர்களும் அரசர்களும் சிலம்பை பொன்னால் செய்து, அதனுள்ளே மாணிக்கத்தையும் முத்தையும் பரற்கற்களாக இடுவார்கள். பாண்டியன் இராணியாகிய பாண்டிமாதேவியின் காற்சிலம்பில் முத்துக்கள் பரற்கற்களாக இடப்பட்டிருந்தன என்றும், கோவலன் மனைவி கண்ணகியாரின் காற்சிலம்பில் மாணிக்கக் கற்கள் பரற்கற்களாக இடப்பட்டிருந்தன என்றும் சிலப்பதிகாரம் கூறுகிறது. பண்டைக் காலத்தில் பெண்களுக்குத் திருமணம் ஆனவுடனே சிலம்பு கழி நோன்பு என்னும் ஒரு சடங்கு நடைபெற்றது. சிலம்பு அணிகிற வழக்கம் மறைந்துபோன இந்தக் காலத்திலும் இருந்து வருகிறது. திருமணம் ஆனவுடனே மணமகனும்

Scanned with CamScanner

மணமகளும் முதன்முதலில் வீட்டுக்கு வரும்போது, அவர்களை வீட்டு வாயிலில் நிறுத்தி ஆலத்தி சுற்றி, நீரை மணமகள் காலில் ஊற்றுகிற வழக்கம் இன்றும் இருந்து வருகிறது. இது, பழைய "சிலம்பு கழி நோன்பை'க் குறிக்கிறது போலும்.

பாடகம் என்னும் காலணி, சிலம்புக்கு மேலே அணியப்பட்டது. இதுவும் இப்போது வழக்கிழந்துவிட்டது. சதங்கை என்பது காலுக்கு அணியும் ஆபரணம். சலங்கை என்றும் கிண்கிணி என்றும் இதற்குப் பெயர் உண்டு.

குறங்கு செறி என்பது பெண்கள் காலுக்கு மேலே தொடையில் அணிந்துகொண்ட ஆபரணம். இக்காலத்திலே இது வழக்கத்தில் இல்லை. கடகம் என்பது மேல்கையில் அணிவது. இது மாணிக்கம் முதலிய கற்கள் பதித்துப் பொன்னால் செய்யப்படுவது. இதனை ஆடவரும் அணிந்தனர்.

**மோதிரம்**

கைவிரல்களுக்கும் கால்விரல்களுக்கும் மோதிரங்கள் அணியப்பட்டன. காலாழி, கால் பெருவிரலில் அணியப்பட்டது. மகரவாய் மோதிரம் என்பது கால் நடுவிரலில் அணியப்பட்டது. பீலி என்பது கால்விரலில் அணியப்பட்ட மோதிரம்.

கையில் சுண்டுவிரலுக்கு அடுத்த விரலில் அணியப்பட்ட மோதிரத்துக்குப் பகுவாய் மோதிரம் என்பது பெயர். மகர மீன் (வாளை மீன்) வாய் திறந்து அங்காந்திருப்பது போலச் செய்யப் பட்டிருக்கும். இதற்கு நெறி என்றும் பெயர் உண்டு. மணி மோதிரம் என்பது நடுவிரலில் அணியப்படுவது இதில் மாணிக்கக் கல் பதித்திருக்கும். ஆள்காட்டி விரல் என்னும் சுட்டுவிரலில் அணியப்படுவது மரகத மோதிரம்; இதற்கு மரகத மோதிரம், வட்டப்பூ என்றும் பெயர் உண்டு.



இதன் நடுவில் பெரிய மரகதக் கல்லும் (பச்சைக் கல்). அதைச் சுற்றிலும் சிறு வைரக் கற்களும் பதித்திருக்கும். இக்காலத்திலே வெவ்வேறு வகையான மோதிரங்கள் கைவிரல்களில் அணியப்படுகின்றன.

ஏனாதி மோதிரம் என்னும் ஒருவகை மோதிரம் பண்டைக் காலத்தில் இருந்தது. ஏனாதி மோதிரத்தை எல்லோரும் அணிய முடியாது. சேனைத் தலைவர்களில் 'ஏனாதி' என்னும் பட்டம் பெற்றவர்கள் மாத்திரம் இந்த மோதிரத்தை அணிந்தார்கள். சேர சோழ பாண்டிய அரசர்கள் தமது சேனைத் தலைவரைப் பாராட்டி ஏனாதிப் பட்டம் அளிக்கும்போது, 'ஏனாதி மோதிரத்தை' அவர்கள் கை விரலில் அணிவிப்பார்கள். ஆகவே, ஏனாதி மோதிரம் சேனைத் தலைவருக்கு மட்டுந்தான் உரியதாக இருந்தது.

சைவ, வைணவக் கோயில்களிலே பலவகையான தெய்வ உருவங்களும் மனித உருவங்களும் கல்லிலும் செம்பிலும் செய்து வைக்கப்பட்டுள்ளன. அந்த உருவங்களை ஊன்றிப் பார்ப்போமானால், அச்சிற்ப உருவங்கள் செய்யப்பட்ட காலத்தில் ஆண்களும் பெண்களும் அணிந்த நகைகளையும் உடைகளையும் அவற்றில் காணலாம். பழைய ஓவியங்களிலும் இவற்றைக் காணலாம். கலைக் கூடங்களாக விளங்குகிற நமது கோயில்கள் இதுபோன்ற பல துறை ஆராய்ச்சிகளுக்குப் பயன்படுகின்றன. ஆனால் பொது மக்கள் இந்தச் சிற்ப உருவங்களை ஊன்றி ஆராய்ந்து பார்க்காமலிருப்பது வருந்துதற்குரியது. இனியேனும் சிற்ப உருவங்களை ஊன்றிப் பார்த்து ஆராய்வார்களாக.

- - -

Scanned with CamScanner

2

# செம்மொழி இலக்கியத்தின் பாடுபொருள் சிறப்புக்கள்

*- முனைவர் பாக்யமேரி*

## அ. இயற்கைப் புனைவு

### இலையாடையும் தழையாடையும்

பொதுவாக, நிலத்தினுள்ளிருந்து முளைக்கும் முளை வளர்ந்து பூமியின்மேல் தண்டுப்பகுதி வளர்ந்து மரம், செடி, கொடிகளாக வளரும். இவ்வாறு, நிலத்திலிருந்து தண்டு முளைத்து அதிலிருந்து கிளைகள் கிளைப்பது பொது இயல்பு. கிளைக்கும் இயல்புடையனவற்றில் தோன்றுவது இலை; இங்ஙனம் இன்றித் தண்டு, கிளைகள், இலைகள், பூக்கள், காய்கள் கனிகள் என எதுவும் தோன்றாது நேரடியாக நிலத்திலிருந்து தழைப்பனவற்றைத் தழை எனச் சங்கச் சான்றோர் குறித்தனர். தழை கொய்து (அரிந்து) எடுக்கப்படும்; இலை கைகளால் கிள்ளிப் பறிக்கப்படும்.



நிலத்திலிருந்துப் புறப்பட்ட அடிப்பாகத்தை அடுத்தடுத்து வைத்துச் சேர்த்துக் கட்டி இடையைச் சுற்றிக் கட்டிக்கொண்ட மறைப்பு வகையைத் தழையாடை எனப் பெயரிட்டுக் குறித்தனர். கிளைக்கும் வகைத் தாவரத்திலிருந்து பறித்த இலைகளைக் கொண்டு இயைத்துக் கட்டிய உடைக்கு இலையாடை எனப் பெயரிட்டனர்.

சங்கச் செவ்வியல் இலக்கியங்களில், பெண்கள் இலையாடையையும், தழையாடையையும் அணிந்திருந்தனர்; காதலன் தன் காதலிக்கு இவ் ஆடைகளைக் கையுறை (காதல் பரிசு) யாகத் தந்தான் எனக் குறிக்கின்றன.

மானிடவியல் வரலாற்றில் மனிதர் இலைகளையும், தழைகளையும் அணிந்து வாழ்ந்த காலத்தைக் கணக்கிட்டு நோக்கின், சங்க காலத்துத் தொன்மையும் அக்கால எல்லையிலேயே செவ்வியல் இலக்கியங்கள் மலர்ந்து மணம் பரப்பிய பான்மையினையும் நன்கு உணரலாம்.

### தழையாடையுடன் திங்கள் வழிபாடு

கொற்கைத் துறைமுகத்தின் கரையில் தழையாடை அணிந்திருந்த மகளிர் தொன்றுதொட்டுப் பழைமை வாய்ந்த குடியினைச் சேர்ந்தோராக இருந்தனர். எனவே, அவர்தமைப் பழையர் என்றே மாமூலனார் இனங்காட்டிச் சுட்டுகின்றார்.

பகலோன் மறைந்த பிறகு நிலவு உவா (முழு நிலா)க் கதிர்களை விரித்தது. அப்பொழுது, தழையாடைப் பழையர் மகளிர், முத்துக்களையும் வலம்புரிச் சங்கங்களையும் கடலில் சொரிந்து உவா நிலவினைக் கைதொழுது பரவினர். இவ் அழகிய நிகழ்வினை,

Scanned with CamScanner

*புகழ்மலி சிறப்பின் கொற்கை முன்றில்*
*அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து*
*தழையணிப் பொலிந்த கோடேந்து அல்குல்*
*பழையர் மகளிர் பனித்துறைப் பரவப்*
*பகலோன் மறைந்த அந்தி ஆரிடை*
*உருகெழு பெருங்கடல் உவவுக் கிளர்ந்து*

என்று அகநானூறு (201) அழகுறக் காட்சிப்படுத்துகின்றது.

இலையாடை, தழையாடை அணிந்திருந்த நம் சங்கத்து முன்னோர் வெறும் காட்டுவாசிகளாகவோ, காட்டு மிராண்டிகளாகவோ நாகரிகமற்று வாழ்ந்திருக்கவில்லை. இலை, தழையாடை அணிந்திருந்த காலத்திலேயே செவ்விய முறையில் வழிபாடு நிகழ்த்தத் தெரிந்திருந்தனர்; முத்துக் குளித்து, முத்துக்களைச் சேர்த்து வைக்கத் தெரிந்திருந்தனர்; அம்முத்துக்கள் ஒளிவிடக்கூடிய அளவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முத்துக்களாகப் பார்த்து முத்துக் குளிக்க வல்லோராக இருந்தனர்.

பல இலட்சம் சங்குகளுக்கு நடுவில் ஒரு சலஞ்சலம் கிடைக்கும்; பல இலட்சம் சலஞ்சலங்களுக்கு நடுவில் ஒரு வலம்புரி எய்தும்; பல இலட்சம் சலஞ்சலங்களுக்கு நடுவில் ஒரு பாஞ்ச சன்னியம் கிடைக்கும் என்பர். இவ்வாறு, பாஞ்ச சன்னியத்தின் சிறப்பினைக் கருதியே இதனைத் திருமாலின் கையில் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

முத்துக்களில் தேர்ந்த முத்துக்களைத் தெரிந்திருந்ததைப் போலவே, சங்குகளிலும் வலம்புரிச் சங்குகளின் அருமையை அப் பழையர் மகளிர் அணிந்திருந்தனர். இயற்கை வழிபாட்டினையும், குறிப்பாக நிலவு வழிபாட்டினை அவர்கள் பெரிதும் போற்றிய காரணத்தினால்தான் முத்துக்களையும் வலம்புரிகளையும் சொரிந்து உவாக் கதிர் பரப்பிய நிலவினைத் தழையாட மகளிர் தொழுதனர்.



இதன்மூலம், இலையாடை, தழையாடைக் காலத்திலேயே சங்கச் சான்றோர் செவ்வியன்மை மிக்கிருந்த பான்மையினை நன்குணரலாம்.

**ஞாயிறு வழிபாடு**

ஞாயிறு, திங்கள், தீச்சுடர் ஆகிய இயற்கையின் கூறுகளை மதித்து நம் முன்னோர் வழிபட்டமையினை,

*கொடிநிலை கந்தழி வள்ளி என்ற*
*வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்*
*கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே*

எனப் பாடாண்திணையில் (பொருள்: 85) தொல்காப்பியர் சுட்டியுள்ளார். இதனுள்,

| | | |
|---|---|---|
| கொடிநிலை | > | ஞாயிறு |
| கந்தழி | > | திங்கள் தீச்சுடர் |
| வள்ளி | > | தீச்சுடர் |

என இயையும் என்பதனை டாக்டர் க.காந்தி அவர்கள் (தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் ப.261) எனத் தெளிவுறுத்துகின்றார்.

பழந்தமிழர் நாள்தோறும் காலையில் ஞாயிற்றை வழிபட்டனர். அகநானூறு (263) இதனை,

*தயங்குதிரைப்பெருங்கடல் உலகுதொழத் தோன்றி*
*வயங்குகதிர் விரிந்த உருகெழு மண்டிலம்*

எனக் குறித்துள்ளது. நற்றிணையிலும் (283)

*முந்நீர் மீமிசைப் பலர்தொழத் தோன்றி*
*ஏமுற விளங்கிய சுடர்*

என இதே கருத்தினைக் காணலாம்.

Scanned with CamScanner

## ஆ. கற்பனைத் திறன்

### கற்பனை - உணர்ச்சி - கவிதையாக்கம்

சங்கக் கவிதைகளில் 'கற்பனை' மிகத் திறம்பட எடுத்தியம்பப் பட்டுள்ளன. நினைவிற்கும் கற்பனைக்கும் இடையே வேறுபாடு உண்டு.

நினைவு என்பது, நடப்பதையும் படிப்பு முதலானவை தொடர்பாகச் சேமித்து வைக்கும் மனத்தின் ஆற்றலைக் காத்துத் தருவதும்; தேவையானபொழுது உடனடியாக மீண்டும் நினைவுத் தளத்திற்குக் கொணர்ந்துத் தருவதும் நினைவின் வேலை.

பார்த்த பொருள், அல்லது பார்க்காத பொருள், இடம், நிகழ்வுகள் எதுவாயினும் அது பற்றி மனத்தால் சிந்தித்துத், தானே அவற்றை வளர்த்தெடுத்துச் செல்லக் கூடிய ஆற்றல் கற்பனை எனப்படும். மனத்தில் கற்பனை நிகழும்பொழுது ஒருவித உணர்ச்சி ஏற்படுகின்றது. எனவே, கற்பனைக்கும் உணர்ச்சிக்கும் தொடர்பு உண்டு என்பதனைத் தெரிந்து கொள்ளலாம்.

கற்பனை, உணர்ச்சி இவை சேரும்பொழுது மனத்தில் காட்சி தோன்றுகின்றது. தன் மனத்தில் உணரும் காட்சிகளைக் கவிதையாக மாற்ற முனையும்பொழுது அங்குக் கவிதையாக்கம் நிகழ்கின்றது.

இளமையைக் கருதாமல் வளமையை மட்டும் எண்ணிப் பொருள்தேடச் சென்ற தலைவர் எங்கு இருக்கின்றார் எனத் தெரியவில்லை; கார்காலம் தொடங்கியவுடன் வருவேன் எனக் கூறிச் சென்ற தலைவனின் இருப்பிடம்கூடத் தெரியாமல் இருக்கும் நிலை பார்த்துக் கார்காலத்திற்குச் சாட்சியாகப் பூத்திருக்கும் முல்லை மலர்கள் தலைவியைப் பார்த்து நகைக்கின்றன. இதனை,



*இளமை பாரார் வளம்நசைஇச் சென்றார்*
*இவணும் வாரார் எவண் அரோஎனப்*
*பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லை*
*தொகுமுகை இலங்கு எயிறாக*
*நகுமே தோழி நறுந்தண் காரே*

என்னும் குறுந்தொகைப் பாடல் (126) குறிக்கின்றது.

முல்லைப் பூவைப் பார்த்த கவிஞருக்குத் தன் கற்பனை வேலை செய்யத் தொடங்குகின்றது. முல்லை பூக்கும் காலம் நினைவில் வருகின்றது. இவ்வளவில் நினைவின் வேலை முடிந்து, கற்பனை தொடங்குகின்றது. கற்பனை தொடங்கியவுடன் உணர்ச்சியும் உடன் இயைகின்றது.

தன்னை ஒரு தலைவியாகவும், தன் தலைவன் பிரிந்து சென்றுள்ளதாகவும்; அவன் கார்காலம் தொடங்கியவுடன் வருவேன் என்று சொன்னதாகவும்; கற்பனை செய்து கொள்கின்றான்.

கார்காலம் தொடங்கியும் தலைவன் வாராமையினால் தனக்கு அது வெட்கமாக இருப்பதாகவும் கற்பனை செய்து கொள்கின்றான். அக்கார்காலமே தன்னைப் பார்த்து நகையாடுவதாகவும் எண்ணுகின்றான்.

இந்த அளவில் கற்பனை முற்றுப் பெறுகின்றது. இதுவரை உணர்ச்சி வயப்பட்டுக் கற்பனை உலகு சென்று திளைத்த அவன் தன்பாலுள்ள ஆக்கல் ஆற்றலால் இக்கற்பனையைக் கொண்டு ஆக்கிய கவிதையே இது.

உலகியல்படி நாள்தோறும் ஓடியோடி உழைத்துக் களைத்து ஓய்ந்து போயிருக்கும் மக்கள் மனத்தில் வெம்மையும் வெறுமையும் மெல்ல மெல்லக் குடிகொள்ளத் தொடங்கும். அப்பொழுது கற்பனை

Scanned with CamScanner

நயம் கலந்த இனிய பாடல், திரைப்படம், நாடகம், இவற்றிற்கெல்லாம் மேலாக சங்கச் செவ்வியல் இலக்கியங்கள் என்பனவற்றைச் சுவைக்கும் பொழுது மனத்தில் உள்ள சுமை குறைந்து, மனம் எளிதாகின்றது.

கவலை இன்றிப் பறந்துத் திரியும் சிட்டுக்குருவி எனது பலகணியின் வழியே வரின், நான் என்னை மறந்து சிட்டாகவே மாறிவிடுகின்றேன். மேலும் சிறு பரற்கற்களையும் கொத்தத் தொடங்கிவிடுகின்றேன் என்று கீட்ஸ் என்னும் கவிஞர் கூற்று ஈண்டு நினைக்கத்தக்கது.

## இ. நடப்பியல்

**உழவியலும் உளவியலும்**

நெல்லின் தன்மையைக் கூறும் உழவியலுடன், அதனை உவமையாக்கிச் சமுதாய மக்களின் இயற்கை உணர்த்தும் உளவியலையும் தமிழ்ச் செவ்வியல் நூல்கள் வழிக் கண்டுணர இயலுகின்றது.

செந்நெல் முளையில் இருந்து மற்றொரு செந்நெல்தான் முளைக்கும்; நல்ல பண்புகளை மகன் கொண்டிருக்கின்றான் என்றால், அவனது தந்தை நல்ல பண்புகளின் உறைவிடம் என்பதனைக் கண்டு கொள்ள வேண்டும். இந்நடப்பியல் உண்மையை நாலடியார் (367)

*செந்நெல்லால் ஆய செழுமுளை மற்றும்அச்*
*செந்நெல்லே ஆகி விளைதலால் - அந்நெல்*
*வயல்நிறையக் காய்க்கும் வளைவயல் ஊர!*
*மகன்அறிவு தந்தை அறிவு*

நயம்பட நவில்கின்றது.



**ஐம்பூதங்களால் ஆய உலகம்**

இவ் உலகம் மண், புனல், கனல், கால் (காற்று), ஆகாயம் என்னும் ஐந்தும் இணைந்தக் கட்டமைப்பு என்பதனைக் கண்டறிந்தனர். இதனை,

*மண் திணிந்த நிலனும்*
*நிலன் ஏந்திய விசும்பும்*
*விசும்பு தைவரு வளியும்*
*வளித் தலைஇய தீயும்*
*தீமுரணிய நீரும் என்றாங்கு*
*ஐம்பெரு பூதத்து இயற்கை*

எனப் புறநானூற்றில் (2) முரஞ்சியூர் முடிநாகராயர் முன்னுரைக்கின்றார்.

**தமிழர் வாழ்வியலில் தாவரவியல்**

மக்கள் வாழ்க்கைக் கூறுகளைக் குறிப்பிடும் பொழுது பொதுவாக, விதையிலிருந்து முளை, தளிர்கள் உள்ளிட்டு மரம் முடிய உள்ள நிலைகளை ஒப்பிட்டுக் கூறுவது சங்கச் செவ்வியல் இலக்கியங்களின் பண்பாக இருக்கின்றது. இதனை,

| | | |
|---|---|---|
| விதை | > | நல்ல பண்பு |
| முளை | > | உள்ளத்தில் ஊன்றல், தொடக்கம் |
| தளிர் | > | மழலைகள் (குலக் கொழுந்து) |
| மலர் | > | பெண் குழந்தைகள் |
| மலர்தல் | > | பெண்மை முதிர்வு |
| காய் (பிஞ்சு) | > | குழந்தைகள் |
| கனி | > | பலன், முதிர்ச்சி |
| முள் | > | குறைகள், வேண்டாதன, பரத்தை |
| கொடி | > | பெண் |
| மரம் | > | நல்லுணர்வு அற்றோர் |

எனச் ச.வே. சுப்பிரமணியன் அவர்கள் எடுத்துக் காட்டுகின்றார் (தமிழர் வாழ்வில் தாவரம், ப: 24)

Scanned with CamScanner

## ஈ. குறிக்கோளியல்

சங்கச் செவ்வியல் நூல்களான பத்துப்பாட்டின்கண் காணப்படும் ஆற்றுப்படை நூல்கள், தனக்கு மிஞ்சினதுதான் தானம் தருமம் என்னும் தன்னலப் போக்கினது சிறுமையினையும், வறுமையிலும் செம்மை என்னும் விழுமியத்தின் மேன்மையினையும் கட்டளைக் கல்லாக இருந்து காட்டுகின்றது. இதனை, ஆற்றுப்படையின் இலக்கணமாகப் பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇ என உரைக்கும் தொல்காப்பியமும் உறுதி செய்யும்.

பத்துப்பாட்டுள் செம்பாதி இலக்கியங்கள் ஆற்றுப்படை இலக்கியங்களாக உள்ளன. ஆறு = வழி; படை = படுத்துதல். ஆற்றுப்படுத்துதல் = பொருள் பெற்று மகிழ்ந்த ஒருவன், பெறாதவரும் பெற்று மகிழ வழி காட்டுதல் ஆற்றுப்படை. ஆற்றுப்படையின் இலக்கணத்தை,

*கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்*
*ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்*
*பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்*
*சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்*

எனத் தொல்காப்பியம் (புறத்திணை:36) சுட்டுகின்றது.

இப்படிக் கூத்தரையும் பாணரையும் பொருளுக்காக என உழைத்து அவர்தம் கலைத்திறனை வீணடிக்கவிடாமல், சங்க காலத்தில் புரவலர்கள் இருந்தனர். கலைஞர்களும், தமக்குக் கிடைத்ததைத் தாமே வைத்துக் கொள்ள வேண்டும் என நினைத்திலர். தமக்குக் கொடுக்கும் புரவலரைப் பிறருக்குச் சொல்லி



அறிமுகப்படுத்தி வைக்கக்கூடாது என எண்ணிலர். கலைஞர் எனின் கலைஞரே! அவர் கூத்தராக, பாணராக, பொருநராக, விறலியாக என யாராக இருந்தாலும் சரி, தான் புரவலனிடம் பெற்ற வளங்களையெல்லாம் எதிரில் பார்த்தோரிடம் காட்டி மகிழ்ந்தனர். தாம் எவ்வள்ளலிடம் பெற்று வந்தோம் எனத் தெளிவாகக் கூறி, வழியும் காட்டினர். 'நாங்களும் போகும்பொழுது உங்களைப் போல்தான் வறுமையாகவும், வெறுமையாகவும் வந்தோம்; இப்பொழுது எங்களைப் பாருங்கள். எவ்வளவு வளமாக உள்ளோம்! நீங்களும் அவரிடம் செல்லுங்கள். உதவி பெறுங்கள். உயருங்கள்' என ஆற்றுப்படுத்தினர். இத்தகு உயர்ந்த அற விழுமியங்களைக் கூறுவதால்தாம் சங்கநூல்கள், செவ்வியல் நூல்களாகச் சீர்மை பெற்றுச் சிறக்கின்றன.

### ஆற்றுப்படை நூல்களும் ஆசிரியர்களும்

| | | |
|---|---|---|
| 1. | திருமுருகாற்றுப்படை | நக்கீரர் |
| 2. | பொருநராற்றுப்படை | முடத்தாமக்கண்ணியார் |
| 3. | சிறுபாணாற்றுப்படை | நல்லூர் நத்தத்தனார் |
| 4. | பெரும்பாணாற்றுப்படை | கடியலூர் உருத்திரங்கண்ணனார் |
| 5. | மலைபடுகடாம் | பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் |

### அற வாழ்வியல்

நம் சங்கச் சான்றோர் வீரத்தையும் ஈரத்தையும் இரு கண்களாகப் போற்றினர். பதினென் கணக்கு நூல்களில் 10 நூல்கள் அறத்தை எடுத்தியம்புகின்றன. அற இலக்கியமாகக் கூறப்படும் ஆசாரக் கோவை என்னும் நூலினை எழுதிய பெருவாயில்

Scanned with CamScanner

முள்ளியார் ஆரியச் சார்பு மிக்கு. தமிழர்தம் தாழ்விற்கென்றே உருவாக்கிட்ட நூலாக அதனை இளங்காண இயலுகின்றது. ஏனைய 10 அற நூல்கள்:

பதினெண் கீழ்க்கணக்கின் ஏனைய 10 அற நூல்கள்:

1. நாலடியார் - சமண முனிவர்கள் (கி.பி.7)
2. நான்மணிக்கடிகை - விளம்பி நாகனார் (கி.பி.4)
3. இன்னா நாற்பது - கபிலர் (கி.பி.50 - 125)
4. இனியவை நாற்பது - பூதஞ்சேந்தனார் (கி.பி.5)
5. திருக்குறள் - திருவள்ளுவர் (கி.மு.30 - கி.பி.6)
6. திரிகடுகம் - நல்லாதனார் (கி.பி.5)
7. பழமொழி - முன்றுரையரையனார் (கி.பி.5)
8. சிறுபஞ்சமூலம் - காரியாசான் (கி.பி.5)
9. முதுமொழிக்காஞ்சி - மதுரைக் கூடலூர்க்கிழார் (கி.பி.5)
10. ஏலாதி - கணிமேதாவியார் (கி.பி.5)

**1. நாலடியார்**

நாலடியாலான பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் பல இருப்பினும் நாலடியார் மட்டும்தான் இப்பெயரால் வழங்கப்படுகின்றன. டாக்டர் ஜி.யூ.போப் அவர்கள் நாலடியாரை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். திருக்குறளுக்கு அடுத்தநிலையில் வைத்துப் போற்றப்பெறுகின்றது. ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி என்னும் பழமொழியே இந்நூல் பற்றிய சிறப்பினை உணர்த்தும்.



**2. நான்மணிக்கடிகை**

நான்கு+மணி+கடிகை. கடிகை = கடகம், தோள்வளை. நான்கு மணிகள் பதிக்கப் பெற்ற தோள்வளை போல் ஒவ்வொரு பாடலிலும் நான்கு நான்கு நீதிக் கருத்துக்களைக் கூறி இருப்பதால் இப்பெயர். இத்தகு அமைப்பு முறையில் காணப்படுவது அம்மை எனப்படும் வனப்பு என்னும் அழகாகும்.

**3. இன்னா நாற்பது**

இன்னா = துன்பம். இன்னது இன்னது இன்னா என 40 பாடல்களில் கூறுவதால் இப்பெயர். வாழ்வியலின் துன்பங்களின் மூலங்கள் இவையிவை எனக் கண்டுத் தொகுத்துக் கூறும் புதுமரபினைக் கொண்ட இந்நூல் புதுவரவு எனலாம். சிவன், பலராமன், திருமால், முருகன் எனச் சமயப் பொதுமையுடன் கூறியுள்ள விளம்பிநாகனார் விநாயகரைக் கூறாமையின் அவர் காலத்தில் விநாயகர் வணக்கம் இல்லை எனக் கொள்ள இடம் தருகின்றது.

**4. இனியவை நாற்பது**

வாழ்க்கையின் இன்ப மூலங்கள் இவை எனக் கண்டு அவற்றைத் தொகுத்துரைப்பது இந்நூல். இன்னா நாற்பதின் மரபுத் தொடர்ச்சியாக இந்நூல் விளங்குகின்றது எனலாம். பிச்சை புகினும் கற்றல் மிக இனிதே என எடுத்துரைக்கின்றது.

**5. திருக்குறள்**

உலகப் பொதுமறை எனப்படும் இந்நூல், குறுகிய வடிவினைப் பெற்றிருப்பதால் இப்பெயர். முதலாம் அடியல் நான்கு சீர்களும், இரண்டாம் அடியில் மூன்று சீர்களும் என ஏழு சீர்களை

Scanned with CamScanner

மட்டும் பெற்று உலகக் கருத்துக்கள் அனைத்தையும் அடக்கிக்கூறும் கருத்துக் கருவூலமாகத் திகழ்கின்றது. நூலுக்கு முன்னர்த் திரு என்னும் அடைமொழி பெறும் சிறப்புடைத்து. திருக்குறளுக்குப் பதின்மர் உரை வகுத்துள்ளனர்.

திருக்குறளுக்கு நேரே உரை வகுத்தோர் போக நூல்கள் பலவற்றிலும் திருக்குறள் எடுத்தாளப்பட்டுள்ளன. சிலப்பதிகாரம், மணிமேகலை உள்ளிட்ட நூல்களில் உள்ள திருக்குறள் ஆட்சியை நோக்கும் பொழுது திருக்குறள் காப்பிய காலத்திற்கும் முற்பட்டது என்பது விளங்கும். சங்க இலக்கியங்களான நற்றிணை, புறநானூறு என்னும் நூல்களிலும் திருக்குறள் ஆட்சி காணப்படுகின்றது. மந்திரம் என்பது பற்றிக் கூறும்பொழுது.

*நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து*
*மறைமொழி காட்டி விம்*

என்று திருவள்ளுவர் (28) உரைத்துள்ளார். இது.

*நிறைமொழி மாந்தர் ஆணையில் கிளந்த*
*மறைமொழி தானே மந்திரம் என்ப*

என்னும் தொல்காப்பியர் (1434) வழியே சென்று திருவள்ளுவர் தடம்பதித்துள்ள பான்மையினைப் படம்பிடிக்கின்றது.

கலைஞரின் குறளோவியம், திருக்குறளின் சித்திரம். உலகமொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. திராவிட மொழிகளில் மொழியாக்கம் பெற்றுள்ளது. அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று நிலைகளில் நின்று வள்ளுவம் வாழ்க்கையைப் பேசுகின்றது.

திருக்குறளின் 133 அதிகாரங்களைக் குறிக்கும் வகையில் கன்னியாகுமரியில் 133 அடி உயரத்தில் திருவள்ளுவர் சிலை 1.1.2000 அன்று நிறுவப்பட்டுள்ளது.



**6. திரிகடுகம்**

திரி = மூன்று. சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மூன்று நோயை நீக்க வல்லன. அதைப்போல இத்திரிகடுகங்கள் மூன்றும் மனநோயை மாற்றவல்லன ஆதலின் இப்பெயர்.

இளமையில் கல்வி கற்று, பெற்றோரை மதித்துப் போற்றி, பெரியோர்தமை வழிபட்டு வாழும் தன்மையுடைய இளமை வயதினோர்க்கு நன்னெறியாம் இறைவனின் அருள் காத்திருக்கின்றது என்னும் இவ்வுயரிய கருத்தை.

*முந்தை எழுத்தின் வரவுணர்ந்து பிற்பாடு*
*தந்தையும் தாயும் வழிபட்டு - வந்த*
*ஒழுக்கம் பெருநெறி சேர்தலில் மூன்றும்*
*விழுப்ப நெறிதூரா வாறு*

என்னும் செய்யுள் செப்புகின்றது.

**7. பழமொழி**

செய்யுளின் இறுதியில் பழமொழி அமையுமாறு அமைக்கப் பட்டிருப்பதால் இப்பெயர்,

*'பாம்பறியும் பாம்பின் கால்'*

*'நிறைகுடம் நீர்தளும்பல் இல்'*

*'குன்றின்மேல் இட்ட விளக்கு'*

எனப் பலப் பழமொழிகள் நூலுள் ஆளப்பட்டுள்ளன. மனுநீதிச் சோழன் தன் மகனைத் தேர்க்காலில் இட்டது. பல்யானைச் செல்கெழு குட்டுவன் பாலைக் கௌதமனார்க்கு வீடு அளித்தது. தொடித்தோள் செம்பியன் தூங்கெயில் எறிந்தது முதலான உண்மைகளைத் தெரிவிக்கும் வரலாற்று ஆவணமாகப் பழமொழி திகழ்கின்றது.

Scanned with CamScanner

## 8. சிறுபஞ்சமூலம்

சிறுவழுதுணை (கத்திரிக்காய்), கண்டங்கத்திரி, நெருஞ்சி, சிறுமல்லி, பெருமல்லி என்னும் ஐந்து எளிய மூலிகைகளின் வேர்களைக் கொண்டு செய்யப்படுவது சிறுபஞ்சமூலம் எனப்படும். அதுபோல் ஒவ்வொரு பாடலிலும் ஐந்தைந்து கருத்துக்களைப் பொதிந்து வைத்துள்ளதால் இப்பெயர்.

சூல் நிற்காமையால் வரும் துன்பம்; நின்ற சூலினால் குழவியை ஈன்றபின் வரும் துன்பம்; ஈன்றணிமையால் குழந்தையை வளர்த்தலால் வரும் துன்பம்; வளர்த்த பிள்ளையைச் சால்பு நெறியில் நிறுத்துவதால் வரும் துன்பம் எனப் பெற்றோர் படும்பாடுகளைக் காரியாசான் காட்சிப் படுத்துகின்றார். இதனை,

*சூலாமை சூலின் படும்துன்பம், ஈன்றபின்*
*ஏலாமை ஏற்றால் வளர்ப்புஅருமை, - சால்பமை*
*வல்லாமை வாய்ப்ப அறிபவர் உண்ணாமை*
*கொல்லாமை நன்றால் கொழித்து*

என்னும் பாடல் பகர்கின்றது.

## 9. முதுமொழிக்காஞ்சி

அதிகாரங்களுக்குப் பத்துப் பாடல்கள் வீதம் பத்து அதிகாரங்களைக் கொண்ட நூல். முதுமொழி = மூத்தோர் சொல்; காஞ்சி = மகளிர் இடையணி, நிலையாமை. மூத்தோர் சொற்களைக் கோர்த்துத் தந்ததால் முதுமொழிக் காஞ்சி; நிலையா உலகில் நிலைத்து நிற்கும் வாழ்வியல் விழுமியங்களைக் கூறுவதாலும் இப்பெயர் பெற்றது.



*இரப்போர்க்கு ஈதலின் எய்தும் சிறப்பில்லை (6:10)*
*உண்டி வெய்யோர்க்கு உறுபிணி எளிது (8:7)*
*அறத்தாற்றின் ஈயாதது ஈகை அன்று (5:8)*

எனத் தகும் அருமொழிகள் அரும்பியது இந்நூல்.

## 10. ஏலாதி

ஏலம் முதலான ஆறு பொருட்களைக் கலந்து செய்யப்படுவது ஏலாதி. அம்மருந்தினை ஒத்த நற்கருத்துக்களைக் கூறுவதால் இப்பெயர். எட்டிற்கு அடுத்த எண்ணின் பெயர் தொண்டு என்னும் குறிப்பு,

*தொண்டு இருந் துன்பம் தொடரும் பிறப்பு*

என்னும் தொடர் (72) மூலம் நூலுள் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்வியறிவு இன்மையால் பிறப்பு ஏற்படும் இத்தக பிறப்பு,

| | | |
|---|---|---|
| 1. உயிருடையன | 2. உயிர் இல்லன | 3. புண்ணியம் |
| 4. பாவம் | 5. துன்ப முற்றுகை | 6. செறிப்பு |
| 7. கட்டு | 8. முதிர்வு | 9. வீடு |

என்னும் தொண்டு (ஒன்பது) வகையான நிலைகளைத் தரும் என்பது இத்தொடரின் பொருள்.

எட்டிற்கு அடுத்த எண் தொண்டு என வழங்கும் வழக்கு இருந்தமையை, மலைபடுகடாம் (31), பரிபாடல் (3:77-79) என்னும் நூல்களிலும் காணலாம்.

- - -

Scanned with CamScanner

3

## உழவு : இயற்கை

*- மாத்தளை சோமு*

ஆடை இல்லாமல் மனிதன் வாழ்ந்தது முதல் அறிவியல் கல்வி செழித்தோங்கும் இந்த விஞ்ஞானக் காலம் வரை மனிதன் உணவைத்தேடி அலைந்த வண்ணமேயிருக்கிறான். செவ்வாய் கிரகத்துக்கு விண்கலம் அனுப்புகிற மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட, நவீன எந்திரங்களால் மண்ணிலே விதைக்காமல் உணவைச் சுயமாகத் தரமுடியாது. மண்ணுக்குள்ளே விதையாக விரிந்து பிறகு வெளியே தலைநிமிர்ந்த பயிர், செடி, கொடி, மரம் என்பனவற்றால் பெறப்படும் உணவுக்கான மூலப்பொருளை எந்திரங்கள் உணவாக்க முடியும். அணு இல்லாமல் ஓர் அணுவும் அசையாது என்பதில் அறிவியல் இருக்கிறது. அணு அணுவாக வளர்கிற தாவரங்களில் இருந்துதான் உணவை மனிதன் தேட முடியும். இன்னும் அறிவியலாய்ப் பார்த்தோமானால் உயிருள்ள தாவரங்களால் - உயிருள்ள விலங்குகள், பறவைகள், நீரினங்கள் ஆகியவற்றால் தான் உணவு கிடைக்கிறது.



கடவுளை வேண்டுகிற அடியார்கள் கூட உணவுக்காகப் பிரார்த்திக்கின்றனர். திருமங்கை ஆழ்வார்,

*கூறை சோறு இவைதந்து எனக்கு அருளி*
*அடியேனைப் பேணி ஆண்டுகொள் எந்தாய்*

என்ற பாடலில் 'உணவும், இருப்பிடமும் தந்து என்னை ஆட்கொள்' என்று வேண்டுகிறார்.

மனித வாழ்வின் இன்பத்தைத் துறந்தவர்களும் உணவைத் துறக்கவில்லை. துறக்க முடியாது. உணவு மிக முக்கியமானது மனிதனுக்கு. எனவேதான் குர்ஆன், பைபிள் போன்ற மதநூல்களும் மண்ணின் பரப்பில் மனிதனுக்கான உணவை உறுதி செய்கின்றன. சங்க இலக்கியத்தில் பசித்த வறியோருக்கு உணவு அளித்த மனிதனை 'பசிப்பிணி மருத்துவன்' எனப் புகழ்ந்துள்ளனர். இதன் மூலம் பசி போக்குபவன் ஒரு மருத்துவன் என்பதை இந்த உலகத்துக்கே தந்தவர்கள் சங்கத் தமிழர். உணவின் முக்கியம் அறிந்துதான் திருவள்ளுவர் உழவு என்ற தலைப்பில் 10 குறள்களை 20 வைர வரிகளில் அற்புதமாய் எக்காலத்திற்கும் ஏற்றதாய் தந்துள்ளார்.

*சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை.* (1031)

என்ற குறளில் பல தொழில்களைச் செய்து சுழன்றாலும் இறுதியில் ஏர்த்தொழிலின் பின்னாலேயே உலகம் நிற்கிறது. அதனால் எவ்வளவு துன்பமடைந்தாலும் உழவே தலையானது என்று சொல்கிறார். அவர் சொன்னதில் மிகப் பெரிய உண்மை இருக்கிறது. ஒரு டாக்டரால், ஒரு விஞ்ஞானியால், ஒரு அரசியல் தலைவனால், ஒரு

Scanned with CamScanner

பொறியாளரால் இன்னும் பல விற்பன்னர்களால் செய்ய முடியாததை ஒரு விவசாயி உழவுத்தொழிலில் செய்கிறான். அதன் மூலமே மனிதர்களுக்கு உணவு கிடைக்கிறது. அந்த உணவு தான் மனிதனுக்கு உயிரேயாகும்; உயிரைத்தாங்கும் சக்தியாகும். எனவேதான் பழந்தமிழர் 'உண்டி கொடுத்தோர் (உண்டி - உணவு) உயிர் கொடுத்தோர்' என்றனர்.

பழந்தமிழர் வரலாற்றைப் பார்க்கிறபோது தமிழர், தமிழ் மன்னர்கள் உழவுத்தொழிலைப் போற்றி வந்திருக்கிறார்கள். உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்ற வள்ளுவனின் குறளை ஏற்றிருக்கிறார்கள். சங்கப் புலவர்கள் 'உழவுத்தொழிலுக்கு வரிபோடக்கூடாது' என்று மன்னனை வேண்டியிருக்கிறார்கள். உழவு மனிதனுக்கு உணவு கொடுக்கிற தொழில். அது நலிந்தால் மனித இனமே நலியும். எனவே அதன் உண்மையை உணர்ந்திருக்கிறார்கள் சங்கத் தமிழர்கள்.

உழவுத்தொழிலின் மூலமாக நெல்லைப் பெற்றனர் தமிழர்கள். பிறகு நெல்லை அரிசியாக்கினார்கள். நெல் முளைக்கும் பருவம்; அரிசி முடியும் பருவம். எனவேதான் பழந்தமிழர் திருமணத்தின்போது வாழ்த்தும் நோக்கில் மணமக்கள் மீது விதையாக இருக்கிற நெல்லைத் தூவினார்கள். நெல் முளைக்கும். எனவே மணமக்கள் வாழ்வில் பதினாறு செல்வமும் முளைக்கட்டும் என்பதன் அடையாளமாக நெல்லைத் தூவினார்கள். (இன்று அரிசியை மஞ்சள் பூசித் தூவுகிறார்கள். ஒரு காலத்தில் விதைநெல் தட்டுப்பாடு வந்ததால் இந்த வழக்கம் வந்ததாக ஒரு குறிப்பு உண்டு.) நெல்லில் இவ்வாறு பண்பாடு கண்டவர்கள் பழந்தமிழர்கள். இன்றைக்கும் குறிப்பிட்ட சில தமிழர்களிடையே திருமணத்தின்போது நெல் அளந்து போடுகிற வழக்கம் உண்டு.



## நெல் பண்பாடு

தமிழனின் நெல் நாகரீகம் உலகில் முதன்மையானது. நெல்லும் அரிசியும் தமிழரின் மங்கல அமங்கல சம்பவங்களில் தொடர்பு கொண்டது. திருமணத்தின்போது நெல்லால் வாழ்த்திய தமிழர்கள் இறப்பின்போது எல்லாம் முடிந்துவிட்டது என்பதாக இனி முளைக்காத அரிசியால் இறந்தவருக்கு வாய்க்கரிசி இட்டனர். இவற்றைக் கூர்ந்து கவனித்தால் வாழ்க்கையை (விதையால்) நெல்லால் தொடங்கி (முடிந்துபோன) அரிசியால் முடித்து வைப்பதாக அர்த்தம் வருகிறது. எனவே தமிழர் பண்பாடு நெல்லோடு தொடங்கியதாக சொல்ல முடிகிறது.

நெல்லில் பண்பாட்டைத் தொடங்கிய தமிழர் நெல்லை அரிசியாக்கி அரிசியைச் சோறாக்கி உணவாக்கி மகிழ்ந்தனர். இன்றைக்கும் மிகக் குறைந்த விலையில் கிடைக்கிற உணவே அரிசிச் சோறாகும். அது வறியவர் பசியைப் போக்கும் மருந்தும் ஆகும். பசி முதல் மனிதனுக்கு முதலில் வந்த ஒன்று. மனித வரலாற்றோடு பசி முக்கியத் தொடர்புடையது. அரசுகள் மக்கள் பசியைப் போக்க ஆவன செய்தாலும் ஆங்காங்கே வள்ளல்கள் காலத்துக்குக் காலம் அன்னம் இட்டு வந்திருக்கின்றனர். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற வள்ளலார் தொடங்கிய அன்னதானம் இன்றும் வடலூரில் நடக்கிறது.

சங்க காலத்தில் அறச்சோறு எனத் தொடங்கிய பணி இன்றும் தமிழ் மண்ணில் அன்னதானமாய் நடந்து வருகிறது. தமிழகமெங்கும் அன்னதானச் சத்திரங்கள் ஆங்காங்கே இருக்கின்றன. இதுபோன்ற உணவுச் சத்திரங்கள் மேலை நாடுகளில் இல்லை. ஆனால் உணவு தேடும் வறியவர்கள் அங்கே இருக்கிறார்கள். அமெரிக்காவில் பகல்

Scanned with CamScanner

உணவு கிடைக்காத மக்கள் தொகை ஒரு நூறு ஆயிரத்தைத் தொட்டுவிட்டதாகப் பத்திரிகைச் செய்தி கூறுகிறது. அறிவியல் வளர்ந்தாலும் பொருள் குவிப்பு ஒரு பக்கமாய்ப் போக பட்டினி, பசி என்பன சில மக்களை சமூகத்தில் தாக்கவே செய்கின்றன. உலகெங்கும் பட்டினியால் தவிப்போர் உண்டு. எனவேதான் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, பிரிட்டன் உள்ளிட்ட மேலைநாடுகளில் செஞ்சிலுவைச் சங்கம், (Red Cross) வின்சண்டி போல் மற்றும் தேவாலய அமைப்புகள் என்பன ஒரு நேர உணவு அல்லது உணவுப்பொருள் வழங்குகிற 'தர்மத்தை' வருமானம் குறைந்தோருக்கு, வேலை இல்லாதோருக்கு வழங்குகின்றன. கிறிஸ்துமஸ் காலத்தில் ஏழைகளுக்காக உலகெங்கும் நிதி திரட்டப்படுகின்றன.

எவ்வளவுதான் வறுமை இருந்தாலும் தமிழர்கள் விருந்தோம்பல் பண்பைக் கைவிடமாட்டார்கள். தொல்காப்பியர் காலத்திலேயே விருந்தோம்பல் இருந்திருக்கிறது. அதற்குக் காரணம் தமிழரின் உழவுத்தொழில். அத்தொழில் எப்போதும் வறுமையைக் கொடுக்காது. எனவே விவசாயிகளை மன்னருக்கு இணையாகப் போற்றினார்கள் அந்தக் கால மக்கள்.

விஞ்ஞான எந்திர மயக்கத்தில் இருக்கிற நாடுகளில்கூட விவசாயிகள் போற்றப்படுகிறார்கள். ஆஸ்திரேலியாவில் ஆண்டுதோறும் பெரிய வெள்ளிக்கிழமையோடு (Easter Friday) ஒட்டிய காலப்பகுதிகளில் விவசாயிகளைப் போற்ற ஈஸ்டர் ஷோ (Easter Show) நடத்துகிறார்கள் அந்தக் கண்காட்சியில் விவசாயத்தோடு தொடர்புடைய மாடு, ஆடு, கோழி, வான்கோழி என்பனவற்றைக் காட்சிக்கு வைப்பார்கள்.



உலகில் வாழ்கிற மனிதனுக்கு விவசாயம் முக்கியமானது. ஒரு மனிதன் வானொலிப்பெட்டி, தொலைக்காட்சி இல்லாமல் வாழ முடியும். ஆனால் உணவு இல்லாமல் வாழ முடியாது. ஆகவே சங்க காலத்திலேயே உணவு உற்பத்திக்கு வழிமுறைகளைக் கண்டார்கள் தமிழர்கள். நாடோடி வாழ்க்கையில் இருந்து மீண்டும் ஒரு பரிணாம வளர்ச்சியில் இதனைச் செய்திருக்க முடியும். ஆனால் நாடோடி வாழ்க்கையில் இருந்து மீளாதவர்களும் உலகில் இருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆஸ்திரேலிய ஆதிவாசிகள். ஒரு பெரிய நாட்டுக்கே சொந்தக்காரர்கள். அவர்களின் வரலாறு 40 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்டதாகும். ஆனால் அவர்கள் உழவுத்தொழிலோ, விவசாயத்தொழிலோ அறிந்திருக்கவே இல்லை. வரலாற்றுத் தகவல்படி வெள்ளையர்கள் கால் வைத்த 1788-ம் ஆண்டு வரை எந்த நவீன வாழ்க்கையையும் அவர்கள் அறியவே இல்லை. ஆனால் நாடோடி வாழ்க்கையில் இருந்து மீண்ட சங்கத்தமிழர் உழவுத்தொழிலில் மாடுகட்டி 'போர்' (Rick) அடிக்க முடியாமல் யானை கட்டி 'போர்' அடித்திருக்கிறார்கள்.

தமிழர் வரலாறுபடி நெல்லில் மட்டுமல்ல ஏனைய பயிர்களை உற்பத்தி செய்வதிலும் சங்கத் தமிழர்கள் முன்னோடிகளாக இருந்திருக்கிறார்கள். இனிப்புக்காக 'வெல்லம்' செய்தனர். அப்படியானால் கரும்பு உற்பத்தி இருக்க வேண்டும், இருந்தது. அதற்கு எந்திரமும் இருந்திருக்கிறது.

**கரும்புப் பயன்பாடு**

தமிழ்நாடெங்கும் நெல்லுக்கு அடுத்த நிலையில் கரும்பு உற்பத்தியானது. கரும்பு பயிர் செய்யப்பட்ட இடம் கரும்பின் பாத்தி என்றும் கரும்பின் கழனி என்றும் கூறப்பட்டது. மூங்கிலைப் போல் கரும்புக்கும் கணு உள்ளது. எனவே கரும்பு க ழனிகளில் பயிர் செய்யப்படுகிற மூங்கில் என்று அழைக்கப்பட்டது.

Scanned with CamScanner

கரும்பைச் சாறு பிழியும் எந்திரங்களும் கருப்பஞ்சாற்றை வெல்லங்காய்ச்சும் ஆலைகளும் ஊர்கள் தோறும் இருந்தன. பாண்டி நாட்டுத் தேனூரில் அவைகள் இருந்தன என்று ஐங்குறுநூறு என்ற சங்க நூலின்,

*'கரும்பின் எந்திரமும் களிற்றெதிர் பிளிற்றும்*
*தேர்வன் கோமான் தேனூர்'* (ஐங்குறுநூறு-மருதம்-55)

என்ற பாடல் தெரிவிக்கிறது.

வெல்லத்துக்கு 'விசயம்' என்று பெயர் கூறப்பட்டது. வெல்லக்கட்டியைச் சுருக்கமாகக் கட்டி என்றும் கூறினார்கள். வெல்லம் 'கரும்பின் தீஞ்சாறு' என்றும் கூறப்பட்டது. அதனை,

*எந்திரமும் சிலைக்கும் துஞ்சாக் கம்பலை*
*விசயம் அடூஉம் புகைசூழ் ஆலை தொறும்*
*கரும்பின் தீஞ்சாறு விரும்பினார் மிசைமின்*

என்ற பெரும்பாணாற்றுப்படை (260-262) பாடல் தெரிவிக்கிறது.

கரும்பு தமிழரின் பண்பாட்டுச் சின்னங்களில் ஒன்றாகவும் இருந்திருக்கிறது. திருவிழாக்காலங்களில் வீடுகளை வாழைமரத்தாலும், கரும்புக் கழிகளாலும் (தோகையோடு கூடிய கரும்பு) கட்டி அலங்காரம் செய்தார்கள். வெல்லம், சர்க்கரை விற்ற வணிகருக்கு 'பணித வாணிகர்' என்பதே பெயர். பணித வாணிகன் நெடுமூலன் என்ற பெயரை மதுரைக்கருகில் இருக்கிற குகையொன்றில் பிராமி எழுத்தின் அமைப்பில் கண்டுபிடித்தனர் ஆய்வாளர்கள். இது கி.மு. 2200 ஆண்டுகளுக்கு முந்தியது என கடைச்சங்கச் செய்தி தெரிவிக்கிறது. அப்படியாயின் அதற்கு முன்பே தமிழர்களுக்கு கரும்பு பயிர் செய்கையும், கரும்பிலிருந்து வெல்லம்,



சர்க்ரை எடுக்கிற தொழில் நுட்பமும் தெரிந்திருக்கிறது. அதே கால கட்டத்தில் ஐரோப்பியருக்குக் கரும்பு தெரியாது. கி.பி. 15-ம் நூற்றாண்டில்தான் கரும்பும் வெல்லமும் மேலைநாட்டினருக்குத் தெரிய வந்தது. அதற்குப் பிறகுதான் அவர்கள் சீனியை (Sugar) கொண்டு வந்தார்கள்.

சீனியின் வருகைக்குப் பிறகுதான் சர்க்கரை, வெல்லம் என்பனவற்றின் பாவனை தமிழர்களிடம் குறைந்தது. இதனால் சர்க்கரை, வெல்லம் என்பனவற்றால் செய்யப்படுகிற கொழுக்கட்டை, மோதகம், பயிறு உருண்டை, பொறிவிளங்காய் (கெட்டி உருண்டை) பணியாரம் போன்ற பலகாரங்கள் ஒதுக்கப்பட்டு சீனியால் செய்யப்படும் மேலைத்தேய இனிப்பு உணவுகளே (Cake) பாவனைக்கு வந்தன.

கரும்பிலிருந்து கிராமக் கைத்தொழிலில் எடுக்கப்பட்ட வெல்லம், சர்க்கரை என்பன உடல்நலத்திற்கு (இனிப்புநீர்க் (சர்க்கரை நோயாளி) காரர்களைத் தவிர்த்த ஏனையோருக்கு) நல்லது என மருத்துவ நிபுணர்களே சொல்கிறார்கள். அவர்களே வெள்ளைச் சீனியின் பரவலான பாவனை உடல் நலத்திற்கு ஒவ்வாதது என்றும் சொன்னார்கள். மேலைநாடுகளில் கருப்பு சீனியும் கடைகளில் விற்பனையாகின்றன. ஆனால் தமிழரிடையே வெல்லம், சர்க்கரை போன்ற நலம் பயக்கும் இனிப்புப் பொருட்கள் ஓரங்கட்டப்பட்டு ரசாயன உரத்தால் (Chemical Fertilizer) உற்பத்தி செய்யப்படும் வெள்ளைச் சீனியே முன்னிலைப் படுத்தப்படுகிறது. இதற்கெல்லாம் பழந்தமிழரின் உணவு, உணவுப் பொருட்கள் தொடர்பான அறிவியலை அறியாத அறியாமையும் அந்நிய மோகமுமே காரணமாகும்.

Scanned with CamScanner

**இயற்கை வேளாண்மை**

ஒரு நாளைக்கு குறைந்தது மூன்று தடவையாவது உணவைப் பற்றிச் சிந்திப்பான் மனிதன். உணவு இல்லையேல் உயிர் இல்லை. உடலும் இல்லை. உண்டியாகும் உணவை உழவுத்தொழில் மூலம்தான் கொடுக்க முடியும். விஞ்ஞானம் விண்வெளியை கையகப்படுத்தி விட்டபோதும் மனிதன் உண்பதற்கான உணவை மண்ணில் நட்டு வளர்த்துத்தான் பெறமுடியும். மனிதரின் உணவை அடிப்படை (விதை, வேர்) இன்றி எந்திரங்களால் உற்பத்தி செய்ய முடியாது. பால் இருந்தால் பாலைக் கெட்டியாக்கி மாவாக்கலாம். பாலையே அந்த எந்திரத்தால் தரமுடியுமா? (எந்திரம் - யந்திரத்தை சங்க புலவர்களின் வழியில் இவ்வாறு அழைக்கலாம். அதனால் இயந்திரம் என எழுத வேண்டியதில்லை.)

விவசாயி சேற்றில் கை வைக்காவிட்டால் மற்றவன் சோற்றில் கை வைக்க முடியாது. ஆயிரம் தொழில்கள் இருந்தாலும் உழுதுண்டு வாழும் வேளாண்மையே முன்னிலையானது. இதனைத்தான் திருக்குறளில்,

*உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றுஎல்லாம்*
*தொழுதுஉண்டு பின்செல் பவர். (1033)*

என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார். அவர் உழவின் பெருமை உணர்ந்து ஒரு அதிகாரமே 'உழவு' என்ற தலைப்பில் பாடி உழவு பற்றி தீர்க்க தரிசனமாகப் பேசியிருக்கிறார். அவர் வேறு ஒரு குறளில் உழவியல் செயல்முறைகளை அறிந்து ஒரு அனுபவமான [illegible]சாயி போல் ஐந்து கோணங்களை எடுத்துக்[illegible] உழவுத் தொழிலைப் பொறுத்தவரை உழுதல் (Ploughing) உரமிடுதல் (Fer-



tilization) களை நீக்குதல் (Weed Control) நீர்பாய்ச்சுதல் (Irrigation) பயிர்ப் பாதுகாப்பு (Crop Protection) என்ற ஐந்து கோணங்கள் மிக மிக இன்றியமையாதவை. இதனை,

*ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்*
*நீரினும் நன்றுஅதன் காப்பு. (1038)*

என்ற குறள் சொல்கிறது. இன்றைக்கு விஞ்ஞானம் விரிவடைந்தாலும் இன்றும் இதே ஐந்து கோணங்களில்தான் விவசாயம் நடக்கிறது.

அதே 'உழவு' அதிகாரத்தில்

*தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்து எருவும்*
*வேண்டாது சாலப் படும். (1037)*

என்ற குறளில் திருவள்ளுவர், ஒரு பலம் புழுதி கால்பலம் வண்ணம் உழவன் நிலத்தைக் காய விடுவானானால், கைப்பிடி அளவு எருவும் இட வேண்டாமல், நிலம் செழித்து வளரும் என்று உழவுத் தொழிலுக்கு ஆலோசனை கூறுகிறார்.

உழவுத் தொழிலுக்கும் ஏனைய பயிர் செய்கைக்கும் சூரிய ஒளி, மழை, நிலம் ஆகிய மூன்றும் முக்கியமானவையாகும். இம்மூன்றும் இல்லாமல் மண்சார்ந்த தொழில் நடக்காது. ஆகவே இம்மூன்றையும் சங்ககால கவிஞர்கள் போற்றுகின்றனர். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் மங்கல வாழ்த்தில் 'திங்களைப் போற்றுதும்' என்ற பாடலில் ஒளியைத் தருகிற சூரியனைப் போற்றி 'ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்' என்றும், மழையைப் போற்றி 'மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்' என்றும், நிலத்தைப் போற்றும் வகையில் 'பூம்புகார்ப் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்' எனப் போற்றிப் பாடியுள்ளார். விவசாயத்திற்கு நிலமும், சூரிய ஒளியும், மழையும் வேண்டுமென்பது அறிவியலாகும்.

Scanned with CamScanner

சங்கப் புலவர்களில் பெரும்பான்மையானோர் விவசாயம் சார்ந்த அறிவியல் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். கம்பர் இராமாயணத்தில் கழிவுப் பொருட்களை பயனுள்ள வகையில் வேளாண்மைக்கு ஏற்ப மாற்ற வேண்டும் என்பது அறிவியலாகும்.

*முட்டில் அட்டில் முழங்குற வாக்கிய*
*நெட்டுலைக் கழுநீர் நெடுநீத் தம்தான்*
*பட்டமென்கமு கோங்கு படப்பைபோய்*
*நட்ட செந்நெலின் நாறு வளர்க்குமே* (பால - 57)

என்ற பாடலில் கழுநீர் வீட்டுக் கழிவுப்பொருள் அண்மையில் உள்ள வயல்நாற்றை வளர்க்கிறது என்று கம்பர் சொல்லும் செய்தி உழவுக்கு வந்தனை செய்வதாகும்.

சங்ககால இலக்கிய நூல்களின் குறிப்புகள்படி அக்காலத் தமிழர் சுற்றுப்புறச் சூழல் கெடாமல், மண்தாயின் மடி சேதமாகாமல் இயற்கை (Nature) முறையில் விவசாயம் செய்திருக்கின்றனர். விவசாயத்திற்குத் துணையாக ஆடு, மாடு, கோழிகளை வளர்த்தனர். நிலத்தைப் போற்றினர். நிலத்தை வெறுமனே ஒரு மண்ணாக மட்டும் எண்ணாது அதற்குமேல் அதன் தன்மை அறிந்து கொண்டாடினர். சிறுநிலத்தில் இயற்கையின் துணையோடு அதிக அளவு விளைச்சலையும் செய்து காண்பித்தனர். இதனை புறநானூறு சொல்கிறது;

*ஒருபிடி படியும் சீறிடம்*
*எழுகளிறு புரக்கும் நாடுகிழ வோயே!* (புற-40)

என்ற வரிகள் மூலம் சோழமன்னன் குளமுற்றத்துஞ்சிய கிள்ளி வளவனைப் போற்றி ஆவூர் மூலங்கிழார் பாடிய பாடலில் 'ஒரு பெண்யானை படுத்துறங்கும் சிறிய இடத்தில் ஏழு ஆண் யானைகள் உண்ணத் தக்க விளைபொருள் விளையும் வளமிக்க நாட்டுத் தலைவனே!' என்று பாடுகிறார். இதிலிருந்து நமக்குத் தெரிகிற செய்தி சின்ன நிலப்பகுதியில் அதிக விளைச்சல் காணுகிற உழைப்பு ஆற்றல், வேளாண்மை அறிவியல் பழந்தமிழர்களுக்கு இருந்திருக்கிறது என்பது தான்.



பழந்தமிழர் வரலாற்றை சங்க இலக்கியங்கள் வழிப்பார்க்கிறபோது தமிழர் இயற்கையோடு ஒத்த அறிவோடு சுற்றுப்புற அறிதலோடு நிலத்தை உழுது நட்டிருக்கின்றனர்; மண்ணுக்கு மாசு வராமல் விவசாயத்தை மேம்படுத்தியிருக்கின்றனர். ஆனால் இன்று நவீன விஞ்ஞானச் சிந்தனையில் எந்திரங்கள் துணையோடு செயற்கை உரம் தூவிச் செல்கின்ற விவசாயத்தில் மண்ணும் வலுவிழந்து விதையும் தேய்ந்து விவசாயிகளின் வித்தையும் மாய்ந்து தவிக்கிற காட்சியைப் பார்க்கிறோம். இம்மண்ணுக்கு ஒவ்வாத செயற்கை முறையிலான (ரசாயன உரத்தினால்) விவசாயத்தில் மண்ணின் இயற்கையும் மனிதனின் இயல்பும் மாறிக் கிடக்கிறது.

ஒரு ஏக்கர் பரப்பில் அதிக அறுவடை என்பதில் ரசாயன உரங்கள் போட்டதில் மண் மலடானதைப் போலாகிவிட்டது. இடைவெளி விடாமல் பிள்ளை பெற்றால் தாயின் நிலை என்ன? அதைப் போலவே அதிக அறுவடையில் தன்மை இழந்து மண்காட்சி தருகிறது. ஒன்றுக்கொன்று நேர் எதிரிகளாக வாழ்ந்தாலும் விவசாயிக்கு உதவுகிற பாம்பு, தவளை, வெட்டுக்கிளி, மண்புழுக்கள், சிட்டுக்குருவிகள் யாவும் நேற்று வரை விவசாய பூமியில் தஞ்சமாய்க் கிடந்தன. ஆனால் தூவப்பட்ட செயற்கை உர நஞ்சால் அவையெல்லாம் அழிந்து குறைந்துவிட்டன.

Scanned with CamScanner

நவீன விஞ்ஞான முறைகள் தனியார் நிறுவனங்களுக்குப் பொருள் சேர்த்ததே தவிர விவசாயிகளுக்குப் பொருள் கொடுக்கவில்லை. ஒரு மண்புழு செய்கிற வேலையை எந்த விவசாய எந்திரங்களும் செய்யவில்லை. எனவே இன்றைக்கு மண்ணைப் பாதுகாக்க மண்புழுக்களை வளர்த்துவிட வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம்.

மேலைநாடுகளில் இன்றைக்கு இயற்கை முறை விஞ்ஞானத்திற்கு முன்னுரிமை கொடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள். குறிப்பாக டென்மார்க், சுவீடன், நோர்வே போன்ற நாடுகள் புதிய பாடத்திட்டத்தை விவசாயத்துறையில் வரவேற்கின்றன. இது பழையது அல்ல. இயற்கையோடு ஒத்துப் போகிற முறை. விளக்கமாகச் சொன்னால் இரண்டு அடி பின்னாலும் ஓரடி முன்னாலும் (TWO STEPS BACK AND ONE STEPS FORWARD) என்ற முறையில் மண்மாசுபடாது இயற்கையோடு ஒத்த பழையதும் புதியதும் கலந்து உருவான விவசாய முறை. இதனைப் பின்பற்ற வேண்டும் என்ற இயக்கம் தமிழகத்திலும் இருக்கிறது.

தமிழரிடம் ஏற்கனவே இருந்த மண்சார்ந்த விவசாயத்தை சற்று மெருகு படுத்தினாலே போதும். சாதாரணப் பழமொழிகளிலேயே தமிழர்கள் இயற்கை விவசாயத்தை சொல்லியிருக்கிறார்கள். அடி காட்டுல, நடு மாட்டுல, நுனி வீட்டுல என்று ஒரு பழமொழி. அதனை ஆய்வு செய்தால் மிகப் பெரிய விவசாய அறிவியல் தெரியும்.

1) அடி காட்டுல - நெற்கதிர் அறுக்கப்பட்ட அடிப்பகுதி வயற்காட்டில் நிலத்திற்கு உரமாக இருக்கும்.

2) நடுமாட்டுல - நெற்கதிர் நீக்கப்பட்ட வைக்கோல் விவசாயத்திற்கு உதவுகிற மாட்டுக்கு உணவாகிறது.



3) நுனி வீட்டுல - நெற்கதிர் வீட்டில் நெல்லாகி பிறகு அரிசியாகி மனிதனுக்கு உணவாகிறது.

இம்மூன்றும் ஒரு பழமொழியில் உள்ள அறிவியல். இது இயற்கை விவசாயம் சார்ந்தது.

மாடு இல்லாத எந்திரத்தைப் பயன்படுத்துகிற விவசாயத்திற்கும் இயற்கை விவசாயத்திற்கும் வேறுபாடு இருக்கின்றது. அவற்றை கீழே ஒப்பீடு செய்து பார்ப்போம்:

மாடு:

1) இதற்கு வைக்கோலும் உணவு. இது விவசாயத்தில் கிடைக்கும்.
2) இதன் கழிவு சாணம் உரமாகிறது. எரிவாயு ஆகிறது.
3) இதனால் பூமியை உழவு செய்யலாம்.
4) அதன் மூத்திரம் பூச்சிக்கொல்லி மருந்தாகிறது.
5) அதன் பால் மனிதர்களால் குடிக்கப்படுகின்றன.
6) இதனால் சுற்றுப்புறச்சூழல் கெடாது.
7) இதனை இயற்கையாகவே உற்பத்தி செய்ய முடியும்.
8) இது இறந்தால் விவசாய பூமியிலேயே புதைக்கலாம். அது உரமாகும்.

உழவு எந்திரம்

1) இது இயங்க எண்ணெய் ஊற்ற வேண்டும்.
2) இதைப் பராமரிக்க செலவு செய்ய வேண்டும்.
3) இதன் கழிவு மண்ணுக்கு ஆகாது.
4) இது விடுகிற புகை சுற்றுப்புறச் சூழலுக்கு கேடு விளைவிக்கும்.
5) இதன் பாகங்கள் பழுதடைந்தால் விவசாய பூமியில் புதைக்க முடியாது.

Scanned with CamScanner

## முடிவு

இவ்வொப்பீடு கணக்கு மூலம் மாடுகளை விவசாயத் தோழர்களாகப் பயன்படுத்தியிருப்பது புரிய வரும். எனவேதான் மாட்டுப் பொங்கலையும் கண்டான் பழந்தமிழன். அவன் மண்ணையும், விண்ணையும், நதிகளையும், ஆடு மாடுகளையும் நேசித்து இயற்கை விவசாயத்தை அறிவியல் ரீதியில் பரப்பி வந்தான். சாதாரணப் பழமொழிகளில் கூட விவசாய அறிவியலை வைத்திருந்தான்.

"பூமி திருத்தி உண், விதை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமோ?' ஆடிப்பட்டம் தேடி விதை, ஆடி விதைத் தேடிப்போடு, அதிர அடித்தால் உதிர விளையும், நெல்லுக்குப் பாய்கிற நீர் புல்லுக்குப் பாயும், கோரை குடியைக் கெடுக்கும். குப்பையின்றி பயிர் விளையாது, அருங்காய் பிஞ்சிலே தெரியும், மாடு மேய்க்காமல் கெட்டது; பயிர் பார்க்காமல் கெட்டது, வேலி பயிரைக் காக்கும், உழுகிற நாளில் ஊருக்குப் போனால் அறுக்கிற நாளில் ஆள் தேவையில்லை, காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டும், அலை மோதும் போது தலை முழுகு, அடிக்கும் காற்றிலே தூற்ற வேண்டும். ஆயிரம் கலம் நெல்லுக்கு ஒரு அந்துப் பூச்சி' ஆகிய பழமொழிகளில் ஒரு விவசாயப் பாடமே இருக்கிறது. விவசாயம் அவனைப் பொறுத்தவரையில் ஒரு வாழ்க்கை. ஆகவே அது சம்பந்தமான சகலமும் அவனுக்குத் தெரிந்திருக்கிறது. பூச்சிக்கொல்லியாக வேப்பமரம், நொச்சிமரம் ஆகியவற்றின் தழைகளைப் பயன்படுத்தியிருக்கிறான். மாட்டின் மூத்திரம், சாணம் என்பன அவனுக்கு விவசாய மருந்தாகியிருக்கின்றன. (வேப்ப மரம்



பழந்தமிழரோடு தொடர்பானது. அறிவியலை மறைத்துக் கொண்டிருக்கிற ஆன்மீகத்தோடு தொடர்புடையது) வேம்பின் பலன், நலன் தமிழர் அறிந்து பல ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகின்றன. ஆனால் 250 ஆண்டுகளுக்கு முன்பு உருவான இன்றைய அமெரிக்கா வேப்பமரத்திற்கு காப்புரிமை கேட்டது நினைவிருக்கலாம். பழந்தமிழர் அறிவியலில் புரிதலும் பரப்பலும் இல்லாமைதான் இதுபோன்ற நிலைகளுக்குக் காரணமே ஆகும். வர்த்தகமான நவீன அறிவியல் மேலைநாட்டினருக்கே உரியது. அதே நேரத்தில் பழந்தமிழருக்கென்று மண் சார்ந்த மரபு சார்ந்த இயற்கையைத் தோழமை கொண்ட ஒரு அறிவியல் விவசாயத்திலும் இருந்திருக்கிறது என்பதே உண்மையானது.

\- - -

Scanned with CamScanner

4

## ஊரும் பேரும் : குடி

*- ரா.பி. சேதுப்பிள்ளை*

'ஊரும் பேரும்' என்னும் ஆய்வு காலத்துக்கு ஏற்றது என்று சுருங்கச் சொல்லலாம். ஊரும் பேரும் வாழ்க்கையை இயக்கி வளர்ப்பன என்று கூறல் மிகையாகாது. ஊர் பேரால் உலகம் இயங்குதல் வெளிப்படையான கருத்து. அவ்வகையில் குடியும் படையும் நாடாளும் அரசனுக்குரிய அங்கங்கள் என்று வள்ளுவர் கூறியருளினார். ஆதியில் தமிழகத்தில் எழுந்த குடியிருப்புகளால் ஊர் பெயர் பெற்றுள்ளது. அதனைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

### இல்

இக்காலத்தில் 'இல்' என்பது பெரும்பாலும் மக்கள் வாழும் வீட்டைக் குறிப்பதாகும். ஆயினும் அச்சொல் சில பழமையான ஊர் பெயர்களில் சேர்ந்திருக்கின்றது. திருச்சி நாட்டிலுள்ள ஊர் ஒன்று அன்பில் என்னும் அழகிய பெயரைப் பெற்றது. அன்பின் இருப்பிடம் ஆகிய அவ்வூர் இப்பொழுது கீழ் அம்பில் என்று வழங்கும். தேவாரப் பாடல் பெற்ற ஊர்களில் ஒன்று திருப்பாச்சில். அவ்வூர் இப்போது திருவாசி என்னும் பெயரோடு ஸ்ரீரங்கத்தின் அருகே உள்ளது.



சில பழம்பெயர்களில் அமைந்த இல் என்னும் சொல் இக்காலத்தில் ஊர் என்று மாறியிருக்கக் காணலாம். ஆதியில் திருச்செந்தில் என வழங்கிய ஊர் இப்பொழுது திருச்செந்தூர் என்று அழைக்கப்படுகின்றது. தேவாரத்திலும் சாசனத்திலும் மைலாப்பில் என்று கூறப்படும் ஊர் பிற்காலத்தில் மைலாப்பூர் ஆயிற்று இன்னும் இடைமருதில் என்றும், புடை மருதில் என்றும் பெயர்பெற்ற ஊர்கள் இப்பொழுது முறையே திருவிடை மருதூர் ஆகவும், திருப்புடை மருதூர் ஆகவும் விளங்குகின்றன. தொண்டை நாட்டு இருபத்து நான்கு கோட்டங்களில் ஒன்றாகிய மணவிற் கோட்டத்தின் தலைநகர் மணவில் என்பதாகும். அது இப்பொழுது மணவூர் என மாறியுள்ளது.

இன்னும், இல் என்னும் பெயருடைய சில ஊர்கள் பண்டைப் புலவர்கள் பெயரோடு இணைத்துச் சங்க இலக்கியங்களில் பேசப்படுகின்றன. அரிசில் என்னும் ஊறிற் பிறந்த புலவர் அரசில்கிழார் என்றும், அஞ்சில் என்னும் ஊரிலே தோன்றியவர் அஞ்சில் ஆந்தை என்றும், பொருந்தில் என்ற ஊரைச் சார்ந்தவர் பொருந்தில் இளங்கீரன் என்றும், கள்ளில் என்ற ஊரிற் பிறந்தவர் கள்ளில் ஆத்திரைய னென்றும் பழைய நூல்களில் குறிக்கப்படுகின்றனர்.

### அகம்

அகம் என்னும் சொல்லும் சில ஊர்ப் பெயர்களில் அமைந்திருக்கிறது. அச்சொல்லும் முதலில் வீட்டுக்கு அமைந்து-அப்பால் வீடுகளையுடைய ஊரைக் குறித்தது போலும். திரு ஏரகம் என்பது ஓர் ஊரின்பெயர். அது முருகனது படைவீடுகளில்-ஒன்றாகும். பாண்டிநாட்டில் வைகையாற்றங்கரையில் திரு ஏடகம் என்னும் ஊர் உள்ளது. இராமநாதபுரத்தில் மருதகம், கையகம் முதலிய பெயருடைய ஊர்கள் காணப்படுகின்றன. திருச்சி நாட்டில் கல்லகம் என்பது ஓர் ஊரின் பெயர்.

Scanned with CamScanner

## உள்

உள் என்னும் சொல் மிக அரிதாக ஊர்ப் பெயரிலே காணப்படும். சென்னை மாநகர்க்கு இருபத்தைந்து மைல் தூரத்தில் வைணவத் திருப்பதிகளில் ஒன்றாகிய எவ்வுள் என்னும் ஊர் உள்ளது. திருமங்கையாழ்வாரும், திருமழிசையாழ்வாரும் அப்பதியைப் பாடியுள்ளனர். நாளடைவில் திரு எவ்வுள் என்றும், திரு எவ்வுளூர் என்றும் அழைக்கப்பெற்ற அவ்வூர் இக்காலத்தில் திருவள்ளூர் என வழங்குகின்றது.

## வாயில்

வாயில் என்பது இல்லின்வாய் - வீட்டின்வாய் என்று பொருள்படும் வாயிலும் சில ஊர்ப் பெயர்களில் வழங்குகின்றது. கோச்செங்கட் சோழன் தன்னோடு போர் செய்து தோல்வியுற்ற சேர மன்னனைக் குடவாயிற் கோட்டம் என்னும் சிறைக் கோட்டத்தில் அடைத்தான் என்று சங்க இலக்கியம் கூறுகின்றது. குடவாயில் என்னும் பாடல் பெற்ற பழம்பதி தஞ்சைநாட்டில் உள்ளது. சேரநாட்டை ஆண்ட செங்குட்டுவன் தம்பியாகிய இளங்கோ என்னும் செந்தமிழ்ச் செல்வர் துறவறம் பூண்டு, வஞ்சிமா நகரின் குணவாயிற் கோட்டத்தில் அமர்ந்து தவம் புரிந்தார் என்று அவர் வரலாற்றால் அறிகின்றோம். அக்குணவாயில் பிற்காலத்தில் ஓர் ஊராயிற்று.

தஞ்சை நாட்டில் மேலவாசல் என்னும் ஒரு ஊர் மன்னார்குடிக்கருகே அமைந்திருக்கின்றது. சேலம் நாட்டில் தலைவாசல் என்னும் ஊர் காணப்படுகின்றது. புதுக்கோட்டைச் சாசனங்களில் பெருவாயில் நாடு, சிறுவாயில் நாடு, வடவாயில்நாடு என்னும் ஊர்ப்பெயர்கள் வருகின்றன. அவற்றுள் பெருவாயில் நாடு இக்காலத்தில் பெருமாநாடு என வழங்குகின்றதென்பர். இன்னும் அன்னவாயில், புன்னைவாயில், காஞ்சிவாயில் முதலிய ஊர்ப்பெயர்கள் கல்வெட்டுகளிற் காணப்படும்.



கொற்றவாயில் என்னும் பெயருடைய ஊர்களும் ஆங்காங்கு உள்ளன. மன்னனுக்குரிய மாளிகையின் தலைவாசல் பெரும்பாலும் கொற்றவாசல் என்னும் பெயரால் குறிக்கப்படுவதாகும். திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த பெரம்பலூர் வட்டத்தில் கொத்தவாசல் என்னும் ஊரும், வடமதுரைக்கருகே கொத்தவாசல் சேரி என்னும் சிற்றூரும் உண்டு.

தொண்டை நாட்டில் ஓர் ஊர் பிலவாயில் என்று பெயர் பெற்றிருந்தது. நாளடைவில் ஊர் என்னும் சொல் அப்பெயரொடு சேர்ந்து பிலவாயிலூர் என்று ஆயிற்று. அப்பெயர் குறுகி வாயிலூர் என வழங்கிற்று. அது இந்நாளில் வயலூர் எனச் சிதைந்தது. செங்கல்பட்டைச் சேர்ந்த திருவள்ளூர் வட்டத்தில் அவ்வூர் உள்ளது.

## முற்றம்

வாயிலைப்போலவே முற்றம் என்ற சொல்லும் சில ஊர்ப்பெயர்களில் அமைந்திருக்கக் காணலாம். சங்க இலக்கியத்தில் குளமுற்றம் என்ற ஊர் குறிக்கப்பட்டிருக்கிறது. கோக்குளமுற்றத்தைச் சேர்ந்த புலவர் கோக்குளமுற்றனார் என்று பெயர் பெற்றார். கும்பகோணத்துக்கு நான்கு மைல் தூரத்தில் சத்திமுற்றம் என்னும் ஊர் உள்ளது. பழமை வாய்ந்த சத்திமுற்றத்தில் தோன்றிய புலவர் ஒருவர் நாரையைக் குறித்து நல்லதோர் பாட்டிசைத்துத் தமிழ் இலக்கியத்தில் இடம்பெற்றார். அவரைச் சத்திமுற்றப் புலவர் என்று தமிழகம் பாராட்டுகின்றது.

## குடி

குடி என்னும் சொல் ஊர்ப் பெயர்களில் அமைந்து குடியிருப்பை உணர்த்துவதாகும். உறவுமுறையுடைய பல குடும்பத்தார் ஒரு குடியினராகக் கருதப்படுவர். இத்தகைய குடியினர் சேர்ந்து வாழுமிடம் குடியிருப்பு என்றும், குடி என்றும் சொல்லப்படும்.

Scanned with CamScanner

தஞ்சை நாட்டில் பேரளத்துக்கருகே சிறுகுடி என்னும் ஊர் உள்ளது. இளையான்குடியிற் பிறந்தமாறன் என்ற திருத்தொண்டர் இளையான்குடிமாறன் என்று பெரியபுராணத்தில் பேசப்படுகின்றார். மற்றொரு சிவனடியாராகிய சிறுத்தொண்டர் பிறந்த ஊர் செங்காட்டங்குடியாகும். இன்னும் தேவாரத்தில் கற்குடி, கருக்குடி, விற்குடி, வேள்விக்குடி முதலிய பல குடியிருப்புக்கள் பாடல் பெற்றுள்ளன. நெல்லை நாட்டில் திருக்குறுங்குடி என்னும் வைணவத் திருப்பதி ஒன்று உண்டு. திராவிட மொழி நூலின் தந்தையென்று புகழப்படுகின்ற கால்டுவெல் ஐயர் ஐம்பதாண்டுகளுக்கு மேலாக அரும்பணி செய்த இடம் இடையன்குடியாகும்.

**இருப்பு இருக்கை**

இருப்பு, இருக்கை முதலிய சொற்களும், சிறுபான்மையாக ஊர்ப் பெயர்களில் காணப்படுகின்றன. தஞ்சைநாட்டில், புன்னை இருப்பு, வேட்டக்காரன் இருப்பு முதலிய குடியிருப்புகள் உண்டு. தொண்டை நாட்டில் உள்ள ஓரிக்கை என்னும் ஊரின் பெயர் ஓரிரவிருக்கை என்பதன் சிதைவென்று சொல்லப்படுகின்றது.

**சேரி**

பல குடிகள் சேர்ந்து வாழ்ந்த இடம் சேரி என்று பெயர் பெற்றது. பள்ளர் வாழுஞ்சேரி பட்சேரி எனப்படும். பறையர் வாழுமிடம் பறைச்சேரி. ஆயர் வாழுமிடம் பார்ப்பனச்சேரி. எனவே, சேரி என்னும் சொல் ஒரு குலத்தார் சேர்ந்து குடியிருந்து வாழும் இடத்தினை முற்காலத்தில் குறிப்பதாயிற்று. சோழ மண்டலக்கரையில் புதிதாகத் தோன்றிய ஒரு சேரி புதுச்சேரி என்று பெயர் பெற்றது. அவ்வூர்ப் பெயரை ஐரோப்பியர் பாண்டிச்சேரியாகத் திரிந்துவிட்டனர். இக்காலத்தில் சேரி என்னும் சொல் இழிந்த வகுப்பினராக எண்ணப்படுகின்ற பள்ளர், பறையர் முதலியோர் வசிக்கும்



இடங்களைக் குறிக்கின்றது. ஒவ்வொரு ஊரிலும் சேரியுண்டு. அது ஊரின் புறத்தே தாழ்ந்த வகுப்பார்க்கு உரியதாக அமைந்திருக்கின்றது.

**ஊரும் தொழிலும்**

பயிர்த்தொழிலே பழந்தமிழ்நாட்டில் பழுதற்ற தொழிலாகக் கருதப்பட்டதெனினும் கைத்தொழிலும் பல இடங்களிற் சிறந்திருந்ததாகத் தெரிகின்றது. நெய்யும் தொழில் தமிழ்நாட்டுப் பழந்தொழில்களில் ஒன்று. பட்டாலும், பருத்தி நூலாலும், கம்பளத்தாலும் நேர்த்தியான ஆடை நெய்யவல்ல குலத்தார் காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்தனர் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. இன்னோரன்ன தொழில்கள் நிகழ்ந்த இடங்களைச் சில ஊர்ப் பெயர்களால் அறியலாம்.

கூறை என்னும் சொல் ஆடையைக் குறிக்கும். கூறை நெய்யும் தொழில் மிகுதியாக நடைபெற்ற நாடு கூறை நாடு என்று பெயர் பெற்றது. அந்நாடு இப்பொழுது ஒரு சிற்றூராகக் கொரநாடு என்னும் பெயர்கொண்டு மாயவரத்தின் ஒரு சார் அமைந்துள்ளது. நெய்யும் தொழிலைச் செய்யும் வகுப்பார் சாலியர் எனப்படுவர். அன்னார் சிறப்புற்று வாழ்ந்த இடங்கள் ஊர்ப்பெயர். அன்னார் சிறப்புற்று வாழ்ந்த இடங்கள் ஊர்ப்பெயர்களால் விளங்கும். தஞ்சாவூருக்கு அருகே சாலியமங்கலம் என்னும் ஊர் உள்ளது. அங்கு நெசவுத் தொழில் இன்றும் நடைபெறுகின்றது.

**பேட்டை**

இங்ஙனம் தொழில்களால் சிறப்புற்ற ஊர்கள் பேட்டையெனப்படும். சேலத்தின் மேல்பாகத்தில் செவ்வாய்ப்பேட்டை என்னும் சிற்றூர் உள்ளது. வாரந்தோறும் செவ்வாய்கிழமையில்

Scanned with CamScanner

சந்தை கூடும் இடமாதலால் அது அப்பெயர் பெற்றது என்பர். திருநெல்வேலிக்கு மேற்கே பேட்டை என்ற பெயருடைய ஓர் ஊர் உண்டு. பலவகையான பட்டடைகள் அங்கு இன்றும் காணப்படும்.

ஐரோப்பிய இனத்தவருள் போர்ச்சுகீசியரைத் தமிழ்நாட்டார் பரங்கியர் என்று அழைத்தனர். ஆங்கில வர்த்தகக் கம்பெனியார் இந்நாட்டில் ஆதிக்கம் பெறுவதற்கு முன்னமே பரங்கியர் வாணிகம் செய்து வளமுற்றிருந்தனர். அவர்களால் திருத்தப்பட்ட ஊர்களில் ஒன்று தென்னார்க்காட்டிலுள்ள பரங்கிப் பேட்டையாகும். சிங்கப்பூர், சிங்களம் முதலிய நாடுகளோடு கடல்வழியாக வர்த்தகம் செய்யும் சோழ மண்டலத் துறைமுகங்களில் பரங்கிப் பேட்டையும் ஒன்று. ஆடை நெய்தலும், பாய் முடைதலும் அங்கு நடைபெறும் கைத்தொழில்கள்.

சென்னை மாநகரத்தில் சில பேட்டைகள் உண்டு. தண்டையார்ப்பேட்டை, வண்ணார்பேட்டை, சிந்தாதிரிப்பேட்டை முதலிய இடங்கள் கைத்தொழிலின் சிறப்பினால் பேட்டையென்று பெயர் பெற்றன. தண்டையார்ப் பேட்டையில் இப்பொழுதும் நெய்யும் தொழில் நடந்து வருகிறது. கம்பெனியார் காலத்தில் சில குறிப்பிட்ட ஆடைகளைக் கைத்தறியின் மூலமாகச் செய்வதற்கென்று ஏற்படுத்தப்பட்ட ஊர் சிந்தாதிரிப் பேட்டையாகும்.

தஞ்சை நாட்டிலுள்ள அய்யம்பேட்டையும், அம்மாபேட்டையும் நெசவுத் தொழிலாளர் நிறைந்த ஊர்கள். அய்யம்பேட்டையில் நூலாடையோடு பட்டாடையும் கோரைப்பாயும் செய்யப்படுகின்றன.

மன்னார் கடற்கரையில் முத்துப்பேட்டை என்னும் ஊர் உள்ளது. கடலில் மூழ்கி முத்தெடுக்கும் பரதவர் முன்னாளில் அங்கே சிறந்திருந்தார்கள். முத்துவேலை நிகழ்ந்த இம்முத்துப்பேட்டையென்ற பெயர் பெற்றது. இப்பொழுது அங்குள்ள மகமதியர் சங்குச் சலாபத்தை நடத்தி வருகின்றார்கள்.



வட ஆர்க்காட்டிலுள்ள வாலாஜாபேட்டை முகமது அலியின் பெயரால் நிறுவப்பெற்ற நகரமாகும். பதினெட்டுப் பேட்டைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கிய அந்நகரம் பஞ்சு வியாபாரத்திலும், கூல வாணிகத்திலும் முன்னணியில் நின்றது. இக்காலத்தில் வாணிகம் குறைந்துவிட்டாலும் கைத்தொழில் நடைபெற்று வருகின்றது.

### சாலை

பாண்டிநாட்டில் கொற்கைத்துறை பழங்காலத்தில் சிறந்திருந்த தன்மையை முன்னரே கண்டோம். வாணிபம் செழித்தோங்கி வளர்வதற்கு நாணய வசதி வேண்டும். ஆதலால் கொற்கையூரின் அருகே அக்கசாலையொன்று அமைக்கப்பெற்றது. நாணயம் அடிக்கும் இடமாகிய அக்கசாலையை உடைய ஊரும் அக்கசாலை என்று பெயர் பெற்றது. முதற்குலோத்துங்கசோழன் சாசனத்தில் அக்கசாலை ஈச்சுரமுடையார் கோயில் குறிக்கப்படுதலால் பன்னிரண்டாவது நூற்றாண்டின் தொடக்கம்வரை அவ்வூர் அழிவுறாதிருந்ததென்பது விளங்கும். அச்சாசனம் அக்கசாலைப் பிள்ளையார் கோவிலிற் காணப்படுகின்றது.

### பழமையும் புதுமையும்

சில ஊர்களின் பழமையும் புதுமையும் அவற்றின் பெயர்களால் அறியப்படும். நெல்லை நாட்டில் பழவூர் என்பது ஓர் ஊரின் பெயர். தேவாரத்தின் பழையாரை என்னும் ஊர் பாடல் பெற்றுள்ளது. இராமநாதபுரத்தில் பழையகோட்டை என்னும் அடைமொழியைப் பெரும்பாலும் பெற்று வழங்கும். புத்தூர் என்று பெயர்பெற்ற ஊர்கள் தமிழ்நாட்டிற் பலவாகும். இன்னும், புதுக்கோட்டை, புதுச்சேரி, புதுக்குடி, புதுக்குளம், புதுப்பேட்டை, புதுவயல் முதலிய ஊர்ப்பெயர்களால் அவ்வூர்கள் புதிதாக எழுந்தவை என்பது போதரும்.

Scanned with CamScanner

**கிழக்கும் மேற்கும்**

சில ஊர்களின் திசையை அவற்றின் பெயரால் நன்கறிதல் கூடும். இலக்கியத் தமிழில் குணக்கு என்பது கிழக்கு, குடக்கு என்பது மேற்கு, இவ்விரு சொற்களும் சில ஊர்ப்பெயர்களிலே காணப்படும். ஒரு காலத்தில் சோழ நாட்டின் தலைநகரமாக விளங்கிய ஜெயங்கொண்ட சோழபுரத்துக்குப் பத்துமைல் தூரத்தில் உள்ள ஊர் குணவாசல் என்று பெயர் பெற்றுள்ளது. தஞ்சைநாட்டில் குடவாசல் என்பது ஓர் ஊரின் பெயர். முன்னாளில் சிறந்து விளங்கிய ஒரு நகரத்தின் மேற்குத் திசையில் அவ்வூர் அமைந்ததுபோலும். இன்னும் குடகு என்னும் நாடு தமிழ்நாட்டின் மேற்கு எல்லையாக விளங்கிற்றென்று இடைக்காலத் தமிழ் இலக்கணம் கூறுகின்றது. தமிழகத்தின் மேற்றிசையில் அமைந்த காரணத்தால் தமிழ்நாட்டார் அதனைக் குடகு என்று அழைத்தார்கள். கிழக்கு, மேற்கு என்னும் சொற்களும் சில ஊர்ப்பெயர்களிலே காணப்படுகின்றன. நாகப்பட்டினத்துக்கு அருகேயுள்ள வேளூர், கீழ்வேளூர் என்று அழைக்கப்படுகின்றது. அவ்வூரின் பெயர் இப்பொழுது கீவளூர் என்று சிதைந்துள்ளது.

மலாடு என்னும் பழைய நாட்டின் தலைநகராக விளங்கிய ஊர் கீழூர் ஆகும். பாண்டிநாட்டுக் கரையில் உள்ள கீழக்கரை என்னும் துறையும், மதுரையிலுள்ள கீழக்குடி என்னும் ஊரும் திசைப் பெயர்களைத் தாங்கி நிற்கின்றன. மதுரையிலுள்ள மேலூரும், வட ஆர்க்காட்டிலுள்ள மேல்பாடியும் இன்னோரன்ன பிறவும் மேற்குத் திசையைக் குறிப்பனவாகும்.



**வடக்கும் தெற்கும்**

இங்ஙனமே வடக்கும் தெற்கும் சில பெயர்களில் அமைந்துள்ளன. தமிழ்நாட்டுக்கு வடக்கேயுள்ள நாட்டை வடுகு என்றழைத்தனர் பண்டைத்தமிழர். வடதிசை மருங்கின் வடுகு வரம்பாக என்று பாடினார் ஒரு பழம் புலவர். வடபாதி மங்கலம் முதலிய ஊர்களிலும் வடக்கைக் காணலாம். தமிழகத்தின் தென்பால் அமைந்த பாண்டிநாடு தென்னாடு என்று பெயர் பெற்றது. அந்நாட்டிலுள்ள தென்காசி, தென் திருப்பேரை முதலிய ஊர்கள் தெற்கே எழுந்தவை என்பது தெளிவாகும்.

**தலை, இடை, கடை**

இன்னும், ஊர்களின் அமைப்பைக் கருதி, தலை, இடை, கடை என்னும் அடைமொழிகள் அவற்றின் பெயரோடு இணைக்கப்பட்டுள்ளன. தலையாலங்கானம், தலைச்செங்காடு என்னும் பாடல்பெற்ற ஊர்களின் பெயரில் தலையென்னும் அடைமொழி அமைந்துள்ளது. சேலம் நாட்டில் தலைவாசல் என்பது ஓர் ஊர். தஞ்சையில் தலைக்காடு என்னும் ஊரும், ஆர்க்காட்டில் தலைவாய் நல்லூர் என்னும் ஊரும் காணப்படுகின்றன.

இடையென்னும் அடைமொழியைக் கொண்ட ஊர்களில் மிகப் பழமைவாய்ந்தன திருவிடைமருதூர், திருவிடைச்சுரம், இடையாறு முதலியனவாம். இவை மூன்றும் தேவாரப்பாடல் பெற்றுள்ளன. இடைக்காடு என்னும் ஊரிலே பிறந்த புலவர் ஒருவர் இடைக்காடர் என்று பண்டை இலக்கியத்தில் பேசப்படுகின்றார். அரிசில் ஆற்றுக்கும், திருமலைராயன் ஆற்றுக்கும் இடையேயுள்ள ஊர் இடையாற்றங்குடி என்னும் பெயர் பெற்றுள்ளது. இன்னும் இடையென்று பொருள்படுகின்ற நடு என்னும் சொல், நெல்லை நாட்டிலுள்ள நடுவக்குறிச்சி, சோழநாட்டிலுள்ள நடுக்காவேரி முதலிய ஊர்களின் பெயரில் அமைந்திருக்கக் காணலாம்.

Scanned with CamScanner

இனி, கடையென்னும் அடையுள்ள ஊர்ப்பெயர்கள் சில உண்டு. சேலம் நாட்டிலுள்ள கடைக்கோட்டூரும், தென்ஆர்க்காட்டிலுள்ள கடைவாய்ச் சேரியும், நெல்லைநாட்டிலுள்ள கடையமும் இதற்கு எடுத்துக்காட்டாகும்.

### பெரியதும் சிறியதும்

பெருக்கமும் சுருக்கமும் சில ஊர்ப்பெயர்களிலே பொருந்தி நிற்கக் காணலாம். கொங்கு நாட்டில் முற்காலத்தில் பெரியதோர் ஊராக விளங்கியது பேரூர் ஆகும். தஞ்சைநாட்டிலுள்ள பேரளம் என்னும் ஊரும், திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த பெரும்புலியூரும் பெரிய ஊர்களாக இருந்திருக்க வேண்டுமென்று தெரிகின்றது. சிறிய ஊர்கள் சிற்றூர் என்று பெயர்பெற்றன. அத்தகைய சிற்றூர்களில் ஒன்று இப்பொழுது சித்தூர் என்னும் பெயரோடு ஒரு ஜில்லாவின் தலைநகராக விளங்குகின்றது. வட ஆர்க்காட்டில் சிற்றாமூர் என்னும் பெயருடைய ஊர் சமணர்களால் பெரிதும் போற்றப்படுவதாகும். பழைய சிவஸ்தலங்களில் ஒன்று சிற்றேமம் என்று பெயர்பெற்றது. அது திரு என்னும் அடை கொண்டு திருச்சிற்றேமம் ஆயிற்று. நாளடைவில் அப்பெயர் திரிந்து திருச்சிற்றம்பலம் என வழங்குகின்றது.

### மேடும் பள்ளமும்

சில குடியிருப்புக்களின் தன்மையை அவற்றின் பெயர்கள் அறிவிக்கின்றன. மேட்டில் அமைந்த ஊர்களையும் பள்ளத்தில் அமைந்த ஊர்களையும் ஊர் பெயர்களால் உணரலாம். சோழ மண்டலக் கரையில் அமைந்துள்ள கள்ளிமேடு என்னும் ஊர் முற்காலத்தில் கள்ளிகள் அடர்ந்து மேடாக இருந்த இடமென்று தெரிகின்றது. புதுச்சேரிக்கு வடக்கே கடற்கரையில் கூனிமேடு என்னும் ஊர் உள்ளது. இன்னும் சேலத்திலுள்ள மேட்டூரும், நீலகிரியிலுள்ள மேட்டுப்பாளையமும் மேடான இடங்களில் அமைந்த ஊர்களேயாகும்.



திட்டை, திடல் முதலிய சொற்களும் மேட்டைக் குறிப்பனவாம். தஞ்சை நாட்டில் திட்டை என்பது ஒரு ஊர். இன்னும் நடுத்திட்டு, மாளிகைத் திடல், பிள்ளையார் திடல், கருந்திட்டைக்குடி முதலிய ஊர்கள் தஞ்சை நாட்டில் உண்டு.

பள்ளம் என்னும் சொல் பல ஊர்ப் பெயர்களில் அமைந்துள்ளது. பெரும் பள்ளம், இளம் பள்ளம், ஆலம் பள்ளம், எருக்கம் பள்ளம் முதலிய ஊர்கள் தஞ்சைநாட்டில் காணப்படும். நெல்லை நாட்டிலுள்ள முன்னீர்ப் பள்ளமும், இராமநாதபுரத்திலுள்ள பள்ளத்தூரும், பள்ளத்தாக்கான இடங்களில் அமைந்திருந்த ஊர்கள் போலும்.

குழி என்னும் சொல்லும் பள்ளத்தைக் குறிக்கும். கருங்குழி, ஊற்றுக்குழி, அல்லிக்குழி, பள்ளக்குழி, குழித்தலை முதலிய ஊர்கள் தமிழ்நாட்டின் பல பாகங்களில் அமைந்துள்ளன. இன்னும் பள்ளத்தைக் குறிக்கும் தாழ்வு என்னும் சொல் தாவு எனச் சிதைந்து சில ஊர்ப் பெயர்களிலே வழங்குகின்றது. கருங்குழித்தாவு, பணிக்கத்தாவு முதலிய ஊர்ப் பெயர்கள் இதற்குச் சான்றாகும்.

### களம்

இனி, களம் என்னும் சொல்லால் குறிக்கப்படும் ஊர்கள் சிலவற்றைக் காண்போம். பொதுவாகக் களம் என்பது சமவெளியான இடத்தைக் குறிக்கும். சிதம்பரத்துக்கு அருகேயுள்ள திருவேட்களம் என்னும் ஊர் தேவாரப்பாடல் பெற்றுள்ளது. ஈசனாரிடம் பாசுபதாஸ்திரம் பெறக்கருதிய அர்ச்சுனன் அவர் அருளைப் பெறுதற்கு நெடுங்காலம் வேட்டகளம் திருவேட்களம் என்று பெயர் பெற்றதென்பர். அக்களமே இப்பொழுது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் இருப்பிடமாக அமைந்திருக்கின்றது. சேர நாட்டிலுள்ள திருவஞ்சைக் களம் சேரமான் பெருமாள் காலத்தில்

Scanned with CamScanner

சிறந்ததோர் திருநகராக விளங்கிற்று. அஞ்சைக் களத்தில் அமர்ந்த ஈசனைச் சேரமான் தோழராகிய சுந்தரர் பாடிப் பரவினார். இன்னும் திருநாவுக்கரசரால் பாடப் பெற்ற நெடுங்களம் என்னும் நகரின் சிறப்பினை முன்னரே கண்டோம்.

களம் என்ற சொல்லின் அடியாகப் பிறந்த களத்தூர் என்பதும் ஊர்ப்பெயராகக் காணப்படுகின்றது. புகழேந்திப் புலவர் என்னும் தமிழ்க்கவிஞர் பிறந்தவூர் களத்தூராகும். ஏனைய களத்தூர்களுக்கும் அவர் பிறந்த களத்தூருக்கும் வேற்றுமை தெரிதற்காகப் பொன் விளைந்த களத்தூர் என்று அவ்வூரைக் குறித்துள்ளார்கள்.

- - -

5

## *வேளாண்மை வழக்காறுகள் — மழை*

*- முனைவர் சி.மா. இரவிச்சந்திரன்*

இன்றைய மக்கள் புதிய புதிய அறிவியல் கண்டறிதல்கள் அசுரவேகத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் காலகட்டத்திரல் வாழ்ந்து கொண்டுள்ளனர். தமிழக வேளாண்மை என்ற பரந்துபட்ட களத்தில் மரபுவழிப்பட்ட பல கூறுகள் நாளுக்கு நாள் மாறிவருகின்றன. எனவே மரபு என்ற ஒரு அடிப்படையில் மட்டுமே வேளாண்மை வழக்காறுகளை இனம்காண இயலாது. ஏற்கனவே வரையறுக்கப்பட்டுள்ள வேளாண்மை சார்ந்த பாடல்கள், கதைகள், சடங்குகள், வழிபாடுகள், பழமொழிகள் போன்றவற்றை வேளாண்மை வழக்காறுகளாக இனம் காண்பதில் பெருத்த சிக்கல் எழ வாய்ப்பில்லை. ஆனால் நாட்டுப்புறவியல் துறை கடலளவு விரிந்து பரந்த எல்லைகளை உடையது. மேற்கண்ட ஒருசில வழக்காறுகளை மட்டும் மீண்டும் மீண்டும் பதிவுசெய்வதன் மூலமும் விளக்குவதன் மூலமும் தமிழ் நாட்டுப்புறவியல் துறை வளம்பெறாது. எனவே வேளாண்மை என்ற களத்தில் புதிய வழக்காறுகள் களஆய்வில் கண்டறியப்பட்டு விளக்கப்படும்போதுதான் நாட்டுப்புறவியலின் வெவ்வேறு பரிமாணங்கள் வெளிப்படும்.

Scanned with CamScanner

பொதுவாக வேளாண்மை சார்ந்த மக்களின் வாழ்வியல், நடைமுறையில் வழக்கில் உள்ள மரபுவழிப்பட்ட வேளாண்மை சார்ந்த கூறுகள், வழக்கிழந்த மரபுவழிப்பட்ட கூறுகள், வேளாண்மையில் குழுவை அடையாளப்படுத்தும் கூறுகள், சூழல் சார்ந்த தொழில்நுட்பங்கள், வேளாண்மைசார் வாய்மொழிசார்ந்த மற்றும் வாய்மொழி சாராத வழக்காறுகள் போன்றவைகளை வேளாண்மை வழக்காறுகளாகக் கொள்ளலாம். இந்த அடிப்படையில் வேளாண்மையின் அச்சாணியாகத் திகழும் மழை சார்ந்த வழக்காறுகளைப் பதிவு செய்வதற்கான ஆய்வு முறையியலை உருவாக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு மழைசார் வழக்காறுகள் இக்கட்டுரையில் தொகுக்கப்பட்டு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**மழை - அறிகுறி**

மழைக்கான வானிலை மாற்றங்களைக் கண்டறிவதற்கு உதவும் பல பழக்கங்களும் அது தொடர்பான வழக்காறுகளும் உழவர்களிடம் உள்ளன.

அமாவாசை, பௌர்ணமி முடிந்தபின்னர் தோன்றும் நிலவினை முறையே வளர்பிறை என்றும் தேய்பிறை என்றும் குறிப்பிடுவர். தைமாதம் மூன்றாம் நாள் வளர்பிறையின் இரண்டு முனையின் அளவினைக் கொண்டு அந்த ஆண்டின் மழைவளத்தை அளவிடும் வழக்கம் சேலம் பகுதிகளில் வழக்கிலுள்ளது. வளர்பிறையின் வடதிசை முனை (வடகொம்பு) உயர்ந்திருந்தால் நல்ல மழை பெய்து விளைச்சல் பெருகும் என்று கருதுகின்றனர். "வடகொம்பு ஒசந்தா வரப்பெல்லா நெல்விளையும்; தென் கொம்பு ஒசந்தா தெருவெல்லாம் கூடை தூக்கணும்" என்ற வழக்காறு இந்நம்பிக்கையைச் சுட்டுகிறது. இவ்வாறே நிலவினையும்



சூரியனையும் சுற்றித் தோன்றும் வட்டத்தின் இடைவெளியை வைத்தும் மழைவளத்தை அளவிடுகின்றனர். நிலவிற்கும் சூரியனுக்கும் மிக அருகில் வட்டம் வளைந்திருந்தால் காலம் கடந்து மழைவரும் என்றும் நிலா, சூரியனுக்கும் வட்டத்திற்கும் இடையே இடைவெளி அதிகம் இருந்தால் விரைவில் மழைவரும் என்றும் நம்புகின்றனர். "தூர கோட்டம் வளைச்சிருக்கு கிட்ட மழைவரும்" என்ற வழக்காறு இந்த நம்பிக்கையைச் சுட்டுகிறது. கோட்டை வட்டம் தூரமாக இருந்தால் நான்கு ஆள் செய்யவேண்டிய வயல் வேலைகளை எட்டு, ஒன்பது ஆட்கள் மூலம் விரைவில் முடித்து விட்டு மழைக்காகக் காத்திருப்பது உழவர் வழக்கம்.

வடகிழக்கு மூலையை ஜலமூலை, ஈசானிமூலை, சனிமூலை என்று பலவாறு குறிப்பிடுவர். அந்த மூலையில் கார்மேகம் காணப்படின் மழைவரும் என்று உறுதியாகக் கருதுகின்றனர். "ஜலமூலயில கார் கட்டிருக்கு; கண்டிப்பா மழைவரும்" என்பது உழவர் வழக்கு. இவ்வாறே மின்னலின் வண்ணத்தைக்கொண்டும் மழையின் தன்மையை அளவிடுகின்றனர். மின்னல் அருகில் மின்னினால் அதிக வெளிச்சமாகவும் தூரத்தில் மின்னினால் ஒளிகுறைவாகவும் அமைதியாகவும் காணப்படும். ஒளிகுறைந்த அமைதியான மின்னலை ஊமைமின்னல் என்று குறிப்பிடுகின்றனர். ஊமைமின்னல் தென்கிழக்கு மூலையில் அடிவானத்தில் புலப்பட்டாலும் மழைவரும் என்ற நம்பிக்கை உள்ளது.

இவ்வாறே மழைக்காலங்களில் காற்றோட்டம் குறைவாகவும் வெயில் தூக்கலாகவும் இருப்பது மழைக்கான அறிகுறியாகக் கருதுகின்றனர். "வெயில் கருக்குன்னு அடிக்குது; ஒரே புழுக்கமா இருக்குது" என்று இம்மழைச் சூழலைக் குறிப்பிடுவது வழக்கம். இவ்வழக்கம் புரட்டாசி ஐப்பசி மாத வெயிலுக்கு மட்டுமே பொருந்தும் என்றும் வைகாசி மாத வெயிலுக்குப் பொருந்தாது என்றும் குறிப்பிடுகின்றனர். மழைக்காலங்களில் பகல்நேரங்களில் வானம்

Scanned with CamScanner

திடீரென்று இளஞ்சிவப்பு நிறமாக மாறுவதும் மழை வருவதற்கான அறிகுறியாகக் குறிப்பிடுகின்றனர். இதனை 'செம்மானம் பூத்திருச்சு' என்று குறிப்பிடுவர். இவ்வாறே இரவு நேரங்களில் வானில் நட்சத்திரங்கள் மறைந்திருப்பதும் மழைக்கான அறிகுறியாகவே மக்கள் கருதுகின்றனர். பனிபொழியும் நாட்களில் பனியின் குளிர் குறைவதும் மழைக்கான அறிகுறி. "பனி கண்திறப்பின் மழைக்கண் திறக்கும்" என்பது வழக்கு.

மனிதனைவிட மிருகங்கள் சுற்றுப்புறச்சூழலில் ஏற்படும் மாற்றங்களை உடனடியாக உணரக்கூடியவை என்பது உழவர்களின் நம்பிக்கை. கோழி எருக்குழியருகே இறகை விரித்து வெயில் காய்வதும், வறத்தவளை கத்துவதும், ஈசல் பறப்பதும், தட்டான் பூச்சி நிலத்தை ஒட்டித் தாழ்வாகப் பறப்பதும், எறும்புகள் தான் சேகரித்த உணவுகளையும் முட்டைகளையும் மேட்டுநிலத்திற்கு எடுத்துச் செல்வதும் மழைக்கான அறிகுறிகள் என மக்கள் நம்புகின்றனர்.

## திசை - காற்று - மழை

சித்திரை மாதம் முதல் ஆவணி மாதம் வரை வீசும் காற்றைக் கோட காத்து (கோடைக் காற்று) என்பர். கோடைக் காற்று மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வீசுகிறது. இக்காற்று ஆடி மாதத்தில் உச்ச நிலையை அடைகிறது. ஆடிக்காத்தில் அம்மியும் பறக்கும் என்பது வழக்கு. ஆடிமாதத்தில் கடுமையாகக் காற்று வீசினால் பருவமழை நன்றாகப் பெய்யும் என்று மக்கள் எண்ணுகின்றனர். சித்திரை மாதக் கோடைக்காற்று வெப்பமிகுதியாக இருக்கும். அது மண்ணின் ஈரப்பதத்தைக் குறைத்துவிடும். அதனால் பயிர்களுக்கு நீர் அதிகம் பாய்ச்ச வேண்டியதிருக்கும். "கோடைக்காத்து கிணத்துத் தண்ணிய கொண்டுட்டு போயிடும்" என்பது ஒரு பேச்சு வழக்கு.



*சித்திரையில் சீர் கூட்டி, வைகாசியில் வாதொறந்து*
*ஆனியில காத்தடிச்சு, ஆடியில அடியடின்னு அடிச்சு*
*பெரட்டாசியில பெரண்டுஉருண்டு போயிடும்*

என்ற பேச்சு வழக்கு கோடைக்காற்றின் இயல்பைப் புலப்படுத்துகிறது.

விவசாயத்திற்குப் பயிர்செய்யச் சிறந்த பருவம் ஆடி, ஆவணி மாதம். இம்மாதங்களில் பெய்யும் மழையை மேற்கத்தி மழை அல்லது கோடை மழை என்பர். இம்மழை விட்டுவிட்டுப் பெய்யும் இயல்புடையது. எனவே பயிர் முளைப்பதற்கும் கதிர்கள் பால்பிடிப்பதற்கும் இம்மழை பெரிதும் உதவும். அதன்பிறகு புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் கிழக்கு திசையிலிருந்து பருவமழை பெய்கிறது. இம்மழை பயிர்கள் வளமாக வளர உதவுகிறது.

*மேற்கத்தியான் வெதச்சிக் கொடுப்பான்*
*கிழக்கத்தியான் அறுத்துக் கொடுப்பான்*

என்ற வழக்காறு பயிர்விதைப்பிற்கு மேற்கத்தி மழையும் பயிர் விளைச்சலுக்கு கிழக்கத்தி மழையும் உதவுவதைச் சுட்டி நிற்கிறது.

## தமிழ் மாதங்கள் - மழை

புரட்டாசி மாதம் அடைமழை பெய்யும் காலம். இம்மாதத்தில் முதல் பதினைந்து நாட்கள் மழை பெய்தால் அடுத்த பதினைந்து நாட்கள் காயும் முன்பதினைந்து நாட்கள் மழையின்றிருந்தால் பின் பதினைந்து நாட்கள் மழை பெய்யும் என்பது ஒரு வழக்கு. இதனை,

*முன்பதினைஞ்சு பெஞ்சா பின் பதினைஞ்சு காயும்*
*முன்பதினைஞ்சு காஞ்சா பின் பதினைஞ்சு பேயும்*

என்பர். எனினும் புரட்டாசி மாதம் முன்பதினைந்து நாட்கள் மழை பொழிவதையே விவசாயிகள் பெரிதும் விரும்புகின்றனர். இதனை,

Scanned with CamScanner

*புரட்டாசிபெய்து பிறக்க வேண்டும்*
*ஐப்பசி காய்ந்து பிறக்க வேண்டும்*

என்பர். மாசி மாதம் பொழியும் மழையை வளமான மழையாகக் கருதி மக்கள் மகிழ்கின்றனர். மாசியில் மழை பொழிந்தால் இரண்டாவது முறையாக நெல் பயிரிடுவர். மாசி மாத மழைவளத்தை "மாசியில் மழை பேஞ்சா, மந்தையெல்லா நெல் வெளையும்" என்ற வழக்காறு சுட்டுகிறது. ஆடி, ஆவணி மாத மழைகள் புன்செய் வேளாண்மைக்கு உரிய மழை. ஆடி மாத மழை விதைப்பிற்கு ஏற்ற மழையாக அமைய வேண்டும் என்று உழவர்கள் எதிர்பார்ப்பார்கள்.

*ஆடியில் அன்னுபேயனும்*
*ஆவணியில் நின்னு பேயனும்*

என்ற வழக்காறு உழவர்கள் ஆடி, ஆவணி மாதங்களில் அளவான நிதானமான மழையை எதிர்நோக்கும் இயல்பைப் புலப்படுத்துகிறது. பங்குனி மாத மழையை வறட்சியின் அறிகுறியாகவே மக்கள் கருதுகின்றனர். இதனை "பங்குனியில் மழைபேஞ்சா பசுகுடிக்கக்கூட தண்ணி இருக்காது" என்ற வழக்காறு காட்டுகிறது.

**மழை அளவிடல்**

'ஒரு பாரல் மழை', 'ஒரொலவு மழை' என்று மழையை அளவிடுகிற பழக்கமும் வழக்கில் உள்ளது. வானில் நகர்ந்து செல்கிற சிறு மேகக் கூட்டங்கள் பொழியும் மழையை ஒரு பாரல் மழை என்கின்றனர். இது மிகக் குறைந்த அளவுடைய மழையைக் குறிக்கும் வழக்காறு. வீட்டின் புழங்கு பொருளான உரலைக்கொண்டும் மழை அளவிடப்படுகிறது. உரலை 'ஒல்லு' என்றும் குறிப்பிடுவர். உரலின் குழிப்பகுதியில் நிறையும் நீரின் அளவைக் கொண்டு ஓரொலவு மழை, அரையொலவு மழை என்று மழை அளவிடப்படுகிறது.



**மழைச் சடங்குகள்**

கொங்குநாட்டில் மழை வேண்டி திருக்கோடி கும்பிடுதல், வனபூசை, எண்ணெய்க் காப்பிடுதல், மழைக்கஞ்சி எடுத்தல் போன்ற பல சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. இச்சடங்குகள் பெரும்பாலும் ஆடி, ஆவணி, புரட்டாசி மாதங்களில் நடைபெறுகின்றன. ஆத்தூர் பகுதி உழவர்கள் மழைக்காக மாயவனுக்கு விளக்கேற்றி வழிபாடு நிகழ்த்துகின்றனர். இவ்வழிபாட்டினை 'திருக்கோடி கும்பிடுதல்' என்று குறிப்பிடுகின்றனர். கிராமங்களில் ஊஞ்சல், வில்வம், வேப்பமரங்கள் அடர்ந்த இடமே மாயவன் கோயிலாகக் கருதப்படுகிறது. அவ்விடத்தில் சிறிய கருங்கல் மேடையில் அமைக்கப்பட்டுள்ள பத்தடி உயரமுள்ள உருண்டையான தூணையே மாயவன் எனக் குறிப்பிடுகின்றனர். இத்தூணைத் திருக்கோடிக் கம்பம் என்றும் குறிப்பிடுகின்றனர். இத்தூணில் நாமம், சங்கு, சக்கரம் வரையப்பட்டிருக்கும். தூணின் மேல் பகுதியில் ஐந்து அல்லது ஆறு லிட்டர் கொள்ளளவு உள்ள விளக்கு ஒரு தாங்கியில் பொருத்தப்பட்டிருக்கும் இக்கோயிலில் பெரிய கட்டிடங்களைக் காண இயலாது. பருவ காலங்களில் மழை பொய்த்துப் போனால் திருக்கோடிக் கம்பத்தில் விளக்கேற்றி வழிபடுகின்றனர். வழிபாடுகள் நடைபெறும் நாளில் அபிஷேகத்திற்காகப் பச்சரிசி மாவுடன் வெல்லம் கலந்து திருக்கோடி மாவு பிடிக்கின்றனர். அத்துடன் பஞ்சாமிர்தமும் சுண்டலும் செய்கின்றனர். பண்டார இனத்தைச் சார்ந்த பூசாரி தன் வாயில் துணியைக் கட்டிக்கொண்டு திருக்கோடிக் கம்பத்தில் உள்ள விளக்கில் எண்ணெய் ஊற்றுகின்றார். வெள்ளைத் துணியைத் திரியாகத் திரித்து விளக்கேற்றுகின்றார். அப்போது வெடிகள் வெடித்து "கோவிந்தா, கோவிந்தா" என்று கூவி மழைவழங்கும்படி வழிபடுகின்றனர். இவ்வழிபாட்டை ஆண்கள் மட்டுமே நிகழ்த்துகின்றனர். பெண்கள் கலந்து கொள்வதில்லை; திருக்கோடி மாவும் உண்பதில்லை. இவ்வாறே வறட்சிக் காலங்களில் ஆத்தூருக்கு அருகில் உள்ள

Scanned with CamScanner

கல்ராயன் மலையில் உள்ள ஆனைவாரிமடுவு என்ற இடத்தில் உள்ள அருவிக்குச் சென்று சிறுதெய்வங்களுக்குச் சேவல் பலியிட்டு வனபூசை நிகழ்த்துகின்றனர்.

கிராமங்களில் ஊர்ப் பொது மேடைகளில் அமைந்துள்ள நாட்டுப்புறத் தெய்வங்களாகக் கருதப்படும் கற்கள் எண்ணெய்ப் பசையில்லாமல் காய்ந்து போவதும் வறட்சிக்கு ஒரு காரணம் என்ற நம்பிக்கையும் வழக்கில் உள்ளது. எனவே பருவமழை தவறிய காலங்களில் நாட்டுப்புறத் தெய்வக் கற்களுக்கு எண்ணெய்க் காப்பிட்டுக் குளிர வைத்தால் மழைபெய்யும் என்ற நம்பிக்கையில் மேற்கொள்ளும் சடங்குகளே எண்ணெய்க்காப்பு வழிபாடாகும்.

மழைபெய்யாத காலங்களில் மழைக்கஞ்சி காய்ச்சுதல் என்ற சடங்கு இரவு நேரங்ளில் பெண்களால் நிகழ்த்தப்படுகிறது. இச்சடங்கன்று மாரியம்மன் கோயிலில் உப்பில்லாமல் கூழ்காய்ச்சுகின்றனர். இக்கஞ்சியை மாரியம்மனுக்குப் படைத்துவிட்டு ஊர்ப்பெண்கள் தங்கள் குழந்தைகளை எடுத்துக்கொண்டு மழையின்றிப் படும் துன்பத்தைப் பற்றிப் பாடிக்கொண்டே வேறு ஊர்களுக்குப் பஞ்சம்பிழைக்கப் போவதாகப் புறப்படுகின்றனர். பிறகு ஆண்கள் சமாதானம் செய்து பெண்களை வீட்டிற்கு அழைத்து வருகின்றனர். சில ஊர்களில் இச்சடங்கன்று பழையசோற்றை மாரியம்மனுக்குப் படைத்துவிட்டுச் சுடுகாட்டிற்குச் சென்று முறம், விளக்குமாறு, உரல், அம்மி போன்ற கருவிகளை எறிந்துவிடுகின்றனர். மழையில்லாததால் இக்கருவிகளுக்கு வேலையில்லை என்பதைக் குறிப்பிடும் வகையில் இச்சடங்கு நிகழ்வுகள் அமைகின்றன.

தொடர் மழையால் விளைச்சல் பாதிக்கும்போது மழையால் பாதிக்கப்பட்ட குடும்பம் இரவில் நிர்வாணமாக நின்று எரியும் கொள்ளிக் கட்டையை வானத்தை நோக்கிக் காட்டிச் சடங்கு நிகழ்த்தி,



தொடர் மழையை நிறுத்த முயல்வர். இது தொடர்மழை நிறுத்தத்திற்கான சடங்கு. இவ்வாறு மழையோடு தொடர்புடைய பல சடங்கு முறைகள் வழக்கில் உள்ளன.

**மழை சார் வழக்காறுகள்**

மழைசார்ந்த பாடல்கள், கதைகள், பழமொழிகள், விடுகதைகள் பல வழக்கில் உள்ளன.

மேகங்களுக்கு மனைவி வீடு கிழக்கிலும் வைப்பாட்டி வீடு மேற்கிலும் இருப்பதாகவும் மேகங்கள் கிழக்குநோக்கிச் சென்றால் மழை வரும் என்றும் மேற்கு நோக்கிச் சென்றால் மழை வைப்பாட்டி வீட்டிற்குச் செல்வதால் மழை வராது என்றும் கதை கூறுவர். இவ்வாறே தென்மேற்கு மூலையில் மின்னலைக் கண்டு வயல் வேலையைத் தொடங்கும் உழவனைப் பார்த்து எருது நகைக்கும் என்ற கதையும் வழக்கில் உள்ளது. தென்மேற்கு மூலையில் மின்னல் மின்னினால் மழை வராது என்பது எருதிற்குத் தெரிகிறது. ஆனால் அது தெரியாது உழவன் மழைவரும் என்று எண்ணி வயல்வேலை செய்வது கண்டு எருது நகையாடுவதாகக் கதை செல்கிறது. இதனால் தென்மேற்கு மூலையையே "கெழுட்டெருது சிரிக்கும் மூலை" என்று நகையாடுவது வழக்கம்.

*"மழைப்பேறும் பிள்ளைப்பேறும்*
*மகாதேவனுக்கும் தெரியாது"*

*"கருக்கல் பொழுதை நம்பாதே*
*கல்யாணசோத்தையும் நம்பாதே"*

*"பொழுதோட வர்றஒரம்பரையும்*
*பொழுதோட வர்ற மழையும்*
*போன்னு சொன்னாலும் போவாது"*

Scanned with CamScanner

போன்ற எண்ணற்ற பழமொழிகளும் 'மழை பேஞ்சி ஓஞ்ச மாதிரி' என்பன போன்ற நாட்டுப்புற உவமைகளும் இன்றும் வழக்கில் உள்ளன. உழவர்களிடையே மழைபற்றிய விடுகதைகளும் வழக்கில் உள்ளன.

*தங்கை விளக்குக் காட்டறாங்க*
*அண்ண மத்தளங் கொட்டறாங்க*
*அம்மா தண்ணி தெளிக்கிறாங்க*
*அது என்ன?*
(விடை : மின்னல், இடி, மழை)

### மழை குறித்த வழக்குச் சொற்கள்

மாரி (மழை), கல்லுமாரி, அத்திக்கட்டி, ஆலங்கட்டி (ஐஸ்கட்டி மழை), தூறல், துரத்தல், சாரல், சிணுங்கல் (சிறுதுளிகள்), பெருமழை, அடைமழை (தொடர்மழை), வெட்டாரிப்பு (மழை பெய்து நின்ற நிலை), மானந்தூக்கிகிச்சு (மழை வராத நிலை), சனிமோடம், கருக்கல், மோடம் போன்ற பல வழக்குச்சொற்களும் உள்ளன.

### முடிவு

இத்தகைய மழைகுறித்த பல வகையான வழக்காறுகள் உழவர்களிடையே பழக்கத்தில் உள்ளன. ஒரு புது ஆண்டு பிறப்பதற்கு முன்பே அப்புது ஆண்டிற்குரிய அரசு விடுமுறை நாட்களைப் பட்டியலிட்டு வெளியிடப்படுவதுபோல மழைபொழியப் போகும் நாடுகளையும் ஊர்களையும் மாதங்களையும் சிலசமயம் தேதிகளையும் நேரங்களையும் கூடத் துல்லியமாகக் கணித்துச் சொல்ல இயலும் அறிவியல் யுகத்திலும் இத்தகைய வழக்காறுகள் வாழ்ந்து கொண்டிருப்பதன்மூலம் மரபின் நீட்சியையும் தேவையையும் அழுத்தமாகவே உணரலாம்.

- - -

6

## இந்தியாவில் வேளாண்மை நாசமானது யாரால், எப்படி ?

*- நம்மாழ்வார்*

இந்திய வேளாண்மை ஆறாயிரம் ஆண்டுகளுக்கு அதிகமான வரலாற்றைக் கொண்டது. ஆறாயிரம் ஆண்டுக் காலமாக எத்தனையோ சோதனைகள் செய்து தனது அறிவை இந்தச் சமுதாயம் சேகரித்து வைத்துள்ளது. இந்த அறிவைத் தொடர்ந்து தன் தலைமுறைகளுக்கு கைமாற்றி வந்துள்ளது. நிலம் தொடர்ந்து வளமேறி வந்திருக்கிறது. கால்நடைகளும் மேம்பட்டு வந்திருக்கின்றன. ஆனால் கடந்த நாற்பதாண்டுகளில், ஆறாயிரம் ஆண்டுக்கால வளர்ச்சி பின்னோக்கித் தள்ளப்பட்டுள்ளது. நாற்பதாண்டுகளுக்கு முன்பு எந்த இடத்தில் நமது வளர்ச்சிப் பாதையைத் தவறிவிட்டோம் என நாமின்று அறிந்து கொள்ள வேண்டும். இன்று உலகம் முழுதும் உயிரினப் பன்மை குறித்துப் பேசுகிறார்கள். இன்று உயிரினப் பன்மை அழிக்கப்படுகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, இரண்டாயிரம் வகை உணவுப் பொருட்களை மக்கள் உண்டார்களாம். ஆனால் இன்று இருபது வகை உணவுகளைத் தான் உண்கிறார்கள். நம்மைப்போல் ஏழை

Scanned with CamScanner

நாடுகளில், மக்கள் தம் வருமானத்தில் 80% அரிசி உணவுக்காகவே செலவு செய்கிறார்கள். அடுத்தபடியாக, எண்ணெய், மிளகாய், புளி ஆகியவற்றுக்காக செலவிடுகின்றனர். இவை உணவு வகைகள் அல்ல. ஆக மக்கள் தம் நலனைத் தொடர்ந்து இழந்து வருகின்றனர். உணவில் பன்முகப் பண்பு இல்லை. எனவே நோய்க்கு இரையாகின்றனர். கடந்த சில பத்தாண்டுகளில் இந்த அவலம் நேர்ந்துள்ளது.

### ஒட்டுரகம்

உணவை உற்பத்தி செய்வது வேளாண்மையின் நோக்கம் என்ற நிலை கடந்த நாற்பதாண்டுகளில் மாறிவிட்டது. சென்னையில் 'விவேகானந்தா கல்லூரி' பொருளாதாரத் துறை பேராசிரியர் வரதராசன் இப்படி கூறுகிறார். "எந்தெந்த ஆண்டுகளில் ஒட்டு ரக விதைகள் அதிகம் பயன்படுத்தப்பட்டதோ அந்தந்த ஆண்டுகளில் ரசாயன உரம் அதிகமாக விற்பனையாகியிருக்கிறது. அதேபோல அந்தந்த ஆண்டுகளில் பூச்சிக் கொல்லிகளும் அதிகம் விற்பனையாகி இருக்கிறது" இந்த மூன்று பொருட்களுக்கிடையில் ஒரு இணைப்பு உண்டு. இவற்றில் எந்த ஒன்று அதிகம் விற்பனையானாலும் அடுத்த இரண்டின் விற்பனையும் அதிகரிக்கும் ஒட்டு வீரிய விதை இங்கு புகுத்தப்பட்டதுதான் எல்லா வகையான தீங்குகளுக்கும் அடிப்படையானதாக இருக்கிறது. ஒட்டு வீரியவிதைகளில் உயிரினப் பன்மை இல்லை. நமது நாட்டில் ஒரு பக்கம் காடுகள். இன்னொரு பக்கம் புல்வெளி. இன்னொரு பக்கம் கடல் சார்ந்த நிலம். இப்படி இருக்க நிலத்தின் பன்முகத் தன்மையை ஒதுக்கிவிட்டு குட்டையான நெல்லின் வீரிய விதையை மட்டும் இங்கு புகுத்தினார்கள். இங்கு மரபுமுறை உழவரின் அனுபவம் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். வெள்ளப் பெருக்கின்போது அந்தக்காலத்து



நெல்வகை வேகமாக வளர்ந்து தண்ணீருக்கு மேல் கதிர் நிற்கும். படகில் போய் நாங்கள் கதிரை அறுத்து வருவோம் என்று நம் விவசாயிகள் கூறினார்கள். உள்நாட்டில் ஏது படகு என்றால் அவர்கள் கூறும் பதில் நெல் அவிக்கும் கொப்பரையை தண்ணீரில் கவிழ்த்து அதிலேறிச் சென்று அறுத்து வருவோம் என்கிறார்கள். இன்று நிலை அவ்வாறில்லை. தஞ்சை மாவட்டத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டால் 12 லட்சம் ஏக்கர் நிலத்தில் 5 லட்சம் ஏக்கர் நிலம் தண்ணீரில் மூழ்கி நெல் அழிந்து போகிறது. இப்படி சுற்றுச்சூழலுக்குப் பொருத்தமில்லாத ஒரே நெல்வகை பல இடங்களிலும் பரப்பியிருக்கிறார்கள்.

### கால்நடை அழிப்பு

உழவரின் வாழ்வில் கால்நடை முக்கியமான பங்கு வகிக்கிறது. கிணற்றிலிருந்து நீரிறைக்க, வண்டியிழுக்க, பயணம் செய்ய கால்நடை பயன்படுகிறது. அதன் சாணியும் சிறுநீரும் எருவாகின்றன. பால் முக்கியமான உணவுப்பொருள் அதிலிருந்து தயிரும் மோரும் நெய்யும் கிடைக்கிறது. இவ்வளவும் தரும் மாட்டுக்கு விவசாயி என்ன தருகிறார்? நெல்லைத் தானெடுத்துக் கொண்டு வைக்கோலைத்தான் அதற்குத் தருகிறார். நெல்லிலிருந்து அரிசியைத் தானெடுத்துக் கொண்டு தவிட்டைத் தான் அதற்குத் தருகிறார். அரிசியைச் சோறாக்கிய பின் கஞ்சியைத்தான் ஊற்றுகிறார். இவ்வாறு மாடு பொருளாதார ரீதியாக பெருத்த நன்மை செய்கிறது. புதிய குட்டை ரக நெல்லைக் கொண்டு வந்தபோது விஞ்ஞானிகள் வைக்கோலை பொருட்படுத்தவில்லை. அவர்கள் உழவர்களின் வாழ்க்கையைப் புரிந்து கொண்டு நெல்லை அறிமுகம் செய்யவில்லை. யாரோ சொன்னதைக் கிளிப்பிள்ளை மாதிரி இங்கே சொல்லி, மக்களை நம்ப வைத்தார்கள். இதன்மூலம் பெரும் சீரழிவைக் கொண்டு வந்தனர். வைக்கோல் இல்லை என்றால்

Scanned with CamScanner

மாடில்லை. மாடில்லை என்றால் உரமில்லை. உரமில்லை என்றால் நிலத்தில் வளமில்லை. விஞ்ஞானிகளை பொறுத்தவரை மாடு என்பதை உழவு என்ற அளவில் சுருக்கிப் பார்த்தார்கள். இவர்கள் வெளிநாட்டு முதலாளிகளுக்கு கையாட்களாக இருந்தனர். அந்த முதலாளிகளுக்கு டிராக்டர் விற்பனையாக வேண்டும் என்றால் இந்தியாவில் மாடிருக்கக்கூடாது. மாடு கூடாது என்றால் வைக்கோல் இருக்கக் கூடாது. ஆக வெளிநாட்டு முதலாளிகளுக்கு இந்திய விஞ்ஞானிகள் பலியானவர்கள். இவர்கள் கருத்தின்படி வெளிநாட்டில் இருப்பதெல்லாம் முன்னேற்றம். இவர்கள் சுயமாகச் சிந்திக்கவில்லை. ஆக இவர்கள் விஞ்ஞானிகள் அல்லர். இது அரசியல். வசதியான வீட்டுப்பிள்ளைகள் வேளாண்மைக் கல்லூரிக்கு படிக்கச் சென்றார்கள். அதிகாரிகளாக வந்தார்கள். விவசாயிகளின் பிரச்சினையை அவர்கள் அனுபவ ரீதியாய் அறியவில்லை.

இன்னொரு உண்மை: ஈரமண்ணின் 60/70 கிலோ எடையுள்ள நாம் நடந்தாலே நிலம் இறுகிவிடும். அந்த மண்ணில் டிராக்டரை ஓட்டினால் என்னவாகும்? காங்ரீட் போட்ட மாதிரி நிலம் மேலும் மேலும் இறுகிவிடும். டிராக்டருடன் இணைக்கப்பட்டுள்ள கொழுக்கள் மேல் மண்ணை மட்டும் தான் கிளரும். அடிமண் மேலும் தொடர்ந்து இறுகும்.

**மண்புழுக்கொலை**

பயிர்கள் பெரும்பாலும் விலங்கு, தாவரக் கழிவுகளைத் தான் தனக்குணவாக எடுத்துக் கொள்கிறது. பட்டறைச் சாமான்களை அது கேட்பதில்லை. மேல்மட்டத்தின் கழிவு கீழ்மட்டத்திற்கு உணவு. மாட்டின் சாணியை கோழி கொத்தித் தின்னும். கோழியின் எச்சத்தை மண்புழு தின்னும். மண்புழு தின்னுமுன் அதை நுண்ணுயிர் தின்னும். மண்புழுவின் எச்சத்தை பயிர் தின்னும். உணவு வளையம் என்று இதைக் கூறுகிறோம். இந்த உணவுச் சங்கிலியில் எந்தக் கண்ணியை



வெட்டினாலும் தீங்கு நேரும். அதாவது வைக்கோல் இல்லை என்றால் சாணியில்லை, புழு இல்லை, கோழி இல்லை இப்படி உயிர் சுழற்சி இருக்கும்போது தான் நிலத்தில் உயிரோட்டம் இருக்கும். நித்தம் நித்தம் உழைக்கும் போது தான் பாரதிதாசன் கூறியபடி அது 'நன்றிலம்'.

நிலத்தில் இப்படி செய்யும்போது மண் இளக்கமுடையதாகிறது. மண்ணிற்குள் நண்டு, எலி, தேள், பூரான் ஆகியவை போகும் தண்ணீர் உள் இறங்கும். நுண்ணுயிர் பெருகும். ஒரு தேக்கரண்டி மண்ணில் 10 லட்சம் நுண்ணுயிர்கள் இருக்கின்றன. நுண்ணுயிர்கள் இருக்கும் மண்ணில்தான் மண்புழு இருக்கும். மண்புழு எப்பொழுதும் மண்ணுக்குள் சுரங்கம் தோண்டிக்கொண்டே இருக்கும். 'மண்புழு விவசாயியின் நண்பன்' என்று நான்காம் வகுப்பில் படித்தோம். ஆனால் வேளாண்மைக் கல்லூரியில் நமக்கென்ன கற்பித்தார்கள். பியுரிடான் குருணையை (உர உருண்டையை) மிளகாய், பருத்திச் செடிக்கு அடியில் வையுங்கள் என்றார்கள். அந்தக் குருணையின் நஞ்சு செடியின் சாறோட்டத்தில் கலந்து 20/30 நாட்களுக்கு பூச்சி அணுகாத படி பார்த்துக்கொள்ளும் என்றார்கள்.

அவர்கள் பூச்சி என்று சொன்னது மண்புழுவைத்தான் என்பதை அப்பொழுது நாம் அறியவில்லை. விவசாயியின் நண்பனான மண்புழுவைக் கொல்வதற்கான உத்தியைத்தான் நமக்குக் கற்றுக் கொடுத்தார்கள். சரியாகச் சொன்னால் மண்புழு விவசாயிகளின் நண்பன்கூட இல்லை. மண்புழுதான் விவசாயி. மண்புழுதான் உழுகிறது. வேருக்கடியில் காற்றோட்டம் ஏற்படுத்துகிறது. சூரிய ஒளியைக் கொண்டு சேர்க்கிறது. நாம் செய்ய வேண்டியது மண்புழுவுக்கு உதவியாக இருப்பது மட்டும்தான். பிற எல்லாம் தானாக நடக்கும். இந்த எளிமையான உண்மையை நாம் மறந்து போனோம். எளிய உண்மை என்பதால் இதை நம்மில் பலர் நம்புவதில்லை.

Scanned with CamScanner

சென்னை புதுக்கல்லூரியில் பணியாற்றும் பேராசிரியர் இஸ்மாயில் பற்றி இங்கு குறிப்பிட வேண்டும். மண்புழுவைப் பற்றி இவர் விரிவாக ஆராய்ச்சி செய்கிறார். மண்புழுவை மேசைமீது வைத்துக்கொண்டு அதன்மீது உணவு உப்பை இடுகிறார். மண்புழு துடிதுடித்து இறக்கிறது. உணவு உப்புக்கே மண்புழு இறக்கும்போது ரசாயன உரத்தை இடும்போது என்னவாகும்? ரசாயன உரம், களைக்கொல்லி முதலியவற்றை நிலத்திலிட்டு நிலத்திலுள்ள உயிரினங்களை நாம் அழிக்கிறோம்.

இயற்கை தானாகச் செய்யும் பல வேலைகளை நம்மால் செய்ய முடியாது. இந்த நிலையில் தான் பொருளாதார ரீதியாக நமக்கு கட்டுப்படி ஆவதில்லை. சுற்றுச்சூழல் நாசமாகியது. கொள்கை ரீதியாக நாம் இவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும். எல்லாவற்றுக்கும் மேற்கு நாட்டைப் பார் என்று சொல்லும் நம் அறிவாளிகள். இயற்கையைப் புதுப்பிக்கும் முறையில் அந்த மேலைநாடுகளிலேயே கடந்த நாற்பதாண்டுகளாக நடைபெற்று வரும் புதுவகை ஆராய்ச்சிகளை கவனிக்கவில்லை.

**கண்டுபிடிப்பே அழிவு**

பிரிட்டீசார் இந்தியாவை ஆண்டபோது 1880-1885 காலத்தில் இந்தியாவில் சுமார் இரண்டு கோடி மக்கள் இறந்தனர். இந்தியாவில் பஞ்சம். ஆகவே இப்படி இறந்தார்கள் என்று உலகம் முழுவதும் செய்தி பரப்பினார்கள். இந்தியாவில் பஞ்சம் என்பது உண்மைதான். அது விளைச்சல் இல்லாமையால் அல்ல. விளைந்ததை எல்லாம் வேறு இடத்திற்கு அனுப்பிட்டதால் தான். உலகம் தன் முகத்தில் கரிபூசும் என்பதால் தான் பொய்யான செய்தியைப் பரப்பினர். இங்குள்ள அரசு லண்டனுக்கு ஒரு கடிதம் எழுதியது. இந்தியாவில் விவசாயம் பிற்போக்கானதாக இருக்கிறது. ஆகவே



இங்கிலாந்திலிருந்து உழவியல் நிபுணர் ஒருவரை அனுப்புங்கள் என்றெழுதினார்கள். ஒரு நிபுணரும் வந்து சேர்ந்தார். ஆறுமாதம் அவர் இந்தியாவைச் சுற்றி வந்த பின்பு அவர் இங்கிலாந்துக்கு எழுதிய கடிதம் இன்று வெளியிடப்பட்டுள்ளது. 'இந்திய விவசாயிகளுக்கு நாம் கற்றுக்கொடுக்க எதுவுமில்லை. இந்திய விவசாயிக்கு எல்லாமே தெரியும். அவர்களிடமிருந்து நான் தான் கற்றுக்கொண்டேன். வேரடியில் காற்றோட்டம் வேண்டும் என்பதைக் கற்றுக்கொண்டேன்' இப்படி கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். மழைவரும் ஒவ்வொரு முறையும் விவசாயிகளைக் கொத்தை எடுத்துப் போய் நிலத்தைக் கிளறுகிறார்கள். ஏனென்றால் மழையின் கனம் தாங்காமல் நிலம் அமுங்கிவிடும். உள்ளே காற்றோட்டம் இருக்காது. நிலத்திற்குள் காற்றுக்கும் தண்ணீருக்கும் இடையிலான சமன் தேவை என்று இப்பொழுது தான் இரண்டொரு இந்திய விஞ்ஞானிகள் இது பற்றி எழுதுகின்றனர்.

பூமியிலுள்ள சத்துக்களைக் கரைத்துச் செடி மேலே உறிஞ்சவேண்டும். அதே நேரத்தில் வேர் சுவாசிக்க வேண்டும். செடி தான் எல்லாப் பக்கங்களிலும் சுவாசிக்கிறது. வேரும் சுவாசிக்கிறது. காற்று அதிகமானால் தண்ணீர் இருக்கமுடியாது. ஆக மண்துகள்கள் குருணை வடிவில் இருக்க வேண்டும். குருணை அடுக்குகளின் இடைவெளியில் காற்றும் தண்ணீரும் இருக்கும். நிலத்தை உழும்போது சுவர் வைக்கிற மாதிரி சேறுதான் கிடைக்கிறது. நாம் உழுவதற்கும் எறும்பு கரையான் உழுவதற்கும் வேறுபாடு இருக்கிறது எறும்பு கறையான் இவை உழும்போது குருணை வடிவம் கிடைக்கிறது.

எல்லா உயிர்களும் சுவாசிக்க வேண்டும் செடியும் சுவாசிக்க வேண்டும். தாவரங்களைப் பொறுத்தவரை தாமே உணவைத் தயாரித்துக் கொள்கின்றன. நாம் உணவைத் தயாரிப்பதில்லை. காற்றிலிருந்து 95% பொருட்களை எடுத்துக்கொண்டு உணவு

Scanned with CamScanner

தயாரிக்கிறது. நீர், வாயு, கரிவாயு, உயிர்வாயு நைட்ரஜன் முதலியவற்றைத் தாவரங்கள் எடுத்துக் கொள்கின்றன. நைட்ரஜன், நீர்வாயு இவை 5% எடுத்துக் கொள்கின்றன. அதிகம் தேவைப்படுவது உயிர் வாயுவும் கரிவாயுவும் தான். கரியை எடுத்து செடி உணவு தயாரிக்கிறது. செடிகளே இல்லை என்றால் எந்த உயிரும் வாழமுடியாது. பிரஞ்சு விஞ்ஞானிகள் கூறுவது போல 80% உணவைக் காற்றிலிருந்து தண்டுகளே எடுத்துக் கொள்கின்றன. வேர்கள் நிலத்தைத் துளைத்துச் சென்று அடியில் பாறையில் உள்ள தாதுக்களை உறிஞ்சுகின்றன. இப்படி உறிஞ்சுவது ஐந்து சதவீதந்தான். ரசாயன உரம் என்பது செடிக்குத் தேவை இல்லை. காற்றுத்தான் செடிக்குத் தேவை. நாம் சாப்பிட்டால் தட்டு காலியாகிறது. செடிகளைப் பொறுத்தவரை அதிலிருந்து உதிர்ந்து விழும் இலைகள் மட்கி மீண்டும் செடிக்கு உணவாகிறது.

இங்கு என் அனுபவத்தைச் சொல்ல விரும்புகிறேன். 1956ல் உயர்நிலை பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன். அப்போதுதான் நிலத்திற்கு எவ்வளவு உரம் போட வேண்டும் என்றெல்லாம் விவசாய அலுவலர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். நமது நெல் லாயக்கில்லை. அதிக விளைச்சல் தேவை என்றால் ஜப்பானிய குட்டை நெல்லைப் பயிரிட வேண்டும் என்றார்கள். பின் ஜப்பானிய, இந்திய நெல் ரகங்களை இணைத்து இன்னொரு குட்டை ரக நெல்லைக் கொடுத்தனர். அமோனியம் சல்பேட் போடச் சொன்னார்கள். விளைச்சல் கூடியது. மூன்றாண்டு இப்படிச் செய்த பின் விளைச்சல் குறைந்தது.

விளைச்சல் ஏன் குறைந்தது என்பதற்கு காரணம் சொன்னார்கள். நைட்ரஜனைக் கொடுத்த அளவு நாம் பாஸ்பரஸ் கொடுக்கவில்லை. பூமியிலிருந்த பாஸ்பரசை பயிர் எடுத்துக் கொண்டது. ஆகவே பாஸ்பரஸ் பற்றாக்குறை வந்திருக்கிறது. சூப்பர்



பாஸ்பேட் போடுங்கள் என்று சொன்னார்கள். இப்படிப் போட்டபின் இரண்டு, மூன்று வருடத்திற்கு விளைச்சல் கூடியது. பின் குறைந்தது. அப்பொழுது என்ன சொன்னார்கள். இந்த இரண்டையும் போட்ட அளவு நாம் பொட்டாஷ் போடவில்லை என்றனர். அப்புறம் பொட்டாஷ் போடப்பட விளைச்சல் கூடியது. பின் குறைந்தது. இந்த மூன்றையும் போட்ட அளவுக்கு துத்தநாகம் போடவில்லை என்றார்கள். அப்புறம் அதுவும் போடப்பட்டது.

நம் விஞ்ஞானிகள் எந்த இடத்தில் இப்படி முட்டாள்தனமாக செயல்பட்டார்கள் என்று பார்க்க வேண்டும். உரங்களைத் தொடர்ந்து இட்டு வந்ததன் விளைவாக மண்ணிலிருந்து நுண்ணுயிர்கள் அழிந்தன. மண்புழுக்கள் இறந்தன. புழுக்கள் வினைபுரியவில்லை. ஆகவே மண்ணில் இருக்கிற சத்துக்கள் செடிகளுக்குக் கிட்டவில்லை உதாரணமாக மணிச்சத்தை மட்டும் விளக்கலாம். P2 05 என்று தான் இதைக் குறிப்பிடுகிறார்கள். ஒரு துகளில் பாஸ்பரஸ் 2 அணு, ஆக்ஸிஜன் 5 அணு இருக்கும். இதை பாஸ்பாரிக்பென்டாக்ஸைடு என்பர் இந்த வடிவத்தில் மட்டுமே செடி எடுத்துக் கொள்ளும் P105 அல்லது P2 04 என்ற வடிவில் செடி எடுத்துக் கொள்ளாது. நிலத்தில் எவ்வளவுதான் பாஸ்பரஸ் இருந்தாலும் 1 முதல் 5% வரைதான் மேற்குறிப்பிட்ட வடிவத்தில் செடி எடுத்துக்கொள்ளும். கிட்டாப் பருவத்தில் உள்ள பரஸ்பரஸ் நிலத்தில் நிறைய இருக்கிறது. இதைச் செடிகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றால் மண்ணில் நுண்ணுயிர்கள் இருக்க வேண்டும். ரசாயன உரங்கள் போடத் தொடங்கியபோதே மண்ணில் நுண்ணுயிர்கள் அழியத் தொடங்கிவிட்டன. விளைச்சல் குறைந்ததுக்கு நிலத்தில் சத்து இல்லை என்பதல்ல காரணம். சத்தைச் செரிமானம் செய்து செடிகளுக்குத் தரக்கூடிய நுண்ணுயிர்கள் இல்லாததுதான் காரணம்.

Scanned with CamScanner

மேலும் இரண்டு உண்மைகளை இங்கு குறிப்பிட வேண்டும். ஒன்று வரலாற்றில், ரசாயன உரங்களை இடுவது எப்படிப் பழக்கத்தில் வந்தது? இரண்டாவது ரசாயன உரங்களை இடவேண்டுமா? இரண்டாம் உலகப்போர் முடிவடைந்த தறுவாயில் வெடிமருந்து தயாரித்த வியாபாரிகள் கவலைப்பட்டார்கள். போர் முடிவடைந்துவிட்டதே இனி நம் வியாபாரத்திற்கு வழி என்ன என்று. இப்பொழுது விஞ்ஞானிகள் புதிய வழியைக் காட்டினார்கள். செடிகளுக்கு அமோனியா தேவை. வெடி மருந்திலிருப்பது அமோனியா. வெடிமருந்து தொழிற்சாலையை உர உற்பத்திக்காக மாற்றிவிடலாம் என்று சொன்னார்கள். 1925ல் அமோனியம் சல்பேட் அமெரிக்காவில் புழக்கத்தில் வந்தது. அப்பொழுதே அங்கு எதிர்ப்புக் கிளம்பின. எதிர்காலத்தில் இது தீங்காக அமையும் என்றார்கள். இந்தப் போக்கிற்கு எதிரான ஆராய்ச்சிகளும் ஐரோப்பாவில் நடந்தது. ஆனால் இட்லர் தலைதூக்கிய காலத்தில் இந்த ஆராய்ச்சிகளை அழித்துவிட்டார்கள். இரண்டாம் உலகப்போர் முடிவடைந்த காலத்தில் வெடிமருந்துத் தொழிற்சாலைகள் எல்லாம் உர உற்பத்தியில் ஈடுபட்டன. உர உற்பத்தி அதிகரித்ததால் ஐரோப்பாவுக்குள் அதை அடக்க முடியவில்லை. உலகம் முழுவதும் உரத்தைப் பரவலாக்க வேண்டிய தேவை அவர்களுக்கு ஏற்பட்டது. இந்த வரலாற்றுக் காரணத்தைப் புரிந்துகொண்டால், இதற்கும் உணவு உற்பத்திக்கும் என்ன உறவு என்பதைப் புரிந்து கொள்ளலாம். வெடிமருந்து வியாபாரிகளின் தொடர்ந்த லாபத்திற்காக புகுத்தப்பட்ட உத்தி இது.

### தரகு விஞ்ஞானிகள்

உலகம் முழுவதும் உணவு உற்பத்தியைப் பெருக்குவது என்ற நோக்கில் சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவனத்தை மணிலாவில் உருவாக்கி இருக்கிறார்கள். ஐ.ஆர்.ஆர்.ஐ. என்பது அதன் பெயர். சாதாரண விவசாயிகளும் புரிந்து கொள்ள வேண்டும்



என்பதற்காக நிறைய படங்களோட புத்தகம் வெளியிட்டுள்ளனர். தமிழிலும் இந்தப் புத்தகம் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஒரு பெரிய உண்மையை அதில் மறைத்துள்ளனர். செடிக்கு 13 வகையான சத்துக்கள் தேவை. இவற்றில் உயிர்வாயு, நீர்வாயு, கரிவாயு ஆகியவை காற்றிலிருந்து எளிதாகக் கிடைக்கின்றன. ஆனால் நைட்ரஜனை நாம் தான் தரவேண்டியிருக்கிறது என்று எழுதியிருக்கிறார்கள். ஆனால் உண்மை இப்படி இல்லை. நைட்ரஜனும் காற்றிலிருந்தே கிடைக்கிறது. அண்டவெளியில் உள்ள காற்றில் 79% நைட்ரஜன். 20% உயிர்வாயு. மீதி 1% தான் பிறவாயுக்கள். புவிக்கோளமே நைட்ரஜன் கடலில் மிதக்கிற பந்துதான். இந்த உண்மையை மூடிமறைத்து உப்பு விற்பனைக்காக புத்தகம் போடுகிறார்கள். ஆகவேதான் நாம் சொல்லுகிறோம் விஞ்ஞானிகள் என்பவர்கள் உர வியாபாரிகளின் தரகர்கள் என்று.

இதை வேறுவகையிலும் பார்க்கலாம். 1920க்கு முன்பு இந்த உப்புக்களை நாம் போடவில்லை. அப்போதும் பூமி விளைந்து கொண்டுதான் இருந்தது. அப்பொழுது அங்கு நைட்ரஜனை யார் கொடுத்தார்கள். பூமியில் நுண்ணுயிர்கள் நிறையவே இருக்கின்றன. இதைக் கிருமிகள் என்று சமஸ்கிருதத்தில் நமக்கு சொல்லிக் கொடுத்தார்கள். கிருமிகள் என்றாலே நோய்கள் நம் நினைப்பில் வந்து விடுகிறது. நன்மை செய்யும் கிருமிகள் ஏராளம் இருக்கின்றன. பாலைத் தயிராக்குவது, தோசை மாவை புளிக்க வைப்பது போன்றவை நுண்ணுயிர்களின் செயல்கள். இவை கழிவை உரமாக மாற்றுகின்றன. இவை பயிர்களின் வேர்களில் ஒட்டி வாழ்ந்து கொண்டு ஆகாயத்திலிருக்கும் நைட்ரஜனை எடுத்துச் செடிகளுக்குத் தருகின்றன. ஆகாயம் என்றாலே நாம் மேலே பார்க்கிறோம். ஒன்றுமில்லாத இடம் ஆகாயம். பூமியில் உள்ள இடைவெளிகள் கூட ஆகாயம்தான். அங்குள்ள நைட்ரஜனை எடுத்துக் கொடுக்கின்றன நுண்ணுயிர்கள். இதை விவசாயி அறிந்திருக்கிறார்.

Scanned with CamScanner

நெல் அறுக்கும் நேரத்தில் உளுந்து பயிரிட்டார்கள். அண்டவெளியில் உள்ள நைட்ரஜனை சேகரித்து வைப்பது உளுந்துச் செடியின் குணம். நெல் பயிரிடும்பொழுது மடித்து உழப்பட்ட உளுந்துச் செடியிலிருந்து நைட்ரஜன் நெல்லிற்கு கிடைக்கிறது. நெல்பயிரிடாத போதும் கொழிஞ்சியை, அவர்கள் பயிரிட்டார்கள். இவையும் நைட்ரஜனைச் சேகரித்தன. விஞ்ஞானிகள் விவசாயிகளுக்குத் தவறான திசையைக் காண்பித்தார்கள். நெல் அறுவடை செய்தபின் உளுந்து ஏன் பயிரிட வேண்டும். கடலை பயிரிடு. பருத்தி பயிரிடு. மிளகாய் பயிரிடு. சோளம் பயிரிடு என்றார்கள். இந்தச் செடிகளில் நுண்ணுயிர்கள் வாழவில்லை. ஆகவேதான் உரத்தைப்போடு என்றார்கள். இவ்வாறாக ஆறாயிரம் ஆண்டுகாலமாக நம் விவசாயிகள் சேர்த்து வைத்திருந்த அறிவை வழித்து எடுத்துவிட்டார்கள். இதுதான் நமக்கு பெரிய இழப்பு.

உயிர்கொல்லி

வேளாண் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரான ஜயராஜ் கூறினார்; இவர் பூச்சியியல் துறைப் பேராசிரியராக இருந்தவர். ஒரு தடவை திராட்சைத் தோட்டங்களைப் பார்வையிட்டபொழுது டப்பாவில் நச்சுக்கரைசலில் ஒவ்வொரு திராட்சைக் குலையையும் முக்கி எடுப்பதைப் பார்த்தார். பந்தலில் இருக்கும் போதே குலைகளை டப்பாவில் முக்கி எடுப்பார்களாம் அப்போது முதல் திராட்சை உண்பதையே அவர் கைவிட்டார். கைவிட்டு இப்போது பதின்மூன்று ஆண்டுகளாகின்றனவாம்.

சுவீடனிலிருந்து வந்த 65 வயது முதிர்ந்த ஆசிரியை 'உலகம் முழுதும் மக்கள் பொய் சொல்கிறார்கள்' என்றார். உதாரணமாக பெஸ்டிசைடு (பூச்சிக்கொல்லி) என்பதை நமக்கு பூச்சி மருந்து என்று கற்பித்திருக்கிறார்கள். இது மருந்து அல்ல. நஞ்சு; மனிதனைக் கொல்வது எப்படி மருந்தாகும் என்று கேட்கிறார் அவர். உண்மையில் இந்த நஞ்சு பூச்சிகளை மட்டும் கொல்வதில்லை. எல்லாவற்றையும் கொல்கிறது. ஆகவே இதை பயோசைடு (உயிர்கொல்லி) என்றுதான் கூறவேண்டும்.

இரண்டாண்டுகளுக்குமுன் மகாபலிபுரத்தில் நச்சுக்கொல்லிகள் பற்றிய பணிமனை நடந்தது. மலேஷியாவிலிருந்து பூச்சிக்கொல்லிகளுக்கு எதிராக உலக அளவில் போராட்டம் நடத்தும் குழுவைச் சார்ந்த பெண்மணி ஒருவர் வந்திருந்தார். இந்தோனேஷியாவில் நடைபெற்ற பணிமனை ஒன்றுக்கு அவர் சென்றபோது அங்கு நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றை அவர் குறிப்பிட்டார். ஒவ்வொருவரிடமும் ஒரு வலையும் பாலித்தீன் பையும் கொடுக்கப்பட்டு தோட்டத்திலுள்ள பூச்சிகளை சேகரித்துவரச் சொன்னார்கள். சேகரித்து வந்த பூச்சிகளை படமாக வரைந்து, பெயர்களை எழுதச் சொல்லி எவை எவை பயன்தருவன எவை எவை பயன்தராதன என்று வகைப்படுத்தச் சொன்னார்கள். இப்படித் தொகுத்தபோது நமக்குப் பயன்தரும் பூச்சிகள் எண்ணிக்கையில் அதிகமாகவும் பயன்தராப் பூச்சிகள் குறைவாகவும் இருப்பதை அறிந்தார்களாம். பின்னர் ஒரு சிறிய பாட்டிலில் தெளிப்பான் போல ஒரு கருவியை பொருத்தி. ஊதி விரித்த பாலித்தீன் பைக்குள் நச்சுக் கரைசலைத் தூவினர். தூவிய போது முதலில் நமக்குப் பயன்தரும் பூச்சிகள் இறந்தன. அடுத்ததாய் நமக்கு பயன்தராப் பூச்சிகள் இறந்தன. இதிலிருந்து இன்று உலக அளவில் தீங்கு செய்யும் பூச்சிகள் ஏன் எண்ணிக்கையில் அதிகரித்துள்ளன என்பதை அறிந்தனராம். நன்மை செய்யும் பூச்சிகளை ரசாயனங்கள் தெளித்து நாம் அழித்துவிட்டோம்.

Scanned with CamScanner

எந்தெந்தச் செடிகளில் நுண்ணுயிர்கள் ஒட்டியிருந்து நைட்ரஜனைச் சேகரித்துத் தருகின்றன என்ற பட்டியலை இந்திய விஞ்ஞானிகள் தயாரித்து 8000 செடிகள் என்று பட்டியலிட்டுள்ளனர். ஆக இந்த 8000 செடிகளையும் நுண்ணுயிர்களையும் அழித்தால் தான் ரசாயன உரங்கள் விற்கும். அதற்குத் தேவையானதை இந்திய விஞ்ஞானிகள் செய்து விட்டனர். ஆகவேதான் இன்று உயிரினப்பன்மை பற்றிப் பேச வேண்டியிருக்கிறது. பிரஞ்சு ஆய்வாளர்கள் கூறுகின்றனர் உயிரினப் பன்மை தொடர்ந்து அழிந்து வந்தால் இறுதியில் நமக்கு வந்து சேர்வது பாலைவனம். உயிரினப் பன்மை இருந்தால் மட்டுமே நாம் நலமாக இருப்போம். கால்நடைகள் நலமாக இருக்கும். பறவைகள், விலங்குகள் அவற்றிற்குரிய பணிகளைச் செய்து கொண்டிருக்கும். உயிரினப் பன்மைக்குப் பதிலாக இன்று வந்திருப்பது ரசாயனப் பன்மை என்கிறார் ஒரு பிரெஞ்சு விஞ்ஞானி. அதாவது விதையிலேயே ரசாயன உப்பைக் கலக்கிறார்கள். தவிர நாற்றை ரசாயன உப்பில் முக்கி எடுக்கிறார்கள். நடவு செய்யுமுன் மண்ணில் உப்பைப் போடுகிறார்கள். களைகொல்லி தூவுகிறார்கள். பிறகு மேலூரமாகத் தூவுகிறார்கள். அறுவடைக்கு முன்பும் தெளிக்கிறார்கள். அறுவடைக்குப் பின் வாடாமல் வதங்காமல் இருக்க உப்புக் கரைசலில் முக்கி சந்தைக்கு அனுப்புகிறார்கள். இதைத்தான் ரசாயனப் பன்மை என்கிறார் விஞ்ஞானி.

- - -

7

# பாரதிதாசன் கூறும் பெண்ணடிமைக்கான காரணங்களும் தீர்வுகளும்

- முனைவர் சரளா இராசகோபாலன்

பெண்ணடிமைக்கான முதன்மையான காரணங்களில் ஒன்று இந்துமதம் எனலாம். சமயநெறியாளர்கள் இல்லற வாழ்வையும் துறவற வாழ்வையும் மேற்கொண்டவர்கள். துறவு வாழ்க்கைக்குப் பெண்கள் தடைக்கல்லாகக் கருதப்பட்டனர். உலகமே மாயம் என்று கருதிய வேதாந்திகள் பெண்களையும் மாயையாக்கினர். அதனால் அவளை வெறுத்தொதுக்கும் மனப்பான்மை, துறவிகளிடையே சமயவாதிகளிடையே தோன்றியது. தங்கள் மனத்தை நெறிப்படுத்தத் தெரியாத அவர்கள், தங்கள் மனத்தைப் பெண்கள் கலைப்பதாகக் கருதினர்.

பெண்கள் மனவலிமையினராயினும் அவர்களால் துறக்கநாடு (சுவர்க்கம்) செல்ல முடியாது என்று நினைத்தனர். கணவனுக்குப் பணிவிடை செய்யும் முகமாக, அவர்களுடைய கணவர்கள் விரும்பினால், அவர்கள் துறக்க நாட்டிற்குப் போகும்போது மனைவியரையும் உடனழைத்துச் சென்றனர். இதை நாயன்மார்களின் வரலாறுகள் உணர்த்துகின்றன.

Scanned with CamScanner

"பெண்களும் சூத்திரர்களும் வேதம் பயிலாத பார்ப்பனர்களும் துறக்கத்தை எளிதில் அடைய முடியாது. பெண்களும் சூத்திரர்களும் வேதங்களைப் படிக்க முடியாத காரணத்தினால் அவர்களின் நன்மைக்காகப் புராணங்கள் படைக்கப்பட்டன" என்று தேவிபுராணம் கூறுகிறது. அதனால் பெண் எவ்வளவு சிறந்தவளாயினும் பெண்ணாகப் பிறந்தமை காரணமாகத் துறக்கம் செல்கின்ற உரிமையை இழக்கிறாள்.

## மதச் சடங்குகள்

இந்துமதத்தில் இருந்த சடங்குமுறைகள் பெண்ணடிமைக்குக் காரணமாயின. தந்தை மேலுலகத்திற்குச் செல்வதற்கும் நரகத்தில் போகாமல் தடுப்பதற்காகவும் புத்திரன் தேவைப்பட்டான். தந்தைக்கு மகன்தான் ஈமக்கடன் செய்யவேண்டும் என்ற விதிமுறை இருந்தது. ஆண்டுக்கு ஒருமுறை தந்தை இறந்த நினைவு நாளில், திதி செய்யும் முறையும் அவனுக்கே உரிமையாக இருந்தது. மகன் இல்லையென்றால் மகளுக்கு அந்த உரிமை இல்லை. தாயாதி முறைக்காரர்க்கே அவ்வுரிமை இருந்தது. ஈமக்கடன்களைச் செய்பவர்க்கே சொத்துரிமை இருந்தது. இதனால் பெண்களினும் ஆடவர்களைச் சிறப்புடையவராக நினைத்தனர். "செத்துப் போனவர்களைக் குறித்து மகன் எது செய்தும் பயனில்லை என்றும் பயனுண்டு என்றால் மகன் செய்வதை மகள் செய்தாலும் குற்றமில்லையென்றும் நம்மவர் எண்ணும் வரைக்கும் ஆடவர் பெண்கள் சமத்துவம் உண்டாகாது" என்று தீர்வு கூறினார் புரட்சிக்கவிஞர். (மானுடம் போற்றும் ப.16)

மக்களிடையே தந்தை வழியைத்தான் சிறப்பாகச் சொல்வார்கள். மகளை இன்னொரு வீட்டுச் சொத்தாகவும் மகனைத் தன் வீட்டுச் சொத்தாகவும் நினைத்தனர். மகளுக்குத் திருமணம் நடந்ததும் தாய்வீட்டில் முதன்மை குறைகிறது. தந்தை இறந்தால்கூட மகனுக்குப் பதினாறுநாள் சூதகம் என்றும் மகளுக்கு மூன்றுநாள்



சூதகம் என்றும் கூறுவர். மகனைப் பெற்ற தாய்மார்கள் செய்ய வேண்டிய நோன்புகளும் பூசைகளும் உள்ளன. மகளை மட்டும் பெற்ற தாய், இந்நோன்புகளை நோற்கக் கூடாது என்ற நியதியும் இருக்கிறது.

பெண்களையும் சூத்திரர்களையும் கொல்வது மிகக் குறைந்த பாவமாக நினைக்கப்பட்டது. குறைந்த பாவத்திற்குக் கழுவாயும் வேதங்களில் சொல்லப்பட்டது. இதை ஒரு நீதியாக மனு கூறினார்.

மகளிர்க்கு மாதப்பூப்பு இயற்கையின் நியதி. இதுவும் பெண்ணடிமைக்குக் காரணமாகிறது. இதனால் மகளிர் கோயிலுக்குச் செல்லும் உரிமையையும் வீட்டில் நடமாடும் உரிமையையும் இழக்கின்றனர். இதன் காரணமாக அவர்கள் ஆண்களுக்குச் சமமாக முடியாது என்று ஒரு சாரார் கூறினர். இதற்கு அறிவு அடிப்படையில் விடையளித்தார் பாவேந்தர். "மாதப்பூப்பு, கருப்பச் சுமை முதலிய அசந்தர்ப்பங்கள் பெண்மக்கட்கு இருப்பதால் அவர்கள் ஆண்களோடு சமமாவது எப்படி என்று கேட்கலாம். ஓர் ஒன்றும் மற்றோர் ஒன்றும் சேர்த்து 11 உண்டாகிறது. தனியாகவும் இந்த 1-க்கு மதிப்பு உண்டு. ஒருவனும் ஒருத்தியும் சேர்ந்து பிள்ளைகளைப் பெறுகிறார்கள். மற்ற நேரங்களில் உலகக் காரியங்களில் சமமாக உழைக்கட்டும். உழைக்க முடியும் என்றார்" பாவேந்தர். (மானுடம் போற்று ப.99)

இஸ்லாம் மதமும் பெண்ணடிமைக்கான காரணங்களில் ஒன்றாகக் குறிப்பிடலாம். பெண்களுடைய சமூக உரிமைகள் குறைக்கப்பட்டன. பெண்களின் உயிரையும் கற்பையும் காக்கும் பொறுப்பு ஆண்களுக்கு மிகுதியாயிற்று. பெண்கள் தங்கள் கற்பைக் காத்துக் கொள்ள, வீட்டிலேயே பதுங்கி வாழ்ந்தனர். பிற ஆண்களின் கண்களில் படாவண்ணம் இராஜபுதனப் பெண்டிர் முகமலர் மறைத்தனர். இஸ்லாமியப் பெண்கள், பர்தா முறையைக் கைக்கொண்டனர். பெண்ணடிமைக்குப் பெருங்காரணமாகச் சமயச்

Scanned with CamScanner

சடங்குகள் அமைந்தன. இறைமைக்கு மதிப்புக் கொடுத்தாலே போதுமானது. பெண்களின் உள்ளத்திலும் இறைவன் குடிகொண்டிருக்கிறான் என்று நினைத்தலே போதுமானது.

பெண்ணடிமை விரும்பிகள், பெண்கள் கல்வி பயிலுவதை விரும்பவில்லை. பெண்களுக்குக் கல்வி கொடுத்தால், அவர்கள் சிந்திக்கத் தொடங்குவார்கள். அவர்களை அடக்கி வைக்கத் தாங்கள் போடும் திட்டங்களைத் தகர்த்தெறிவார்கள். தங்களுக்கு அடிமையாக இருக்க விரும்ப மாட்டார்கள் என நினைத்தனர். அவர்களை அடக்கி ஆள வேண்டியே பெண்கல்வியை மறுத்தனர். இயற்கையாகவே அறிவுடையா அவளை, அறிவிலியாக நினைத்தனர்.

பெண்கல்வி மறுப்பினால் சரியான முறையில் தீர்வு காண்பதை விடுத்து, சாஸ்திரம் பார்ப்பதில் நம்பிக்கை கொண்டனர். கணக்கு போடத் தெரியாமல், சுவர்களில் சாணியாலும் கரியாலும் கோடுகள் கிழித்தார்கள். பேய், பிசாசு, பூவாடைக்காரி, முனீஸ்வரர்கள் ஆகியவற்றிடம் அதிகமாக நம்பிக்கை கொண்டு அஞ்சினார்கள். குடுகுடுப்பைக்காரர், குறி சொல்பவர் ஆகியோரை நம்பி ஏமாந்தார்கள். விருந்தாளி வருவதைக் காக்கையும் பல்லியும் அறிவிப்பதாக நம்பினர். குழந்தைகள் நோயுற்றபோது, தக்க மருத்துவம் செய்யாமல் இறந்தால், விதியின்மீதும், இறைவன்மீதும் பழியைப் போட்டனர்.

கல்வியின்லமயால் அவர்களின் உள்ளம் சீரான முறையில் சிந்திப்பதில்லை. அவர்கள் உள்ளம் விரியவில்லை.

*"திருந்தா வகையில் செலுத்தலால் அவர்கள்*
*சுருங்கிய உள்ளம் விரித்த பாடில்லையே"*

(பாரதிதாசன் கவிதைகள்: 1, ப54)

என்று பெண்களின் உள்ளம் சுருங்கிய நிலைக்கு ஆடவர்களே காரணம் என்றார்.



**கல்வியின்மை**

பெண்களுக்குக் கல்வியின்மையால் செயல் குறைகிறது. பொழுது போகவில்லை. அடுத்த வீட்டுக் குறைகளைப் பேசிக் களிப்பர். இக்குறையைப் பெண்களின் மனம் நோகாத வண்ணம் அங்கத முறையில் எடுத்துக் காட்டியுள்ளார். மயிலைப் போன்றே பெண்களும் அழகாக உள்ளனர். ஆனால் மயிலின் நீளக் கழுத்து அவர்களுக்கில்லை. ஏன் என்ற வினாவை எழுப்பிய கவிஞர்,

*"பிறர்பழி தூற்றும் பெண்கள் இப்பெண்கள்!*
*அவர்கழுத்து உன்கழுத்தாமோ சொல்வாய்!*
*அயலான் வீட்டில் அறையில் நடப்பதை*
*எட்டிப் பார்க்கா திருப்பதற்கே*
*இயற்கை அன்னை இப்பெண் கட்கெல்லாம்*
*குட்டைக் கழுத்தைக் கொடுத்தான் உனக்கோ*
*கறையொன் றில்லாக் கலாப மயிலே*
*நிமிர்ந்து நிற்க நீள்கழுத் தளித்தான்"* (பா.தா.கவி. 1, ப.54)

என்றார். மயிலிடம் இதை நீ மகளிரிடம் கூறாதே. அவர்களுக்குத் தெரிந்தால் ஏசுவர் என்றார்.

பெண்களுக்குக் கல்வி கொடுக்காத நிலைக்கு ஒரே தீர்வு பெண்கல்வி கொடுத்தலே ஆகும். பல ஆண்டுகளாகப் பூமிக்குள் புதைத்திருந்த நீர், பீறிட்டு நீரூற்றாகப் பெருகுவது போன்று எத்தனையோ ஆண்டுகளாக அறியாமையில் புதைந்திருந்த பெண்களின் அறிவு வெள்ளத்திற்குப் போட்டிருந்த கல்வி மறுப்பு என்ற தடையானது அகற்றப்பட்டபோது, அது வெள்ளமாகப் பெருகிச் சிற்றாறுகளாய், கால்வாய்களாய்ப் பரந்து, சமூக வயலில் பாய்ந்து அறிவுப் பயிர் விளைவிக்கின்றது. இந்த அறிவு வெள்ளத்திற்கு அருள்மழை பொழிந்தவர்கள் பலர். அந்த அருளாளர்களில்

Scanned with CamScanner

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனாரும் ஒருவர். அவர் பொழிந்த பெருமழை, எத்தனையோ பயிர்களை விளைவித்திருக்கிறது என்பதை நன்றியுடன் சொல்லித்தான் தீர வேண்டும்.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், கல்வியில் சிறந்தவர். சாகும்வரை தமிழ் கற்றவர். கவிதை எழுதியவர். நல்லாசிரியராகத் திக ழ்ந்தவர். அவர் யாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்னும் உயர் நோக்குடையவர். அதனால்,

*"கற்க எவரும் எக்குறை நேரினும்*
*நிற்காது கற்க, நிறைவாழ் வென்பது*
*கற்கும் விழுக்காடு காணும்; பெண்கள்*
*கற்க! ஆடவர் கற்க! கல்லார்*
*முதிய ராயினும் முயல்க கல்வியல்"* (இருண்ட வீடு, ப.32)

என்ற பெரு வேட்கையுடைய அவர், பெண்கல்வியைப் பெரிதும் போற்றினார்.

பெண்கல்வியின் சிறப்பை விளக்கவே 'குடும்ப விளக்கு' என்னும் இறவாக் காவியம் இயற்றினார். பெண்கல்வியின்மையின் இழிவைக் காட்ட இருண்ட வீட்டைப் படைத்தார். வீடு குடும்பவிளக்காகத் திகழ வேண்டுமானால் அவர்களைப் படிக்க விடுங்கள். வீடு இருண்ட வீடாக வேண்டுமானால் பெண்களைப் படிக்க விட வேண்டாம் என்று மறைவாக ஆடவருக்கு உணர்த்தினார். அவருடைய பெண் பாத்திரங்கள் அனைவரும் ஆடவனினும் அறிவுடையவராக விளங்கினர். வேட்டுவப் பெண் வஞ்சி கூட,

*"புலன்அற்ற பேதையாய்ப் பெண்ணைச்செய் தால்அந்*
*நிலம் விளைந்த பைங்கூழ் நிலைமையும் அம்மட்டே*
*சித்ரநிகர் பெண்டிர்களைச் சீரளிக்கும் பாரதநற்*
*புத்ரர்களைப் பற்றியன்றோ பூலோகம் தூற்றுவது?"*
(பா.கவி. 1. ப.3)



என்றாள். கழைக்கூத்தி கூட பகுத்தறிவு பெற்றவளாக அரசனுக்கும் அறிவுறுத்தும் சிறப்புடையவளாக இருந்தார்கள். கணிகையர் குலத்தில் பிறந்த அம்மைச்சியும் பா இயற்றும் வல்லமை பெற்றிருந்தாள்.

பெண்கல்வியின் சிறப்பு நல்ல எதிர்கால வாரிசுகளை உருவாக்குவதே. நன்றாகத் திருத்தி எருவிட்டு, நீர்பாய்ச்சி செம்மையாக்கப்பட்ட நன்செய் நிலத்தில் பயிரிட்டால், நல்ல தரமான நெல்மணிகள் உருவாகும் பயன்படாத புன்செய் நிலத்தில் தானாகப் புல் தோன்றுமே தவிர நெல் தோன்றாது. படித்த பெண்கள் நன்செய் நிலத்திற்கு ஒப்பாவர். படிக்காத பெண்கள் களர்நிலத்திற்கு ஒப்பாவர்.

*"கல்வியில் லாத பெண்கள்*
*களர்நிலம்! அந்நிலத்தில்*
*புல்விளைந் திடலாம்; நல்ல*
*புதல்வர்கள் விளைதல் இல்லை!*
*கல்வியை உடைய பெண்கள்*
*திருந்திய கழனி அங்கே*
*நல்லறி வுடைய மக்கள்*
*விளைவது நவிலவோ நான்?"* (கு.வி. ப.69-70)

என்று கற்ற பெண்களுக்கும் கல்லாத பெண்களுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை விளக்கியுள்ளார்.

### தொழில்

பெண்களுக்கு அடுப்பூத மட்டும்தான் தெரிய வேண்டும் என்றனர் பெண்கல்வி மறுப்பாளர்கள். மடைத்தொழிலுக்கு மட்டுமே உரிய மடையர்களாக மாற்றினர். சமையலறை என்னும் ஒரு சிறு அறைக்குள், உலகத்தையே காணுமாறு செய்தனர். சமைப்பது மட்டுமே பெண்களின் தொழில் என நினைத்தனர். குடும்பவிளக்கில் மலர்க்குழல் அம்மையார்,

"சமைப்பது பெண்க ளுக்குத்
தவிர்க்கொணாக் கடமை என்றும்
சமைத்திடும் தொழிலோ நல்ல
தாய்மார்க்கே தக்க தென்றும்
தமிழ்த்தி ருநாடு தன்னில்
இருக்குமோர் சட்டந் தன்னை
இமைப்போதில் நீக்க வேண்டில்
பெண்கல்வி வேண்டும் யாண்டும்" (கு.வி. ப.71)

என்பதால் பெண்கல்வி மறுப்பே பெண்ணடிமைக்குக் காரணமாகியதை அறியலாம்.

பெண்கல்வி வேண்டும் என்று விரும்பிய பாவேந்தரும் பெண்கள் வேலைக்குச் சென்று பொருள் ஈட்டுவதற்காகப் படிக்க வேண்டும் என்று நினைக்கவில்லை. பெண்கள் கல்வி கற்றால், அறிவு பெற்றுத் திகழ்வர். நல்ல வாழ்க்கைத் துணையாவர். அறிவுடைய பிள்ளைகளைப் பெறுவர். குடும்பக் கடமைகளைச் சரிவரச் செய்வர் என்று நினைத்தார். குடும்ப விளக்கின் தலைவி தங்கம், தன் வீட்டிற்கு மாவரசும் மலர்க்குழலியும் விருந்தினராக வந்தபோது, குடித்தனம் செய்யவும் மக்களைக் கவனிக்கவும், உலகினைப் பேணவும் கல்வியைக் கவனிக்கவும் பெண்கட்குக் கல்வி வேண்டும் என்றாள். (கு.வி. ப.69)

**அமைதி வாழ்வு**

பெண்கல்வியினால் விளையும் நன்மைகளில் ஒன்று அமைதியான வாழ்க்கை. மணவழகரின் வீட்டிற்கு வந்த மணிமொழியார், 'உங்களுக்கு இற்றை நாள் 105 ஆண்டுகள் ஆயின. நீவிர் இத்தனை நாள் உயிர்வாழக் காரணந்தான் என்னை?' என்று கேட்டபோது மணவழகர்,



"செவ்வையுற மகளிர்க்குக் கல்விநலம் தேடல்
செயற்பால யாவினுமே முதன்மையெனக் கொண்டே
அவ்வகையே செயல்வேண்டும்! அறிவுமனையாளால்
அமைதியுல குண்டாகும் என்னஇதில் ஐயம்!
மகளிரெல்லாம் கல்வியறி வொழுக்க முளராயின்
மருத்துவமே வேண்டாவாம் பிணிமூப்பு வாரா
மகளிரெலாம் அரசியலைக் கைப்பற்றி ஆண்டால்
மாநிலத்தில் போரில்லை; சாக்காடும் இல்லை" (கு.வி. ப.200)

என்று விளக்கம் தந்தார். வீடும் நாடும் அமைதியாக இயங்க வேண்டுமானால் பெண்கல்வி இன்றியமையாதது என்றார்.

பெண்கள் படிப்பதனால் தீமை ஏற்படாது. படிக்காமல் இருந்தால்தான் தீமை ஏற்படும். படிக்காத பெண்ணும் ஊமையும், ஒன்றே என்பது அவருடைய கருத்து.

"படியாத பெண்ணினால் தீமை! - என்ன
பயன்விளைப் பாளந்த ஊமை?
செந்தமிழ் நாடெனும் செல்வி - நல்ல
நிலைகாண வைத்திடும் பெண்களின் கல்வி" (இசையமுது 2)

என்று பெண்கல்வி பெருகினால் பெண் உயர்வாள். வீடு உயரும்; நாடு உயரும்; உலகமும் உயரும் என்று ஆணிவேராகப் பெண்கல்வி அமைந்திருப்பதைச் சுட்டிக்காட்டினார்.

பாவேந்தர் பெண்கல்வியின் சிறப்பை விளக்க, தான் எழுதிய நாடகநூல் ஒன்றுக்குப் 'படித்த பெண்கள்' என்று தலைப்பும் கொடுத்தார். இந்நூலில் மின்னொளி, இன்னமுது ஆகிய இருவரையும் கல்வி கற்றவர்களாக, மிக உயர்ந்தவர்களாகப் படைத்துள்ளார். படித்த பெண்களால் மனமாற்றம் பெற்ற தலைவன்,

Scanned with CamScanner

பொன்னன் பெண்கல்வி வேண்டும். பெண்கள் விடுதலை வேண்டும். எத்துறையிலும் பெண்கள் விடுதலை வேண்டும் (காட்சி 30) என்று முழக்கமிட்டான்.

குழந்தைகளுக்குக் கல்வி கற்பித்தலில் தாயின் பங்கு மிகப் பெரிது. ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தாயைக் காட்டினார் வள்ளுவர். தன் மகள் கற்றவள் எனக் கேட்ட இன்று, பெரிதும் பயன் பெற்றேன் என்று பாவேந்தர் கண்ட தாயின் உள்ளம் மகிழ்ந்தது. ஈன்ற பொழுதின் பெரிதுவந்தது. தாயொருத்தி, தன் மகளின் தலையைவாரி பூச்சூட்டி பாடசாலைக்குப் போய்வா என்று அன்புடன் அனுப்பினாள். குழந்தையோ சிலைபோல நின்றது. கண்ணீரைச் சிந்தியது. அதைக் கண்ட தாய்,

*"விலைபோட்டு வாங்கவா முடியும் - கல்வி*
*வேளைதோ றும்கற்று வருவதால் படியும்*
*மலைவாழை அல்லவோ கல்வி? - நீ*
*வாயார உண்ணுவாய் போஎன் புதல்வி"* (இசையமுது 1: ப.50)

என்று அறிவுரை கூறினாள். கல்விக்கு எளிதாக விழுங்கக் கூடிய உடலுக்குச் சத்துணவாகிய - சுவையான - மலைவாழையை உவமை கூறுவது பொருத்தமாக உள்ளது.

மகள் பள்ளிக்குச் செல்லும் காட்சியில் தாயின் உள்ளம் தோய்வது ஆசிரியரால் படம்பிடிக்கப்பட்டுள்ளது. காலுக்குப்புன்னை இலைபோலும் செருப்பு அணிந்து, கையில் விரித்த குடை தாங்கி, மகள் செல்லும்போது பெற்றவள் கொண்ட பெருமிதமும் இன்பமும் (இசை 2, ப.35) காட்டப்பட்டுள்ளது. மகளிர் கலையினில் வளர்ந்தும், கவிதையில் ஒளிமிகுந்தும் கலைகளை ஆய்ந்தும் தம் வீடு போதல் கண்ட கவிஞர்,



*"உலவிடு மடமைப் போயின்*
*உடம்பின்தோல் உரிதல் கண்டேன்"* (அழகின்சிரிப்பு ப.60)

என்று மகிழ்ச்சியுடன் கூத்தாடினார்.

**காதல் தடை**

பெண்கள் படிக்கும்போது காதலில் கவிழக்கூடாது என்று பாவேந்தர் விரும்பினார். இடையில் காதல் புகுந்தால், பெண்கல்வி வளராமல் அற்றுப் போகும் என அஞ்சினார். ஆடவர்களுக்கு அறிவுரை கூறும் முறையில் பாடல் ஒன்று அமைந்துள்ளது. பள்ளிக்குச் செல்லும் பெண்ணொருத்தி தன்பால் காதல்கொண்டதாக நினைத்த ஒருவன், அவளிடம் இன்பத்தில், வாழ்வில் இணை என்றான். அவளோ நான் படித்துப் படிப்படியாய் முன்னேற விரும்புகிறேன். படிக்கும்போது காதலை எண்ணுதல் இழுக்கு என்றாள். அவளைத் திருமணம் செய்யாவிட்டால் தன் வாழ்வு மண்ணாகும் என்றான் அவன். மற்றவனோ அவனுக்கு அறிவுரை கூறினான்.

*"பள்ளிக்குச் செல்லுமொரு செந்தமிழ்ப் பாக்கியத்தை*
*அள்ளிப் பெண்முற்போக்கில் - ஆறாத கொள்ளி வைக்க எண்ணாதே"*

(காதல் பாடல்கள் ப.186)

என்று அறிவுரை கூறினான். படிக்கும் பெண்கள், காதலில் கவிழக்கூடாது. பாதியில் படிப்பை நிறுத்தக்கூடாது என்று அறிவுரை கூறினார். ஆடவர்களும் அவர்களைக் காதல் வலைக்குள் இழுக்க முயலக்கூடாது. அவர்கள் பெண்கல்விக்குத் தடை போடக்கூடாது என்ற குறிப்பையும் உள்ளடக்கியுள்ளார்.

மகள் ஒருத்தி, தன் தாயிடம் அணிகலன்கள் வேண்டும் என்று கேட்க, தாயோ எது ஆபரணம் என்று அழகாக விளக்கம் கூறினாள்.

Scanned with CamScanner

*"கற்பது பெண்களுக்கா பரணம் - கெம்புக்*
*கல்வைத்த நகை தீராத ரணம்!*
*கற்ற பெண்களை இந்த நாடு - தன்*
*கண்ணில் ஒற்றிக் கொள்ளுமன் போடு"* (இசையமுது 2:48)

என்று கல்வியை அணிகலனாகச் சிறப்பித்துள்ளாள். கல்வி அழகே அழகு என்னும் நாலடியாரின் கருத்து, இங்கு மேலும் மெருகேற்றப்பட்டுள்ளது.

"அறிவைக் கொடுக்கும் கல்வி - நல்
லழகைக் கொடுக்கும் கல்வி
பொறுமை கொடுக்கும் கல்வி - நீ
போபோஎன் அருமைச் செல்வி"

என்று தாய் தன் மகளிடம் கல்வியின் சிறப்பைக் கூறிப் பள்ளிக்கூட மணியடித்துவிட்டது. சுவடிப் பையைத் தூக்கிக் கொண்டு மகிழ்ச்சியோடு ஓடு என்று கூறினாள். (குயில் கிழமை இதழ் 6.1.59, ப.12)

கல்வி நலம் பற்றித் தன் மகளுக்கு அறிவுறுத்தும் அன்னை, 'படிப்பல்லவோ நல்லறிவு விளக்கு' என்று உயர்த்திக் கூறினாள்.

*"கற்றவர் விழிகளே விழிகள் - கல்வி*
*கல்லாதவர் விழிகள் குழிகள்*
*பெற்றிடுவார் நல்ல வழிகள் - கல்லாப்*
*பேதைகளுக் குண்டாகும் பழிகள்"*
*"நல்லதென்றும் கெட்டதென்றும் தெரியும் - கற்றால்*
*திருக்குறள் உண்மைப் பொருள்புரியும்*
*இல்லற விளக்கு நன்றாய் எரியும் - கல்வி*
*இருந்தால்தான் புகழ்உலகில் விரியும்"*

(குயில் கிழமை இதழ் 21.10.58, ப.1)

என்று நல்லறிவு விளக்கான கல்வியின் சிறப்பைத் தன் மகளுக்குக் கூறி.



*"குறியாகப் பள்ளிசெல்ல வேண்டும் - நீ*
*குறையாத செல்வம் பெறவேண்டும்"*

என்று அறிவுறுத்தினாள். கல்வியைக் 'குறைவறு செல்வம்' என்று சிறப்பித்தாள்.

கல்வி கற்ற பெண்களை,

*"கற்ற பெண்களை இந்தநாடு - தன்*
*கண்களில் ஒற்றிக் கொள்ளுமன் போடு"*

என்று முல்லைக்காட்டில் போற்றியுள்ளார்.

## முடிவு

பெண்ணடிமை நீக்கப் பாடிவந்த சுடரான பாவேந்தர், பெண்ணுரிமையின் அடிப்படை பெண்கல்விதான் என்பதைக் கற்றுணர்ந்தார். அதனால் பெண்கல்வியின் சிறப்பை விளக்க, 'குடும்ப விளக்கை'யும், இழிவை விளக்க, 'இருண்ட வீட்டை'யும், கல்வி கற்ற பெண்களின் சிறப்பை விளக்க, 'படித்த பெண்கள்' என்ற நாடகத்தையும் எழுதினார். பெண்கள் இலக்கியக் கல்வி பெற வேண்டும். அக்கல்வியைத் தாய்மொழியின் வழிக் கற்க வேண்டும். வாழ்க்கை வளமுறத் தொழிற்கல்வியும் பெறவேண்டும். தொழிலை ஆண்களுக்குரியது, பெண்களுக்குரியது எனப் பிரித்தல் ஆகாது. அதை இருபாலார்க்கும் பொதுவுடைமையாக்க வேண்டும். மகளிர் வணிகக்கல்வியும் போர்க்கல்வியும் பெற்றிருத்தல் வேண்டும். சமையல்கல்வி இருபாலார்க்கும் உரியதாக அமைய வேண்டும். மகளிர் பல்கலை அறிவு பெற்றிருத்தல் வேண்டும். கவிபுனைதல், ஓவியம் வரைதல், பாடுதல், யாழிசைத்தல், நடனம் ஆடுதல் ஆகிய கலைகளிலும் வல்லவராதல் வேண்டும் எனப் பாவேந்தர் பல நூல்களின் மூலம் அறிவித்துள்ளார்.

- - -

Scanned with CamScanner

8

# கலைச்சொல்லாக்கம்

*- இராதா செல்லப்பன்*

### கலைச்சொல்லாக்க முறைகள்

அறிவுத் துறையில் கலைச்சொற்களின் பங்கு அளவிடற்கரியது. பொருத்தமான கலைச்சொற்களை அடிப்படையாகக் கொண்டுதான் எந்த ஒரு தகவல்தொடர்பும் முழுமை அடைய முடியும். கீழ்க்குறிப்பிடும் செயல்பாடுகள் கலைச்சொற்களை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

அறிவு, திறமை, தொழில் நுட்பம் ஆகியவற்றை ஒருவரிடமிருந்து மற்றவருக்குப் பரிமாற்றம் செய்ய கலைச்சொல் உதவுகிறது. அறிவியல் கல்வி, தொழில்நுட்பப் பயிற்சி, அறிவியல் தொழில்நுட்ப உரைகளைப் படித்து அறியும் திறன் ஆகியவையும் இதில் அடங்கும். அறிவியல் செய்திகள் உலகில் பல்வேறு பகுதிகளிலுமாகச் சிதறிக் கிடக்கின்றன. ஒவ்வொரு மொழியிலும் கலைச்சொற்களை உருவாக்குவதன் மூலமே அறிவு, திறமை ஆகியவற்றை அம்மொழியிலேயே ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டு செல்லவும் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பரிமாற்றம் செய்யவும் முடியும். உலக அளவில்



பார்க்கும்போது அறிவியல் கருத்துக்களைத் தத்தம் மொழிகளிலேயே குறிக்கும் வகையில் சைனா, ஜப்பான், அரபு நாடுகள், ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா முதலான நாடுகளில் கலைச்சொல்லாக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக, சில துறைகளில் பிற நாடுகள் முன்னேற்றம் அடையும்போது அந்த முன்னேற்றத்தைப் பின்பற்ற விழையும் பிற நாடுகள் அவ்வத்துறைகளில் கலைச்சொற்களை ஆக்க முயலுகின்றன.

அறிவியல் தொழில்நுட்பச் செய்திகளைத் தெளிவாகக் கண்டறியவும் பரப்பவும் (அறிவியல் உரைகளை எழுதவும், பதிப்பிக்கவும் வெளியிடவும்) கலைச்சொற்கள் முதன்மைத் தேவையாக உள்ளன.

### மூவகைப் படைப்பு

கலைச்சொற்களை ஒலிபெயர்ப்பு, மொழிபெயர்ப்பு, புதுச்சொற்படைப்பு ஆகிய மூன்று முறைகளில் தமிழில் ஆக்கிக் கொள்ளலாம்.

### அ. ஒலிபெயர்ப்பு

பிறமொழிக் கலைச்சொற்களை அப்படியே ஏற்றுக்கொள்வது அதாவது பிறமொழிக் கலைச்சொற்களைக் கடன் வாங்கும்போது, அம்மொழியின் ஒலிகளை வாங்கும் மொழியில் அமைத்துக் கொள்வது ஒலிபெயர்ப்பாகும். இலக்கண ஆசிரியர்கள் வடமொழியிலிருந்து சொற்களை எடுத்தாளும் முறையை வடமொழியாக்கம் என்ற பெயரால் குறிப்பிட்டனர். அம்முறையை ஒட்டியே புலவர் குழந்தை ஆங்கில எழுத்தாக்கம் என்று கூறினார்.

Scanned with CamScanner

இதற்கு ஏற்ப அறிவியலில் ஆங்கிலம் மட்டுமன்றி ஆங்கிலம் வழியாக வரும் பிறமொழிச் சொற்களும் இடம்பெறுவதால் 'பிறமொழியாக்கம்' எனல் பொருந்துமென்றும் பிறமொழியாக்கம் என்பது பொதுக்கருத்தாக, அதாவது பிறமொழிக் கலைச்சொற்களைத் தமிழில் ஆக்கும் பல்வேறு நெறிமுறைகளையும் ஒட்டுமொத்தமாகக் குறிப்பதாக இருப்பதால் அச்சொல்லைக் கையாளாது ஒலிபெயர்ப்பு என்ற சொல் இங்கு கருதப்பட்டது. 'பிறமொழிச் சொற்கள் தமிழில் புகும்போது அவ்வொலிகளைத் தமிழில் பெயர்த்து எழுதுதல்' என்ற கருத்தில் ஒலிபெயர்ப்பு என்ற சொல் தற்போது வழக்கில் நிலைபெற்றுவிட்டதாலும், மொழிபெயர்ப்பு என்ற சொல்லோடு ஒப்புமை உடையதாக இருப்பதாலும் ஒலிபெயர்ப்பு என்ற சொல் மேற்கூறிய கருத்தில் இங்கு பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு மொழிக்கும் அதற்கெனச் சிறப்பான சில ஒலிகள் உள்ளன. எனவே ஒரு மொழிச் சொற்கள் பிறிதொரு மொழியில் புகும்போது புகும் மொழிக்கேற்றவாறு மாற்றம் அடைகின்றன. ஆனால் தமிழில் இதுவரை வெளிவந்துள்ள அறிவியல் நூல்களில் ஒலிபெயர்ப்பு ஒருமைப்பாடு காணப்படவில்லை. பிறமொழிக் கலைச்சொற்களை ஒலிபெயர்த்துத் தமிழாக்கிக் கொள்ளும் முறை தொல்காப்பியர் முதலாகப் பல தமிழறிஞர்களுக்கும் உடன்பாடே. தொல்காப்பியர், "வடசொற் கிளவி வடவெழுத்தொரீஇ எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே" என்று விதி செய்துள்ளார். 'அறிவியல் சொற்களை அப்படியே வாங்கி எழுதுவதனால் தமிழ் இனிமை குன்றிவிடும் என எண்ண வேண்டியதில்லை. என்னைப் பொறுத்தவரையில் தமிழில் அகப்படாத சொற்களுக்கெல்லாம் பிறமொழிச் சொற்களை வாங்கி எழுதுவது இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கு உதவும்' என்பர் கா. மீனாட்சிசுந்தரம் (1976 : 230).



ஒலிபெயர்ப்பு விதிமுறைகளை ஆராய்வதற்கு முதற்படியாக, ஒலிபெயர்க்க வேண்டிய சொற்களைப் பற்றி வரையறை செய்ய வேண்டியது மிக இன்றியமையாததாகும். இதில் ஒரு வரையறை இல்லாத காரணத்தால் குறிப்பிட்ட சொல்லை ஒலிபெயர்க்க வேண்டுமா அல்லது மொழிபெயர்க்க வேண்டுமா என்ற குழப்பம் எழுகின்றது. இதன் காரணமாக, ஒரே சொல் சிலரால் ஒலிபெயர்க்கப்பட்டுள்ளது சிலரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

ammeter - அம்மீட்டர் / மின்னோட்டமானி
armature - ஆர்மெச்சர் / கம்பிச்சுருள் கவசம்

Radar, Laser போன்ற சொற்கள் அப்பொருட்களின் முதல் எழுத்துக்களால் ஆகியவை. இத்தகைய சொற்களை முதலெழுத்துச் சொற்கள் எனலாம். இவற்றை மொழிபெயர்ப்பது எளிதல்ல. மேலும், ஆங்கில அறிவியல் நூல்களில் ரேடார், லேசர், சோஃபர் என்ற சொற்களே காணப்படுகின்றன. முழுச்சொல் பயன்படுத்தப் படுவதில்லை. எனவே இவற்றை மொழிபெயர்த்தலைவிட ஒலிபெயர்ப்பதே நல்லது. ஆங்கிலம் முழுச் சொற்றொடரிலிருந்து ஒன்றுக்கும் அதிகமாக அசைகளை எடுத்தாண்டு புதுச் சொற்களை ஆக்கிக் கொண்டுள்ளது.

binac - Binary Automatic Computer
ordavac - Ordance Variable Automatic Computer

இவ்வகைச் சொற்களையும் ஒலிபெயர்க்க வேண்டும். சுருக்கக் குறியீடுகளை இரண்டு வகைகளில் தமிழில் பெயர்க்கலாம். சுருக்கக் குறியீடுகளை அப்படியே ஒலிபெயர்ப்பது என்பது ஒரு வகை.

Scanned with CamScanner

A.C. (Alternating Current) = ஏ.சி.

முன் குறிப்பிட்ட எடுத்துக்காட்டில் A.C. என்பதனையே மாற்றோட்ட மின்சாரம் என்று மொழிபெயர்த்து மா.மி. என்ற சுருக்கத்தைப் பயன்படுத்துவது இரண்டாவது வகை.

e.m.f. = electro motive force

மின் இயக்க விசை = மி.இ.வி. வேதியியல் தனிமக் குறியீடுகளைப் பெயர்ப்பதிலும் வேறுபாடுகள் உள்ளன. சான்றாக, இலங்கையினர், ஒலிபெயர்ப்புச் சொற்களின் முதல் எழுத்தையோ, முதலிரண்டு எழுத்துக்களையோ, முதல் - கடைசி எழுத்துக்களையோ பயன்படுத்தியுள்ளனர். ஆனால் இம்முறையில் 98 இரசாயனவியல் தனிமங்களின் குறியீடுகள் மறிப்பு வராத வகையில் அமைந்துள்ள சிறப்பு குறிப்பிடத்தக்கது.

| | | |
|---|---|---|
| பலேடியம் | - | ப (palladium) |
| தெலூரியம் | - | தெலூ (tellurium) |
| செனன் | - | சென் (xenon) |
| நெத்தூனியம் | - | நெம் (neptunium) |

தமிழகக் கலைச்சொல் அகராதிகளில் தமிழில் இங்ஙனம் குறியீடுகளைத் தோற்றுவிப்பதற்குப் பதிலாக உலகப் பொதுக் குறியீடுகளையே பயன்படுத்தியுள்ளனர். இவற்றை அங்ஙனமே ஒலிபெயர்க்கலாம். வேதியியல் தனிமங்கள் (Cu, K). மூலகங்கள் ($CuSO_4$). கணிதக் குறியீடுகள் ($\pi$, $\gamma$, $\sigma$) போன்றவற்றை அப்படியே எழுதிக் கொள்ளலாம். வாய்பாடுகளையும் ($s = ut + at^2$) அங்ஙனமே எழுத வேண்டும். வடிவ கணிதத்திலும் ரோமன் எழுத்துக்களைப் பயன்படுத்தலாம். ஆனால் மையக் கலைச்சொல் குழு மாநில மொழி எழுத்துக்களைப் பயன்படுத்தலாம் என்றும், வடிவ கணிதத்தின் பிற தொடர்புகளைக் குறிக்க ரோமன் எழுத்துக்களைப் பயன்படுத்தலாம்



என்றும் பரிந்துரைத்தது. இதன்படி  எனத் தமிழ் எழுத்துக்களாலும் sin A cos B ரோமன் எழுத்துக்களாலும் குறிக்கப்படும். இதுபோன்ற இருநிலை வழக்கைத் தவிர்ப்பது பொருள் தெளிவுக்கு வழிவகுக்கும். வடிவகணித எழுத்துக்கள் குறியீடுகள் போன்றவை. எனவே இவற்றிற்கு ரோமன் எழுத்துக்களையே பயன்படுத்தலாம்.

சிறப்புத் தகவல் தொடர்பில் முதலெழுத்துச் சொற்கள், சுருக்கக் குறியீடுகள் போன்றவை அதிகமாகப் பயன்படுத்தப் பெறுகின்றன. பெருவழக்காகவும் மிகவும் நீளமாகவும் அமைந்த கலைச்சொற்களே கருதப்படுகின்றன.

### ஆ. மொழிபெயர்ப்பு

பிறமொழிச் சொற்களுக்கு இணையாகத் தமிழ்ச்சொற்களைக் கண்டறிந்து பெயர்த்துக் கொள்வதே மொழிபெயர்ப்பாகும். பிறமொழி அறிவியல் சொற்கள் பலவும் பண்ணாட்டுடைமையை மனதில் கொண்டு உருவாக்கப்பட்டனவல்ல. பல சொற்களும் அன்றாட நடைமுறை வழக்கிலிருந்து பயன்படுத்தப்பட்டவையாகவே உள்ளன. ஒரு மொழியின் வழக்குச் சொற்கள் அறிவியல் சொற்களாகப் பயன்படுத்தப்படுமானால், அச்சொற்கள் பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்படுமேயன்றி ஒலியெர்க்கப்படுவதில்லை. சான்றாக field என்பது ஆங்கிலத்தில் ஒரு குறிப்பிட்ட அளவுடைய நிலத்தைச் சுட்டும், மின்னியலில், மின்னூட்டம் விசைபெறும் ஒரு குறிப்பிட்ட பகுதி என்ற கருத்து தோன்றியபோது புதுச்சொல் கண்டுபிடிக்கப்படுவதற்குப் பதிலாக, field என்ற வழக்குச் சொல்லே பயன்படுத்தப்பட்டது. field என்ற பொதுவழக்குக் கருத்து எல்லா மொழிகளிலும் உள்ள ஒன்றே. அவை புதுச்சொல்லைக் கண்டறிவதற்குப் பதிலாக இந்த வழக்குச் சொல்லையே மொழிபெயர்த்துப் பயன்படுத்தின.

Scanned with CamScanner

champ (French)
Champoo (Italian & Spanish)
Pole (Russian)

தமிழிலும் புலம் என்ற மொழிபெயர்ப்பு உள்ளது.

### (i) கடன் மொழிபெயர்ப்பு (loan translation)

பிறமொழிக் கலைச்சொற்களை நேருக்குநேர் மொழிபெயர்க்கும் உத்தியே கடன் மொழிபெயர்ப்பு. இது மிகவும் எளிதான ஒருமுறை.

sound wave - ஒலி அலை
bile acid - பித்த அமிலம்
bile duct - பித்தக் குழாய்
bile salt - பித்த உப்பு
bilirubin - பித்த செந்நிறம்
acid dye - அமிலச் சாயம்

என்னும் கலைச்சொல்லில் கருத்து முழுமையாக அமைந்துள்ளவாறும், பொருள் மாறுபாடு ஏற்படாத வகையிலும் இம்மொழி பெயர்ப்பு அமைந்துள்ளதா என்று நோக்குவதும் முக்கியமானதாகும். சான்றாக, இலங்கை - பௌதீகவியல் சொற்றொகுதியில் இடம்பெற்றுள்ள closed circuit என்ற சொல் மூடிய சுற்று என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மூடிய சுற்று என்ற சொல்லில் மின்னோட்டம் கடந்து செல்ல முடியாத சுற்று என்ற பொருள் அமைந்துள்ளது. மூடிய என்பதில் தடை செய்யப்பட்ட அல்லது தடுக்கப்பட்ட என்ற கருத்தும் அடங்கியுள்ளது. எனவே



'மூடிய சுற்று' என்னும்போது தடைப்படுத்தப்பட்ட சுற்று என்ற தவறான கருத்தும் ஏற்படுகிறது. ஆனால் உண்மையில், closed circuit என்பது முழுமையான ஒரு சுற்றுப்பாதையைக் குறிக்கிறது.

### (ii) விருத்திப்பெயர்ப்பு

ஆங்கில வினையடியுடன் -er, -ation, -ing, -ment முதலான விகுதிகளை இணைத்துப் பெயர்ச்சொற்கள் ஆக்கப்பட்டுள்ளன. ஆங்கிலச் சொல்லின் உறுப்புக்களைத் தனித்தனியே மொழிபெயர்த்து, கலைச்சொற்களாகப் பயன்படுத்தலாம். சான்றாக, ஆங்கிலச் சொற்களின் வினையடிகளுடன் -er விகுதி சேர்த்து வினையடிக் காரணப்பெயர்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழில் இகர விகுதி இதற்கு நேரான விகுதி.

vibrator - அதிரி
condenser - ஒடுக்கி
blower - ஊதி

### (iii) ஒட்டுக்கள்

ஒட்டுக்களைத் தமிழில் பெயர்க்கும்போது அவற்றின் கருத்தை அறிந்து செயல்பட வேண்டும். ஏனெனில் ஆங்கிலத்தில் பொதுவடிவக் கலைச்சொற்களும் உள்ளன. சான்றாக, -logy என்பது பொதுவாக, இயல் என்ற பொருளில் வரும். ஆனால், carphology என்பதில் உள்ள logy என்பது legein என்பதன் திரிபு. (G. legein - to collect). இங்கு carphology என்பது பாயைப் பிறாண்டுதலைக் குறிக்கும். மற்றொரு எடுத்துக்காட்டாக micro - என்பதனைச் சுட்டலாம். இந்த ஒட்டு பல கருத்துக்களைத் தாங்கி நிற்கிறது. அதனை அறிந்து பெயர்க்க வேண்டும். ஒரு அலகில் இலட்சத்தில் ஒன்று என்ற அளவைக் குறிக்கும். அலகாக இது வரும்போது (microfarad)

Scanned with CamScanner

இதனை மைக்ரோ என்று ஒலிபெயர்க்க வேண்டும். மொழிபெயர்த்தல் கூடாது. மிகச்சிறிய என்ற கருத்தைக் குறிக்கும் நிலையில் (micropodia) மீச்சிறு என மொழிபெயர்த்து அமைக்க வேண்டும். சிறிய அளவுடைய ஊனக்கண்ணால் பார்க்க முடியாத சிலவற்றை நுண்பெருக்காடியின் உதவியுடன் மட்டுமே காண இயலும். இந்தக் கருத்தையும் micro – என்ற இந்த ஒட்டு குறிக்கிறது. இந்தக் கருத்தைக் குறிக்க நுண் என்பதனைப் பயன்படுத்தலாம். இங்கு micro- என்ற ஒரே ஒட்டு மைக்ரோ, மீச்சிறு, நுண் ஆகிய மூன்று சொற்களாகப் பெயர்க்கப்பட வேண்டும்.

### இ. புதுச்சொல் படைப்பு

கலைச்சொல் கூறுகளைச் சொற்கூறு, சொல், தொகை, சொற்றொடர் என நான்காகப் பிரிக்கலாம். சொற்கூறுகள் என்பதில் அடிச்சொல், ஆக்கவிகுதி, ஒட்டு ஆகியவையும் அடங்கும். அறிவியல் கருத்துக்களைக் குறிக்க, தமிழில் புதிதாகப் பல சொற்கள் படைக்கப்பெற்றுள்ளன. புதுச்சொற்படைப்பு என்ற சொல் நான்கு வகையான சொல்லாக்க உத்திகளைக் குறிக்கும் சொல்.

அ) தமிழ்ச் சொல்லாக்க விகுதிகளை, ஏற்கனவே வழக்கில் இருக்கும் அடிச்சொற்களுடன் இணைத்தும் தொகைச் சொற்களை உருவாக்கியும் புதிய சொற்களை ஆக்கிக் கொள்ளுதல்.

ஆ) ஏற்கனவே வழக்கிலிருக்கும் சாதாரணச் சொல்லைக் கலைச்சொல்லாகப் பொருத்திக் கொள்ளுதல்.

இ) வழக்கிலிருந்து போன சொற்களுக்குப் புதுப் பொருள் கொடுத்துக் கலைச்சொற்களை ஆக்கிக் கொள்ளுதல்.

ஈ) புதிய சொல்லாக்க முறைகளைக் கையாண்டு புதியதாகவே சொற்களைப் படைத்துக் கொள்ளுதல்.



### அ. ஆக்க விகுதி

சொல்லாக்க விகுதிகளை அடிச்சொற்களுடன் இணைத்துப் புதுச்சொற் படைக்கும் முறை ஒரு எளிய உத்தி மட்டுமன்று. காலம்காலமாகக் கையாளப்பட்டு வருவதுமாகும். வினையடிகளோடும் பெயரடிகளோடும் பல்வேறுபட்ட ஆக்க விகுதிகளைச் சேர்ப்பதன் மூலம் தமிழில் பல கலைச்சொற்களை உருவாக்கலாம். அம், இ, கை, மை, பு, சி, அல், வை, வு முதலான பல விகுதிகள் சொற்களை ஆக்கிக் கொள்ள உதவுகின்றன.

| | | |
|---|---|---|
| - அம் | இதய வீக்கம் | cardia hypertrophy |
| | அழுத்தம் | pressure |
| | வடிவம் | shape |
| - இ | உருகி | fuse |
| | வரைவி | graph |
| | நிறமி | chrome |
| - கை | கடிகை | guage |
| - மை | பொருண்மை | mass |
| - பு | வார்ப்பு | cast |
| | இணைப்பு | joint |
| - சி | சுழற்சி | cycle |
| - அல் | கடைசல் | lathe |
| - வி | பிறவி | congenital |
| - வை | பிளவை | carbuncle |
| - வு | படிவு | deposit |
| | முறிவு | fracture |
| - மம் | பால்மம் | emulsion |
| | பாய்மம் | fluid |

Scanned with CamScanner

இத்தகையதொரு விகுதிக்கு எடுத்துக்காட்டாக மம் விகுதியைக் கூறலாம். சொல்லாக்கத்திற்குத் தேவையான ஏராளமான விகுதிகள் இருந்தபோதும் அறிவியல் சொல்லாக்கத்தில் குறிப்பிட்ட சில விகுதிகளே மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கும் நிலை காணப்படுகிறது. மம் என்பது இத்தகையதொரு விகுதி. நீர்மம், பாய்மம், சேர்மம், கனிமம், தனிமம், சூழ்மம் முதலான பல சொற்கள் உருவாகியுள்ளன. இந்நிலையில் மம் விகுதி தனது தனித்தன்மையை இழந்துவிடவும் கூடும். எனவே மம் விகுதி இன்ன அமைப்பில் இன்ன பொருளைச் சார்ந்து வரும் என்ற வரையறையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதனைப் பொதுமைப் பொருள் விகுதியாகப் பயன்படுத்தலாம். அதாவது air என்ற சொல்லை வளி என்று குறிப்பிட்டால் gas என்பதனை வளிமம் என்று கூறலாம். என்ற சொல் நீரைக் குறிக்கும் நிலையில் liquid என்பதைப் பொதுமைப் பொருளில் நீர்மம் என்று ஆக்கலாம். இங்ஙனம் திண்மையுடைய பொருள்களைத் திண்மம் எனவும் பாயும் இயல்புடையவற்றைப் பாய்மம் எனவும் ஆக்கலாம். இதுபோலவே ஒரு கருவியைச் சுட்ட இகர விகுதியைப் பயன்படுத்தலாம். இதுபோன்றே தொழிற்பெயர் விகுதிகளான காடு, மானம் ஆகியவற்றையும் கலைச் சொல்லாக்கத்தில் பயன்படுத்தலாம். காடு மிகுதிப் பொருண்மையில் வரும். (எ.கா. நோக்காடு, சாக்காடு, வெள்ளக்காடு). மானம் கணிப்புப் பொருண்மையை உடையது (எ.கா. வருமானம். தேய்மானம்).

### ஆ. தொகைச் சொற்கள்

தமிழில் ஏற்கனவே உள்ள சொற்களைக் கொண்டு தொகைச் சொற்களாகப் பல கலைச்சொற்களும் ஆக்கப்பட்டுள்ளன. மொழிநூல் என்ற சொல் இங்ஙனம் தொகையாக்கத்தால் விளைந்த சொல்லாகும். ஆனால் இதுபோன்று தொகைச் சொற்களை ஆக்கிக் கொள்வதில் மொழி ஒரு ஒழுங்கு முறையைக் கையாளுகின்றது.



கைக்கடிகாரம் என்ற தொகை வழக்கில் இல்லை. (கோதண்டராமன், பொன். 1974: 70). சுவரில் மாட்டும் கடிகாரத்தைக் கையில் கட்டும் கடிகாரத்தினின்றும் வேறுபிரித்துக் காட்டவே கைக்கடிகாரம் என்ற சொல் ஆக்கப்பட்டிருக்கலாம். எனவே தொகையாக இணையும் சொற்களின் கருத்துத் தொடர்பை அறிந்து தொகையாக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| lever | - | நெம்புகோல் (வினைத்தொகை) |
| meteors | - | எரிமீன் (வினைத்தொகை) |
| concrete | - | கற்காரை (பண்புத்தொகை) |
| carona | - | பால்மண்டலம் (உவமைத்தொகை) |

தொகைகளை ஆக்கும்போது சில வேளைகளில் விரித்துப் பொருண்மை கொள்ள வேண்டும் நிலை ஏற்படும். சான்றாக, முகில் நோக்கி (seratoscope) என்ற சொல்லை ஞாயிறு நோக்கி, தொலைநோக்கி போன்ற சொற்களைப்போல் விரித்து, முகில் கூட்டங்களைக் காணப் பயன்படும் கருவி எனப் பொருள் கொள்ளலாகாது என்பர் அறிவியலார். மாறாக, முகில் நின்று நோக்கும் கருவி என்று விரித்துப் பொருள் கொள்ள வேண்டும்.

### இ. வட்டார வழக்குச்சொற்கள்

வட்டார வழக்குச் சொற்களையும் கலைச்சொற்களாக ஆக்கிக் கொள்ளலாம். சான்றாக, உள்ளங்காலின் நேர்மேல் பகுதியைக் குறிக்கும் சொல் தரமொழி வழக்கில் கிடைக்கவில்லை. இந்நிலையில் நாகர்கோவில் வட்டார வழக்கு கை கொடுத்தது. அங்கு இப்பகுதியைப் 'படம்' என்று கூறுவர். அதுபோல, வடிவக் கொக்கிக்கு 'தவளைக் குறங்கு' என்ற வட்டார வழக்கும் உண்டு. பொது வழக்கில் கையாளப்படும் சொல்லாக்க உத்திகளும் கலைச்சொல்லாக்கத்தில்

Scanned with CamScanner

கைகொடுக்கும். சான்றாக யானை என்பதன் சிறப்பியல்புகளைப் பார்க்கும்போது, அவற்றுள் அதன் பெரிய உருவம் முதன்மை பெறும் இயல்பாக உள்ளது. எனவே ஆனை என்ற சொல்லிற்குப் 'பெரிய' என்ற கருத்து ஏற்றப்பட்டு, பொதுவழக்கில் பல சொற்கள் ஆக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| ஆனைச் சிரங்கு | - | ஒருவகைப் பெரும்புண் |
| ஆனைச் சீரகம் | - | பெருஞ்சீரகம் |
| ஆனைக் கற்றலை | - | ஒருவகைப் பெரிய மீன் |
| ஆனைச் சொறி | - | பெரிய சொறி சிரங்கு |
| ஆனைத் தும்பை | - | பெருந்தும்பை |
| ஆனைத் தொழில் | - | பெருங்காரியம் |

**ஈ. பொது வழக்குக் கலைச்சொற்கள்**

வழக்குக் கலைச்சொற்களை அறிவியல் கலைச்சொற்களாக ஆக்கிக் கொள்ளும் முறையை தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் குறிப்பர் (1968 : 11). இராமலிங்கனாரும் கட்டுமானம், பண்டை முதலிய வழக்குச் சொற்களை முறையே, construction, ware house ஆகியவற்றைக் குறிப்பதைச் சுட்டுகிறார் (1978 : 45). பல கலைச்சொற்கள் பேச்சு வழக்கில் இடம்பெறுபவையே. நாட்டுப்புற வழக்கிலும் பல கலைச்சொற்கள் இடம்பெறுகின்றன. அவற்றைத் தேர்ந்தெடுத்துக் கலைச்சொற்களாகப் படைத்துக் கொள்ளும் முறையைப் பல கலைச்சொல் தொகுதிகளிலும் பரக்கக் காணலாம்.

| | | |
|---|---|---|
| நாய்க்குடை | - | mushroom |
| இறவாணக் கூரை | - | lean - to roof |
| தவளைச் சொறி | - | toad skin |
| கடைக்கால் | - | foundation |



| | | |
|---|---|---|
| குத்துமதிப்பு | - | preliminary gield |
| விட்டம் | - | beam |
| ஏண் | - | center of gravity |

வழக்கிறந்த சொற்களுக்குப் புதுக் கலைப் பொருண்மையைக் கொடுத்துக் கலைச்சொல்லாக்கம் செய்யும் உத்திக்குச் சான்றாக ஒருக்கம் என்ற சொல் istropicity என்ற கலைச்சொல்லுக்கு இணையாகப் பயன்படுத்தப்படுவதைச் சுட்டலாம். முன்னர் மின்னலைக் குறித்த 'மின்' என்பது தற்போது மின்சாரத்தைக் குறித்து நிற்கிறது.

**உ. பிற துறைச்சொற்கள்**

பிற அறிவியல் துறைச் சொற்களையும் குறிப்பிட்ட ஒரு துறையில் பயன்படுத்தலாம். ஆனால் இரு துறைகளும் ஒன்றுக்கொன்று சேய்மைத் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும். இதனால் கருத்துத் தடுமாற்றத்தைத் தவிர்க்கலாம். இத்தகைய சொற்களை மாற்றுக் கலைச்சொற்கள் (transferred terms) எனலாம். இவை புதியதாக ஆக்கப்பட்ட சொற்களைவிடச் சுருக்கமுடையதாகவும் கருத்துத் தெளிவுடையதாகவும் இருக்கும்.

இலக்கியச் சொற்கள்

| | | |
|---|---|---|
| நாவாய்களம் | - | docks |
| காலதர் | - | ventilator |
| ஓரதர் | - | valve |
| அங்காடி | - | market |

Scanned with CamScanner

இலக்கணச் சொற்கள்

| | | |
|---|---|---|
| செயப்பாட்டு வலை | - | passive net work |
| ஈற்றயல் | - | penultimate |
| தன் தூண்டம் | - | self induction |
| பிறிதின் தூண்டம் | - | mutual induction |

**ஊ. கலப்புமுறை**

கலப்பு முறையில் ஆங்கிலத்தில் பல கலைச்சொற்கள் ஆக்கப்பட்டுள்ளன. சான்றாக smong என்பது smoke + fog ஆகியவற்றின் கலப்பு ஆகும். இது போன்றே சிங்கம், புலி ஆகிய விலங்குகளின் கலப்பினம் 'சிம்புலி' என மலையாளத்தில் ஆக்கப்பட்டது. இம்முறையைத் தமிழிலும் பயன்படுத்திப் பார்க்கலாம்.

- - -

9

# தமிழ் வளர்ச்சியில் வலைப்பூக்கள்

- முனைவர் துரை. மணிகண்டன்

21ஆம் நூற்றாண்டு அறிவியல் வளர்ச்சியில் அசைக்க முடியாத இடத்தைப் பெற்றிருப்பது இணையமாகும். தகவல் தொழில்நுட்ப உலகில் இணையம் மிகப்பெரிய உதவிகளை மொழி, இனம் பாராமல் உலக மக்களுக்குச் செய்து வருகின்றது. இது விஞ்ஞானம், அறிவியல், கணக்குகள் என்ற ஒரு குறிப்பிட்ட துறையில் மட்டுமில்லாமல் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் பங்காற்றி வருகின்றது. நெடிய பாரம்பரியமிக்க செம்மொழித் தமிழ்மொழியும் இணையத்தில் தனக்கென ஓர் இடத்தைப் பெற்று வளர்ந்து வருகின்றது. இணையத்தில் எண்ணிலடங்கா இலக்கிய வகைகளைப் பெற்று வளர்ந்து வரும் தமிழ்மொழிக்கு 'வலைப்பூக்கள்' பெரும் பங்காற்றி வருகிறது. வலைப்பூக்கள் என்றால் என்ன? அதன் தோற்றம், தமிழில் தோன்றிய வரலாறு, மற்றும் அதன் வகைகளாக இலக்கியம் சார்ந்த வலைப்பூக்கள், பக்தி, ஆன்மீகம், கணிப்பொறி, மருத்துவம், பல்சுவைச் சார்ந்த வலைப்பூக்கள் எனப் பகுக்கப்பட்டுள்ளன.

Scanned with CamScanner

**வலைப்பூக்கள்**

"ஒரு சமுதாயம் இன்றைய பணிகளை இன்றைய கருவி கொண்டு செய்ய வேண்டும். இன்றைய பணியை நேற்றைய கருவி கொண்டு செய்யும் இனத்தின் நாளைய வாழ்வு நலியும். இது தவிர்க்க முடியாதது" என்ற டாக்டர் வா.செ. குழந்தைசாமி அவர்களின் கூற்றின்படி நாம் இன்றையப் பணியை இன்றைய கருவிகொண்டு செய்யவேண்டும். அதன் அடிப்படையில் நாம் இணையத்தைப் பயன்படுத்தத் தொடங்கி விட்டோம். அதில் வலைப்பூக்கள் என்ற ஒரு தனி இலக்கிய வகை தோன்றியுள்ளது. ஒருவரிடமிருந்து பிறருக்குத் தெரிவிக்கப் பயன்படுத்தப்படும் தகவல் தொடர்புக்கான எழுத்துக்கள், ஒலி, ஒளி வடிவக் கோப்புகள், ஓவியம், படங்கள் என்று அனைத்தையும் இணையம் வழியே தனிப்பட்ட ஒருவர் உலகில் இருக்கும் பிறருக்குத் தெரிவிக்க உதவும் இணைய வழியிலான ஒரு சேவையே வலைப்பூ என்பதாகும்.

வலைப்பூ என்பதை ஆங்கிலத்தில் பிளாக் (Blog) என்கிறார்கள். இதன்மூலம் வெப்பிளாக் (Webblog) என்பதாகும். 17.12.1997ல் ஜான் பெர்கர் (John Barger) என்பவர்தான் வலைப்பூவிற்கான ஆங்கிலச் சொல்லை Webblog என்று பெயரிட்டு எழுதியுள்ளார். பீட்டர் மெர்ஹால்ஸ் (Peter Merholz) என்பவர் 1999 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் குறுக்கு வடிவமான blog என்ற சொல்லைப் பயன்படுத்தத் தொடங்கினார். இவரது வலைப்பதிவின் பக்கப் பட்டையில் Webblog எனும் சொல் இரண்டாக உடைக்கப்பட்டு We blog என்று பிரித்துக் கையாளத் தொடங்கினார். இப்படியே வலைப்பூவிற்கு Blog எனும் பெயர் நிலைத்துவிட்டது.

**தமிழ் வலைப்பூ**

இந்த blog எனும் ஆங்கிலச் சொல்லிற்கு இணையாகத் தமிழில் ஒரு பெயர் உருவாக்க விரும்பியபோது தமிழ் உலகம் மற்றும் ராயர் கிளப் மடலாடற் குழு (மின் குழுமம்) உறுப்பினர்கள்



தங்கள் கலந்துரையாடல்களின் வழியாக blog -க்கு வலைப்பூ என்று தமிழில் பெயர் உருவாக்கினர். இன்று தமிழில் இந்த வலைப்பூ என்ற பெயரே பயன்பாட்டில் இருந்து வருகிறது.

**வலைப்பூ சேவை**

வலைப்பூ வசதிக்கான சேவையை முதன்முதலாக 1996ஆம் ஆண்டில் எக்ஸான்யா (Xanya) எனும் நிறுவனம் வழங்கத் தொடங்கியது. 1997ஆம் ஆண்டில் சுமார் 100 நாட்குறிப்பேடுகள் இடம்பெற்றன. அதன் பிறகு சில நிறுவனங்கள் வலைப்பூவிற்கான இலவச இடவசதியைச் செய்து கொடுத்தன. இந்நிறுவனங்களில் ஒன்று பிளாக்கர்ஸ்.காம் எனும் பெயரில் வலைப்பூ அமைப்பதற்கான சேவையை இலவசமாக அளித்து அதிகமான வலைப்பூக்களை அமைக்க வாய்ப்பளித்தது. இதன்மூலம் ஆங்கிலத்தில் பலர் தங்களுக்கான வலைப்பூக்களை உருவாக்கத் தொடங்கினர். இதன் வளர்ச்சியைக் கண்ட கூகுள் (Google) நிறுவனம் இந்நிறுவனத்தை விலைக்குப் பெற்றது. அதன் பிறகு அனைத்து மொழிகளிலும் வலைப்பூ அமைப்பதற்கான சேவை அளிக்கப்பட்டது.

**முதல் தமிழ் வலைப்பூ**

தமிழ்மொழியிலான முதல் வலைப்பூவை நவன் என்கிற வலைப்பதிவர் 2003ஆம் ஆண்டில் ஜனவரி 26-ல் உருவாக்கினார் என்று அவருடைய வலைப்பக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் 2003 ஆம் ஆண்டில் ஜனவரி முதல் தேதியன்றே கார்த்திக் ராமாஸ் என்பவர் முதல் வலைப்பூவை உருவாக்கினார் என்று சித்தாநதி எனும் இணைய இதழில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த இரு வலைப்பூக்களில் நவன் வலைப்பூ பிளாக்கர்ஸ்.காம் தளத்திலும். கார்த்திக் ராமாஸ் வலைப்பூ பிளாக் டிரைவ் எனும் தளத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

Scanned with CamScanner

கார்த்திகேயன் ராமசாமி (கார்த்திக் ராமாஸ்) எனும் வலைப்பதிவர் தமிழில் செய்த முதல் வலைப்பூ என்று பேராசிரியர் மு.இளங்கோவன் எட்டாவது தமிழ் இணைய மாநாட்டு மலரில் குறிப்பிட்டுள்ளார். தமிழ் விக்கிப்பீடியாவிலும் கார்த்திகேயன் ராமசாமி வலைப்பூதான் முதல் தமிழ் வலைப்பூ என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (karthikramas.blogdrive.com/archive/21.html)

**தமிழ் வலைப்பூக்கள் வளர்ச்சி**

தமிழ் வலைப்பூக்கள் உருவாக்கம் மற்றும் பயன்கள் குறித்த கட்டுரை ஒன்று திசைகள் எனும் இணைய இதழில் வெளியானதைத் தொடர்ந்து தமிழ் வலைப்பூக்கள் குறித்துப் பலருக்கும் தெரியத் தொடங்கியது. தமிழ் வலைப்பூக்களின் தொடக்கக் காலத்தில் தமிழ் எழுத்துருப் பிரச்சனைகள் இருந்ததால் இதன் வளர்ச்சி சற்றுக் குறைவாகவே இருந்தது. 2003 ஆம் ஆண்டிலிருந்து 2005ஆம் ஆண்டு வரை சுமார் 1000 வலைப்பூக்கள் வரையே தோன்றியிருந்தன. அதற்கடுத்து 2005 முதல் 2007 ஆம் ஆண்டு வரையான காலத்தில் இந்த எண்ணிக்கை 4000 ஆக அதிகரித்தது என்று பேராசிரியர் க. துரையரசன் எழுதிய "இணையமும் இனிய தமிழும்" என்ற நூலில் குறிப்பிட்டிருக்கிறார். அதற்கடுத்து தமிழ் வலைப்பூக்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து 12000-ஐத் தாண்டி விட்டது. இது இன்னும் பன்மடங்காக உயரக்கூடும்.

**தமிழ் வளர்ச்சியில் வலைப்பூக்கள்**

1. வலைப்பூக்களின் வருகையால் தமிழ்மொழி இலக்கியங்கள் வெளியுலக மக்களுக்குத் தெரிய வருகின்றன.
2. தமிழ் இணையத்தில் எழுதுபவர்கள் பெருகியுள்ளனர். இதனால் தமிழின் வளர்ச்சி உயர்ந்துள்ளது.
3. வலைப்பூக்களால் உலக நாடுகள் பலவற்றில் வாழும் தமிழ் மக்களின் கருத்துக்கள் மிக விரைவாகக் கிடைக்கின்றன.



4. இலங்கை, மலேசியா, கனடா, தென்கொரியா, சிங்கப்பூர், அரபு நாடுகள் போன்றவற்றில் வாழும் மக்களின் படைப்புகள் தமிழ்மொழியில் இருப்பதால் அனைவரும் கருத்தைப் பகிர்ந்து கொள்ள முடிகிறது.
5. தமிழ்மொழியின் இலக்கண, இலக்கியங்களான சங்க இலக்கியம் முதல் கொண்டு இக்கால இலக்கியங்கள் வரை வலைப்பூவினால் உலகத் தமிழர்களுக்குக் கிடைக்கிறது. இதனால் தமிழ்மொழி வளர்ச்சி பெற்று வருகிறது.
6. இவைகள் அன்றி கணிப்பொறி சார்ந்த தகவல்கள் அதிகம் கிடைக்கின்றன. அறிவியல், விஞ்ஞானக் கருத்துக்களும் அது தொடர்பான புதிய கண்டுபிடிப்புகளும் நமக்குக் கிடைக்கின்றது.
7. உலக நாடுகளில் உள்ள சைவ மடாலயங்களும், திருத்தலங்களும் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.
8. தமிழ் ஆய்வுக் கட்டுரைகள் அதிகம் வலைப்பூக்களில் வெளிவருகின்றன. இதனால் தமிழ் ஆய்விற்குப் பல வழிகளில் பயன்படுகின்றன.
9. வலைப்பூவினால் தொழில்நுட்ப வளர்ச்சி பெற்றுத் தமிழ்மொழி வளர்ந்து வருகின்றது.
10. வலைப்பூக்களில் வெளிவரும் படைப்புகளும், கட்டுரைகளும், கவிதைகளும், பிற கருத்துக்களுக்கும் உடனுக்குடன் பின்னூட்டம் என்ற பெயரில் விமர்சனங்கள் பல நாடுகளிலிருந்து எழுதுகின்றனர். இது தமிழ்மொழிக்குக் கிடைத்த விமர்சன இலக்கியம் என்றே கூறலாம். மேலும் பல துறைகளைச் சார்ந்த அறிஞர் பெருமக்களும் தமிழ்மொழிக்குத் தன்னால் இயன்ற பணிகளையும் செய்து வருகின்றனர்.

Scanned with CamScanner

## முடிவுரை

எப்படி இலக்கிய வரலாற்றில் சங்க காலம், சங்கம் மருவிய காலம், பக்தி இலக்கியக் காலம், காப்பியக் காலம், சிற்றிலக்கிய காலம், ஐரோப்பியர் காலம் என்கின்றோமோ அதனைப் போன்று இன்றையக் காலக்கட்டத்தைக் "கணியுகக் காலம்" அல்லது "தமிழ் இணையக்காலம்" எனலாம். புதிய இலக்கிய வகையாக வலைப்பூ உருவாகி உலக மொழிகளில் தமிழின் பெருமையை நிலைநாட்டிக் கொண்டிருக்கிறது; இதனால் பலவகைப்பட்ட தமிழ் இலக்கியங்கள் வெளியுலகுக்கு விரைவாகக் கொண்டு செல்லப்படுகிறது. இதனால் தமிழ்மொழி வளர்ச்சிக்கு வலைப்பூக்களின் பங்களிப்பு அளப்பரியாத் தொண்டினைச் செய்து வருகிறது எனலாம்.

- - -

10

# நல்ல தமிழில் எழுதுவோம்

- முனைவர் தமிழண்ணல்

## அருகில் புகுந்த ஆமை

எங்கள் வீட்டிற்கு அருகில், சிவன் கோயிலுக்கு அருகில் என்று கூறவேண்டிய இடங்களில் அருகாமையில் என்று எழுதுகிறார்கள். செந்தமிழாக எழுதுகிற நினைப்பு; எங்கிருந்து இந்த ஆமை 'அருகில்' வந்ததென்று தெரியவில்லை. கல்லாமை, அழுக்காறாமை, வெஃகாமை, விளங்காமை போன்ற எதிர்மறை தொழிற் பெயர்கள் பலவுள. அருகாமையில் எதிர்மறை எதுவும் இல்லை. அருகுதல் - சுருங்குதல்; அருகாமை - சுருங்காமை என்றால் அத்தொழிற்பெயர் வேறு. இனிமேல் நம் அருகில் இந்த 'ஆமை' வராமல் காக்கவேண்டும்.

'அண்மையிலுள்ளது; அண்மையில் நிகழும்' என இட அணிமையும் கால அணிமையும் குறிக்கப்படுகின்றன. "பசிப்பிணி மருத்துவன் பண்ணன் இல்லம், அணித்தோ, சேய்த்தோ" என்பது புறப்பாட்டு (புறம்: 173) அருகே என்பதை இடச் சுருக்கத்தை மட்டும் சுட்டவும், 'அண்மை' 'அணிமையை' இடம், காலம் இரண்டிற்கும் பயன்படுத்தவும் பழகியுள்ளோம். எங்கள் வீடு அருகில்தான் இருக்கிறது என்று எழுதுவோம்.

Scanned with CamScanner

### மிகைத் திருத்தம்

சரியாக இருப்பதைத் தவறுபடத் திருத்துவது மிகைப்பட்ட செயலாகும். மிகைத்திருத்தம் என்பது செந்தமிழாக எழுதுகிறோம் என நினைத்துக் கொண்டு தவறு செய்வது. அவற்றுள் முக்கியமான சிலவற்றை நினைவு கூர்வோம்.

### நூல்கள்

நூல்கள் முறையாகும். செந்தமிழில் எழுதுவதாக எண்ணிக்கொண்டு நூற்கள் எனப் பலர் எழுதிவிடுகின்றனர். நமது கால்களைக் காற்கள் ஆக்கலாமா? உழுகின்ற சால்களை சாற்களாக்குவதா? வால்கள், வேல்கள் இருக்கவும் நூல்கள் நூற்களாவது 'மிக நன்றாக' எழுதுவதாக எண்ணிக்கொண்டு செய்யும் தவறு! அதைத் தவிர்க்க வேண்டும்.

### பொருள்கள்

பொருள்கள்தான் சரி. ஆனால் பொருட்களை, பொருட்களுக்கு என்றே எழுதக் காரணம் பொருட்சிறப்பு, பொருட்குறை எனப் பிற இடங்களில் விகாரப்படுவதால், இதிலும் அவ்வாறே ஒலித்துவிடும் பழக்கமாகும். பொருள்களை எடுத்து வை. அங்கு எத்தனை பொருள்கள் உள்ளன என்பதே முறையாகும்.

இவையெல்லாம் சரியாக உள்ளவற்றை நாமே ஒரு நினைப்பில் தவறென்று எண்ணிக்கொண்டு பிழைபட எழுதிவிடுவன ஆகும். பொருத்தமாக இருப்பதைத் திருத்தம் எனலாம். இப்படி மிகையாக - வேண்டாமல் செய்வதை (மிகைத் திருத்தம்) என்றுதானே சொல்லவேண்டும்.

### பிழை திருத்தம்

மொழியை வழங்குவதில் தவறு, பிழை, தப்பு, குற்றம் என்று வாதிக்க வேண்டியதில்லை. எப்பொழுதும் கூர்மையாக, ஆற்றலுடன், திறமையைக் காட்டிக் கருத்தை வெளிப்படுத்தவும், அதைப்பிறர் ஏற்குமாறு



செய்யவுமே ஒரு மனிதன் இயல்பாக விரும்புகிறான். அவனுக்கு மொழியின் வழக்காறுகளை இயல்புகளை, போக்குகளை, நடைமுறையைக் காட்டினாலே போதும். தவறு, பிழை போன்ற சொற்களிலேயே விடுபாடு இருப்பதைத்தான் கவனிக்க வேண்டும்.

சிலர் அச்சேற்றும்போது ஏற்பட்டுவிட்ட எழுத்துப்பிழை, சொற்பிழைகளை பட்டியலிட்டு, நூலின் இறுதியில் பிற்சேர்க்கையாகப் போடும்போது, அதைப் 'பிழைத்திருத்தம்' என்று தலைப்பிடுகிறார்கள். சாரைப் பாம்பு சாரையாகிய பாம்பு; பிழைத்திருத்தம் பிழையாகிய திருத்தம். நாம் செய்யும் திருத்தமும் பிழை என்பது பொருள். பிழையைத் திருத்துவது என இரண்டாம் வேற்றுமை உருபு விரியும் போது, மிகும் ஒற்று, பிழை திருத்தம் என்று அவ்வுருபு மறைந்து நிற்குமிடத்தில் மிகாது; சிலை திறப்பு என்பது போல. பிழை திருத்தத்திலேயே ஒரு பிழை விடக்கூடாது தானே!

### நாட்கள் / நாள்கள்

"நாள் என்பதன் பன்மைச் சொல் நாள்கள் அல்லது நாட்கள் இதில் எது சரி?". "நாட்கள் என்பது நாட்பட்ட பழைய கள்ளைக் குறிக்கும் என்றும் நாள்கள் என்பதே சரியென்றும்" பலர் கருதுகின்றனர். முன்பே பெரியவர் மே.வீ.வேணுகோபாலப்பிள்ளை இதைப் பலமுறை விளக்கியுள்ளார். வாள்கள், தாள்கள், நாள்கள் என்றே வரும். 'கள்' விகுதி பிற்பட்டதாகலின் இலக்கண நூல்களில் அதற்கு விதி கூறப்படவில்லை. வாள்+கண் = வாட்கண், நாள்+குறிப்பு = நாட்குறிப்பு என ஏனைய இடத்தில் திரியும் பழக்கத்தில் இது வந்துவிட்டது. சரியானபடி பயன்படுத்த முயற்சியெடுத்துத் தவறாக எழுதிவிடும் பழக்கத்தை இது காட்டுகிறது. "சியோல் ஒலிம்பிக் போட்டிகள் பதினாறு நாள்கள் நடக்கும்" என்பதே முறையாகும். ஆனால் 'நாட்கள் நடக்கும்' என்றால்தான் செவ்விய தமிழ்போல் தோன்றுமளவும் நிலைமை முற்றிட்டது. 'நாள்கள்' என்னும்போது ஒலிப்பு ஒருமாதிரியிருத்தலால் நாட்கள் புகுந்து நினைத்துவிட்டதுபோல் தோன்றுகிறது.

Scanned with CamScanner

### வளமோடு வளமுடன்

'அளவோடுபெற்று வளமோடு வாழ்க' என்பது அரசு விளம்பரம். 'வாழ்க வளமுடன்' என்று பெரியவர்களும் வாழ்த்த முற்படுகின்றனர். இவை வளத்தோடு வாழ்க. வாழ்க வளத்துடன் என்றுதான் அமையவேண்டும். மகர ஈற்றுச் சொற்களுக்குப் பிறகு, வேற்றுமை உருபு வரும்போது அத்துச் சாரியை அவசியம் வரும். நிலம், நிலத்தை, நிலத்தால், நிலத்திற்கு, நிலத்தின், நிலத்தின்கண் - நிலமை, நிலமால் என வருவதுண்டோ? வடம் - வடத்தை வடத்தால் தானே தவிர வடமை, வடமால் என வருமா? சில சமயங்களில் மூன்றாம் வேற்றுமை உருபு சிலவற்றில் மட்டும் (ஒடு, உடன்) வளமோடு, நலமுடன், வளமுடன் என எழுதிவிடுகிறோம். பொது அமைப்பைவிட்டு இது விலகிச் செல்கிறது. மொழி அனைவரும் விளங்கிக்கொள்ள அமைந்த கருவி. சாதாரண மக்கள் இயல்பாகப் பேசிக்கொள்ளும் பொழுது அத்துச்சாரியை இல்லாமல் இச்சொற்களைச் சொல்ல மாட்டார்கள். ஒரு பெண் குடத்துடன் வருவாளே தவிரக் குடமுடன் வரமாட்டாள். நாம் தடத்திலேயே போகவேண்டுமே தவிர, தடமிலாமலேயே போகக்கூடாது. நன்றாக எண்ணிப் பாருங்கள்; குடம் + உடன் = குடத்துடன். தடம் + இல் = தடத்தில். வளம் + உடன் = வளத்துடன். வளம் + ஒடு = வளத்தோடு. வளத்துடன் வாழ நலத்துடன் செயல்படும் மனத்துடன் யாவரும் திகழ்ந்தால், இனத்துடன் ஒற்றுமைப்படலாம்.

### சிலவும் செலவும்

கையை விட்டுப் பணம் செலவழிப்பதால் 'செலவு' என்று பெயர். ஊரைவிட்டு வெளியூருக்குச் செல்வதால், பயணத்துக்கும் தமிழில் 'செலவு' என்று முன்பு சொன்னார்கள். 'எனது இலங்கைச் செலவு' என்பது திரு.வி.க. தமது இலங்கைப் பயணம் பற்றி எழுதிய நூலாகும். கைச்செலவுக்குப் பணம் தேவைப்படும். செலவு சிட்டையைப் பல வணிகர்கள் 'சிலவுசிட்டை' என்றே இன்றும் எழுதுகின்றனர். 'வரவு சிலவு' எனப் போடத் தயங்குவதில்லை. கணக்கு நோட்டுப் புத்தகத்தில் வரவு-சிலவு என்றே அச்சிட்டுவிடுகிறார்கள். செலவு சிட்டை, வரவு செலவு என்றுதான் எழுத வேண்டும். 'சிலவு' பெருவழக்காகியிருக்கும் தவறுகளில் ஒன்று. அதைத் திருத்தினால்தான் தமிழுக்கு வரவுண்டாகும். உங்கள் நேரத்தையும் என்னுடைய நேரத்தையும் செலவிட்டு, 'செலவை' விளக்கியிருக்கிறேன். மீண்டும் 'சிலவு' என்று எழுதாதீர்கள். செலவு மீறினால் கையைக் கடித்து விடும்!



### முயல்வோம் 'முயற்சிக்கல்' ஏன்?

சிலர் 'முயற்சித்தேன்' என எழுதிவிடுவர். முயன்றேன் இருக்கவும் 'முயற்சித்தேன்' எதற்காக? முயல் - முயன்றேன் ஆகும். முயற்சி - தொழிற்பெயர். அதனை மீண்டும் முயற்சித்தேன் என வினையாக்க முயல்வது வேண்டாத முயற்சி. பயிற்சி - பயிற்சித்தேன் ஆகுமா? நவில், நவின்றேன், நவிற்சி வரலாம். 'நவிற்சித்தேன், எனலாமா? எனவே சரியாக எழுதவே முயல்வோம்; 'முயற்சிக்க' வேண்டாம். அது மொழியைச் 'சிக்கலில்' கொண்டுபோய் விட்டுவிடும்!

### தவற்றுக்குமேல் தவறு

டு, றுக் குற்றியலுகரங்கள் வந்து, தொடராகும்போது அவற்றிலுள்ள மெய்யெழுத்துக்கள் இரட்டிப்பது ஒரு தமிழ் வழக்காறு. நாறு + கால் = நாற்றங்கால். ஆறு + பாசனம் = ஆற்றுப் பாசனம். ஆடு + குட்டி = ஆட்டுக்குட்டி. தேடு + அம் = தேட்டம். அதாவது தேடப்படும் செல்வம். வயிறு + பசி, வயிற்றுப் பசியாகுமே தவிர வயிறுப்பசி ஆகாது. சோறு + பானை = சோற்றுப்பானையானால் நல்லது; சோறுப்பானையென்றால் உள்ளே எதுவும் இல்லாததுபோல் இருக்கிறது. பள்ளிக்கூடங்களில் 'நாட்டுத் தொண்டுத் திட்டம்' (N.S.S.) உள்ளது. அதை 'நாடு தொண்டு' என்று கூறுவதில்லை.

"சிக்கனம் வீட்டைக் காக்கும், சேமிப்பு நாட்டைக் காக்கும்" என்றுதானே அரசு விளம்பரம் செய்கிறார்கள். வீடைக் காக்கும், நாடைக் காக்கும் என்பதில்லையே? வீடு + ஐ = வீடை ஆகாமல் வீட்டை ஆவதைக் கவனியுங்கள். அதைப்போல் தவறு + ஐ = தவறை ஆகாமல் தவற்றை என்றுதான் வரவேண்டும்.

Scanned with CamScanner

ஆனால் தவற்றைச் செய்யாதே, தவற்றுக்கு வருந்துகிறோம் என்று எழுதாமல் தவறைச் செய்யாதே, தவறுக்கு வருந்துகிறோம் என்றுதான் எழுதுகிறார்கள்.

தமிழில் 'உறழ்ச்சி' என ஓர் இலக்கணம் இருப்பது முன்னரும் சொல்லப்பட்டது. பெரும்பான்மையான விதிக்கு மாறாகச் சில இடங்களில் மாறியும் வரும். அங்ஙனம் சிறிய அளவில் மட்டும் மாறி வருவதைப் 'புறனடை' என்பர். சில சொற்கள் இரண்டு விதமாகவும் எழுதப்பட்டு, இரண்டும் தவறல்ல என ஏற்கப்பட்டால் அதற்கு உறழ்ச்சி என்று பெயர். அப்படியும் வரலாம், அல்லாவிட்டால் இப்படியும் வரலாம் என ஏற்பது அது. நாடு கிழவோன், காடு கிழாள் என்று முற்காலத்திலேயே வழங்கியுள்ளது. விதிப்படி இவை நாட்டுக்கிழவோன், காட்டுக்கிழாள் என்று வரவேண்டும். நாட்டிற்கு உரிமையுடைய தலைமகனை நாடு கிழவோன் என்கிறோம். வீடு + தோட்டம் = வீட்டுத்தோட்டம் ஆதல், நாடு + கிழவோன் = நாட்டுக்கிழவோன் ஆக வேண்டுமல்லவா? ஆயினும் உச்சரிப்பதற்கு இனிமையில்லாததால் 'நாடு கிழவோன்' என்றே ஆளலாயினர். இங்ஙனம் ஒரு சொல்லிற்கு மட்டும் மாறிவருவதால், இதைப் 'புறனடை' என்போம். இதனையே இரண்டு விதமாகவும் வரலாம் என ஏற்கும்போது 'உறழ்ச்சி' ஆகிறது.

'தவறுக்கு', 'தவறால்' என எழுதுவதைப் புறனடை என ஏற்கலாம். அதற்காக ஒருவர் 'தவற்றுக்கு' என எழுதியிருந்தால் அதைத் தவறு எனலாமா? கூடாது. எனவே 'உறழ்ச்சி' விதிப்படி சில இடங்களில் இரண்டுவிதமாகவும் வரலாம் எனக் கொள்ளவேண்டும். அதற்காக எல்லா இடத்திலும் புறனடை வரலாம்; உறழ்ச்சி வரலாம் என்று நம் விருப்பம்போல் மாற்றிக் கொண்டிருக்கக்கூடாது. பொருள் சிதையாமல் இருக்குமிடங்களிலும் ஒலி இனிமை தருமிடங்களிலும் மட்டுமே இவை ஏற்கப்படும்.

### காஞ்சிபுரம் வாழ்க

ஒரு பல்கலைக்கழக அழைப்பிதழில், காஞ்சீபுரம் என்று, அந்நகரின் பெயர் திரும்பத் திரும்பக் குறிக்கப்பட்டிருந்தது. அது 'காஞ்சிபுரம்' எனக் குறிக்கப்படுவதே பொருத்தமுடையது. பேச்சு வழக்கில் நீட்டி ஒலிக்கும்



பழக்கம் ஏற்பட்டுவிடுகிறது. உச்சரிப்பிலுள்ள எளிமையே மனிதரை இங்ஙனம் தூண்டுகிறது. எங்கே, காஞ்சீபுரத்துக்கா? என்று கேட்பவரும் அதை எழுதும்போது 'காஞ்சிபுரம்' என்றுதான் எழுதத் தோன்றும். 'காஞ்சிமாநகர்' எனும் பெயர் சங்க காலத்திலிருந்து பாரதியார் காலம்வரை காணப்படுவதாகும். காஞ்சி என்ற மரத்தின் பெயரால் வந்த பெயர் அது. 'காஞ்சி ஊர்' என்பது அகநானூறு (96). 'காஞ்சி மாநகர்' என்றே சுட்டுகிறது. (21-148, 154). தேசியக் கவிஞர் பாரதியார் 'காசி நகர்ப் புலவர் பேசும் உரைதான், காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்' எனப் பாடுகிறார்.

இதனைக் கச்சி எனவும் அன்றே வழங்கியுள்ளனர். அதுவும் 'காஞ்சி' என்பதன் திரிபேயாகும். முத்தொள்ளாயிரம், பெரும்பாணாற்றுப்படையாவும் கச்சி என்றே சுட்டும். செய்யுள் நடைக்காக அப்படி ஒரு சொல்லை ஆண்டுள்ளார்கள் வடமொழியில் இந்நகரைக் 'காஞ்சீ' என்று குறிப்பிட்டாலும், தமிழில் எழுதும் போது 'காஞ்சி'யில் 'காஞ்சீ' என 'ஈ' மொய்க்காமலிருப்பதே நல்லது.

### நாகரிகமா, நாகரீகமா?

நாகரிகம் என்ற சொல்லை நாகரீகமாக்குவதும் நாகரிகம் ஆகாது. இதுவும் பேச்சு முறையால் வந்த திரிபேயாகும். இதன் பழைய ஆட்சிகள் எல்லாம் 'நாகரிகம்' என்றே உள்ளன. திருவள்ளுவரும் 'நயத்தக்க நாகரிகமே' வேண்டும் என்பார் (580). பிற்கால இலக்கியத்தில்தான் 'நாகரிகம்' என்ற சொல்வழக்கு காணப்படுகிறது. அருணாசலக் கவிராயரின் இராம நாடகத்தில் 'நாகரீக வேடிக்கை' என்று வருகிறது. (யுத்.124)

### காந்தியம், தேசியம்

இதைப்போல பேச்சில் நீட்டி உச்சரித்துவிடும் பல சொற்கள் உள்ளன. இகம், இயம் என்பன ஒருவகை இறுதி ஒட்டுகளாகிப் பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கவும், புதிய சொற்களை உருவாக்கவும் பயன்படுகின்றன. பாவிகம், நாட்டியம், காப்பியம், கருத்தியம் என்று சொல்லிப்பார்த்தால் உண்மை விளங்கும். காந்தியம் என்று காந்தியடிகளின்

Scanned with CamScanner

கொள்கைகளைக் கூறுவர். அதைக் 'காந்தீயம்' என நீட்டுவது மங்கலமாகத் தோன்றவில்லை. 'மார்க்சியம்' என்று கார்ல்மார்க்சின் கோட்பாடுகளைக் குறித்தாலே போதும். மார்க்சீயம் என்று அதில் ஒரு சீயத்தை (சிங்கத்தை) விடவேண்டாம். உடைமைகளைத் தேசிய மயமாக்குவது நல்லது. அதைத் 'தேசீய' மயமாக்க வேண்டாம். தேசீயம் பேச்சில் நீள்கிறது. பாரதியார் பாடல்கள் செவ்விய பதிப்பில் 'தேசிய கீதங்களே' காணப்படுகின்றன. எனவே தேசிய ஒற்றுமை, தேசிய ஒருமைப்பாடு என்றாலே போதும். இங்கெல்லாம் 'தேசீய' என வால் நீட்ட வேண்டாம்தானே?

**செல்வரும் தனவந்தரும்**

மொழியில் ஒப்புமையாக்கத்தால் பிழைகள் நேர்வதுண்டு. ஒன்றைச் சொல்லிப் பழகிய பழக்கத்தில் பிறிதொன்றையும் சொல்லிவிடுகிறோம். தனமுடையவர் தனவந்தர். தமிழில் வழங்கும் வடசொல் இது. இதைச் சொல்லிச் சொல்லி ஏற்பட்ட பழக்கத்தல் செல்வர் என்பதைச் செல்வந்தர் என்று கூறுவிடுகிறோம். செல்வர் என்பதுதான் இயல்பாகத் தொன்றுதொட்டு வழங்கிவரும் சொல். நம்மிடம் செல்வர்களும் தனவந்தர்களும் பலராக இருப்பது நல்லது. அவர்களை நல்லவர்களாக வாழவிடுவது நாட்டுக்குப் பெரிதும் பயன்படும் அதற்காகச் செல்வரைச் செல்வந்தர் ஆக்கி அந்தரத்தில் விட வேண்டாம். செல்வமும் செல்வரும் என்றென்றும் வாழ்க!

**வாய்பாடும் வாய்ப்பாடும்**

அந்தக் காலத்தில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் அரிச்சுவடி, எண்சுவடி என இரண்டுண்டு. அரிச்சுவடியில் அ, ஆ என எழுத்து வரிசை இருக்கும். எண் சுவடியில் வாய்பாடு இருக்கும் 2 x 1 = 2, 2 x 2 = 4, 2 x 3 = 6 என வாய்பாடு 16 அல்லது 20 வரை போகும் எழுத்து வரிசையையும் எண் பெருக்கல் வரிசையையும் காலையில் முறை வைத்து, மனப்பாடமாக எல்லோரும் சொல்வது வழக்கம், 'வாய்பாடு' என்றால் முன்மாதிரி, குறியீடு என்று பொருள். யாப்பு இலக்கணத்தில் நேர், நிரை அசைகள் மற்றும் சீர்களுக்கு நாள், மலர், தேமா, புளிமா என



வாய்பாடுகளுண்டு. இன்று ஆங்கிலத்தில் குறிக்கப்படும் கோட்பாட்டு வரையறைகளை 'விதிச்சுருக்கம்' (Formula) என்பர். அதனையும் வாய்பாடு எனலாம்.

வாய்ப்பாடு என்றால் பானை வாயினது மேல் விளிம்பு. குடத்துக்கு வாய்ப்பாடு உண்டு. அண்டாவின் வாய்ப்பாட்டில் நெறிவிருந்தால் எடுக்க வேண்டும். 'சட்டி வா(ய்)ப்பாட்டில் லாட்டா மொட்டையா இருக்கும்' காசிச் செம்புக்கு வா(ய்)ப்பாடு உயரமாகவும் அழகாகவும் இருக்கும்.

வாய்பாடு தெரிந்தால் கணக்கை எளிதாகப் போட்டு விடலாம். பொருளாதாரத்தில் கூட, சில சிக்கல்களைக் கண்டுபிடித்துத் தீர்க்க வாய்பாடுகள் உண்டு. வெண்பாவைச் சீர் பிரித்து, வாய்பாடு கூறினால் அதன் செவ்விய வடிவம் விளங்கும். வாயால் பாடுவது வாய்ப்பாட்டு. வாய்ப்பாட்டிற்கு வாய்பாடு அமைக்கலாம். ஆனால் பானையின் வா(ய்)ப்பாடு வாய்பாடு ஆக இயலாது.

பிள்ளைகளுக்கு 'வாய்பாடு' என்று கணக்கு வாய்பாடு பற்றிய புத்தகம் முன்பு தரப்பட்டுக் கற்பிக்கப்படும். இன்று அந்தப் புத்தகத் தலைப்பையே சிலர் 'வாய்ப்பாடு' என்று போட்டு விடுகிறார்கள்! இவர்களைத் திருத்துவது நமக்குப் பெரும்பாடாக இருக்கிறது.

*'யாதும் ஊரே யாவரும் கேளிர்'*

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கணியன்பூங்குன்றன் பாட்டிற்கு எல்லாம் நம் ஊரே, யாவரும் நம் உறவினரே என்பது பொருள். இதில் 'கேளிர்' என்பதற்கு உறவினர் என்ற பொருளிருப்பதைத் தெரிந்து கொள்ளாதவர்கள் 'எல்லோரும் கேளுங்கள்' என்று பொருள்கொண்டு, நன்றாகக் கேட்கவேண்டும், என்பதற்காகக் 'கேளீர்' என்று வேறு நீட்டி விடுகிறார்கள். 'யாவரும் கேளிர்' என்று தான் வரும். கேளிர் என்பது நெருங்கிய உறவினரையே குறிக்கும். கணவனைக் 'கேள்வன்' என்று குறிப்பதுண்டு. கிளை விடுவது போன்ற மிக ஒட்டிய உறவே கேள், கேளிர் எனப்பட்டது. நல்லவேளையாக, சொன்னதைக் கேட்பதால் தான் கணவனுக்குக் 'கேள்வன்' எனப் பெயர் வந்ததென்று இன்னும் யாரும் ஆராயவில்லை!

Scanned with CamScanner

## மரியாதைப் பன்மை கேட்கும் ஆறுகள்

ஒரு பொய் மற்றொரு பொய்யைச் சொல்ல வைப்பது போல், ஒரு தவறு மற்றொரு தவற்றைச் செய்யவைக்கிறது. ஆம் று மற்றும் டு குற்றியலுகரங்கள் (ஆறு, நாடு, வயிறு, தவிடு) வேற்றுமை உருபு ஏற்கும்போது பெரும்பாலும் இரட்டிக்கும். வயிற்று + பசி = வயிற்றுப்பசி, சோறு + பானை = சோற்றுப்பானை, நாடு + பாடல் = நாட்டுப்பாடல், மலடு + பெண் = மலட்டுப்பெண். மஞ்சளாறு, பாலாறு, பெரியாறு, சுருளியாறு என்பன குற்றியலுகரங்களாதலால் இறுதி 'உ' நிறைவாக ஒலிப்பதில்லை. அதனால் நம் ஆங்கில நாளேடுகள் Manjalar, Palar (மஞ்சளார், பாலார்) என்றே. ஆங்கில மரபிற்கு ஏற்ப எழுதிவிடுகின்றன. அதைப் பார்த்து மொழிபெயர்க்க வேண்டிய செய்திகளில் தமிழ்த்தினசரிகளும் மஞ்சளார் அணை, பெரியார் நீர்ப் பாசனத் திட்டம், சுருளியார்ப்பாலம் என்று மிகவும் கௌரவப்படுத்திப் போடுகின்றன. திருவையாற்றில் தியாகய்யருக்கு விழாவே தவிர, திருவையார் என்று ஊருக்குப் போய் மரியாதைப் பன்மை சேர்க்கவேண்டாமே! 'பெரியார் நீர்ப் பாசனக் கால்வாய்' என்றே தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி நிலைபெறச் செய்துவிட்டால் ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு வரும் வரலாற்றாராய்ச்சியாளர் 'இது பெரியார் பெயரால் செய்யப்பட்ட பணி' என்று முடிவு கட்டிவிடுதலும் கூடும். பெரியாற்றுப் பாசனம், மஞ்சளாற்றுப் பாலம் என்றுதான் போடவேண்டும் அல்லது பெரியாறு பாசனம், மஞ்சளாறு பாலம் என்றாவது சந்தி கூட்டாது போடலாம். ஆற்றங்கரையை, ஆறுகரை என்றாலும், நாட்டுத் தலைவரை, நாடு தலைவர் என்றாலும் ஆட்டுக்குட்டியை ஆடுகுட்டி என்றாலும் பொருள் வேறுபடுகிறதல்லவா?

வாரியப்பெயர், குழுமப் பெயர்களில் 'தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்கள் என்று போடுவதில் தவறில்லை.' 'தமிழ்நாட்டு' என்றே வந்தாக வேண்டுமென்பதில்லை, 'காடுகிழாள்' நாடு கிழவோன்' என இரட்டிக்காமல் முன்னரும் வழங்கியுள்ளன. தவற்றுக்கு, தவறுக்கு, தவற்றை, தவறை எனப்



பொருளுணர்வு சிதையாத இடங்களில் இருமாதிரியாகவும் வழங்கி வருகின்றனர். அவை போலப் பெயர்சுட்டும் போது ஒற்றுமிக வேண்டுமென்பதில்லை.

## அடையாறு - அடையார்

அடையாறு என்பதை ஆங்கிலப்படுத்தும்போது 'அடையார்' என்று ஆக்குவர். மீண்டும் அந்த ஆங்கிலத்தை (Adaiyar) தமிழில் அவ்வாறே எழுதும் பழக்கம் வந்துவிட்டது. இதுபோலவே பெரியாறு, பெரியார் ஆகிப் பெருமை பெறுகிறது. கடலுடன் சென்றடையும் ஆற்றினை அடையாறு எனலே தக்கது. பிரஞ்சுச் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுவதுபோல, அடையார் என உச்சரித்தாலும் எழுதும்போது ஆங்கிலத்திலும் Adaiyaru என்றே எழுத வேண்டும் என அரசே இதை மாற்றி அறிவிப்பது நல்லது.

## தமிழக அரசும் தமிழ்நாட்டரசும்

'தமிழ்நாடு அரசு' என்பதா? 'தமிழ் நாட்டரசு' என்பதா?

'தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்' 'தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்' என்றெல்லாம் பத்திரிகைகளில் அரசு விளம்பரம் காண்கிறோம். பெயராகக் குறியீடு செய்யும்போது, 'தமிழ்நாடு அரசு' என ஆள்வதில் குற்றம் இல்லை. 'தமிழ்நாட்டரசிற்குச் சில யோசனைகள்,' "தமிழ்நாட்டுத் தொழில் வளர்ச்சியில் தேக்கம்" என்பது போலத் தொடராக ஆளும்போதுதான் கண்டிப்பாக ஒற்று இரட்டித்தாக வேண்டும். நாடு கிழவோன், காடு கிழான், காடகம் என ஒற்று இரட்டிக்காமல் முன்பு வந்துள்ளமையை இலக்கண உரையாசிரியர்கள் காட்டியுள்ளனர் (நன்.183).

தொல்காப்பியர் "நற்பெயர் எல்லை அகத்தவர்" (1336) என்பார். "வையக வரைப்பில் தமிழகம் கேட்ப" (168) என்பது புறநானூறு. மேலும் பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற பெருநூல்களிலும் "தமிழகம்" இடம்பெறுகிறது. தமிழ்நாடு முதல்வரா? தமிழ்நாட்டு முதல்வரா? என ஆராயும் நேரத்திற்குள் "தமிழக முதல்வர்" என்று எளிதில் கூறிவிடலாம்தானே?

Scanned with CamScanner

## நினைவு கூர்தல் நல்லது; நினைவு கூற வேண்டியதில்லை

'கூர்தல்' என்ற உரிச்சொல்லுக்கு 'உள்ளது சிறத்தல்' என்பது தொல்காப்பியம் குறிப்பிடும் பொருள். மறந்து போனதைச் சிறிது சிறிதாக நினைவுக்குக் கொண்டு வருவதைக் 'கூர்தல்' என்ற சொல்லால் குறிப்பிட்டார்கள். படர்கூர் மாலை, துயர்கூர் வாடை என்று சங்கப்பாடல்களில் வரும்போதும் இதுபோலவே கொஞ்சம் கொஞ்சமாகக் கூடுவதைக் குறிக்கிறது. இன்று 'நினைவு கூற வேண்டும்' என்று எழுதுவது, பழைய 'கூர்தல்' என்ற சொல்லை நினைவுகூராததால் வந்த வினை. இனியேனும் முன்னைய இலக்கிய வழக்குகளும் - அக்காலப் பேச்சு வழக்குகளும் - இன்றும் நம் நடைமுறையில் இருப்பதால், அத்தகைய முக்கியமானவற்றை மறவாமல் நினைவு கூர்வோமாக!

## தடைபடாமல் தமிழ் வளர...

தமிழ் தடைபடாமல் வளர வேண்டுமேல், தமிழை வழங்கி - பலமுறை பயன்படுத்தி நடைமுறையில் நீண்ட காலம் பழகிக்கொள்ள வேண்டும். புழக்கத்திலிருக்கும் பொருள் பழுதுபடாது; மூலையில் போட்ட இரும்பும் துருப்பிடித்து விடும். சிலர் 'தடைப்பட்டது' என்றே ஒற்றுமிகுத்து, எழுதுகிறார்கள். அங்கு என்னவோ தடைபடுவது, ஓரினச் சொற்களையும் தொடர்பினைச் சொற்களையும் சொல்லிப் பார்க்கும்போது தெளிவுபடும்.

(கல்) உடைபடுதல், (தயிர்) கடைபடுதல், (இசை) தடைபடுதல் என்னும்போது 'படு' என்பது துணை வினையாகும். அணைக்கட்டு உடைபடும்; உடைப்படாது. இது போலவே எடுபடு, விடுபடு, உரிபடு என்பனவும் வரும். 'அவள் எடுபட்டவள்' என்பார்கள். நிலையில் திரிந்தவள், பிறருக்குக் கைக்கூலி ஆனவள் என்று பொருள். எழுதும் போது இடச்சுருக்கம், காலச்சுருக்கம் கருதி சில விடுபடலாம். பலாத்தோல் எளிதில் உரிபடாது.



'கடைப்பட்ட நாயேனை' என 'நாயன்மார் உருகும் போது' அது கடைபடுதலன்று. தலை, இடை, கடை என்று பெயரடியாகப் பிறக்கும் எச்சங்கள் தலைப்பட்ட, இடைப்பட்ட, கடைப்பட்ட என்றாகும். தலைக்காவிரி, இடைக்காடு, கடைக்கோடு காண்க. கடைப்பட்ட காலம் வேறு; கடைபட்ட தயிர் வேறு. வினையுடன் சேரும் துணைவினையாதலின் தடைபடுதலில் 'ப்' மிகவில்லை.

## தடைபடுதலும் தடைப்படுத்தலும்

வளர்ச்சி தடைபடுகிறது; முன்னேற்றம் தடைப்படுத்த ப்படுகிறது இங்ஙனம் செயப்பாட்டு வினையில் 'ப்' மிகுகிறது. அவள் போக்கைத் தடைப்படுத்தாதீர்கள்; அவள் படிப்பைத் தடைப்படுத்தாதீர்கள். எதையும் நிலைப்படுத்துவதுபோல், விலைப்படுத்துவதுபோல் இதையும் சரிப்படுத்த வேண்டியுளது.

அணைதல் அணைத்தல்; இணைதல் இணைத்தல் போல தடைபடுதல் பிறவினையில் தடைப்படுத்துதல் ஆகிறது. நாட்டு முன்னேற்றம் தடைபடாமல் காப்போம்; யாரும் தடைப்படுத்த வந்தால் அதைக் கடந்து முன்னேறுவோம்.

- - -

Scanned with CamScanner